# சிறிலங்கன் எயார்லையின்ஸ்

# ஆண்டறிக்கை

*2 0 1 2 - 2 0 1 3*

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| கம்பனித் தகவல்கள் | 01 |
| தொலைநோக்கு மற்றும் பணி | 02 |
| முக்கிய விடயங்கள் | 03 |
| தலைவரின் பொதுநோக்கு | 04 |
| முதன்மை நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு | 08 |
| பணிப்பாளர்களின் விபரக் குறிப்பு | 14 |
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 15 |
| பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள் | 19 |
| சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 20 |
| சுதந்திரமான கணக்காய்வாளர் அறிக்கை | 22 |
| நிதியியல் நிலைமைக்கூற்று | 23 |
| வருமானக் கூற்று | 24 |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்று | 25 |
| பங்குரிமை மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 26 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 27 |
| நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 28 |
| பத்தாண்டு மீளாய்வு | 68 |
| கலைச் சொல்லாக்கம் | 70 |
| கூட்டம் பற்றிய அறிவித்தல் | 71 |
| பதிலாள் | 72 |
| பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | 73 |

## கம்பனித் தகவல்கள்

### சட்ட ரீதியான வடிவம்
பகிரங்க வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி

### கம்பனியின் பதிவு இலக்கம்
**PB 67**

### பணிப்பாளர்கள்

நிஷாந்த விக்கிரமசிங்க - தலைவர்

நிஹால் ஜயமான ச.ச.

கபில சந்திரசேன - பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்

சமீந்திர ராஜபக்ஷ

மணிலால் பர்னாந்து

லக்ஷ்மி சங்கக்கார

சனத் உக்வத்த

சுசந்த ரட்ணாயக்க

### கம்பனிச் செயலாளர்

மில்ட்ரெட் பீரிஸ்

### பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
எயார்லையின்ஸ் நிலையம்
பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம்
கட்டுநாயக்கா
இலங்கை

### கணக்காய்வாளர்கள்
ஏர்னஸ்ட் அன்ட் யங்
பட்டயக் கணக்காளர்கள்
201 டிசேரம் பிளேஸ்
கொழும்பு 10

## எமது தொலைநோக்கு

ஆசியாவில் மிக முன்னுரிமை வாய்ந்த வான் நிறுவனமாக இருப்பது

## எமது பணி

நாங்கள் வான் போக்குவரத்து தொழிலில் இருந்து வருகிறோம். நாங்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு நம்பகமானதும் மகிழ்ச்சி நிறைந்ததுமான பயண அனுபவத்தினை வழங்குகின்றோம். நாங்கள் எமது தொழில் பங்காளர்களுக்கு பல்வேறுபட்ட புதுமையான தொழில் நிபுணத்துவம் வாய்ந்த, பரஸ்பரம் இலாபமளிக்கும் பணிகளை வழங்கி வருகிறோம். நாங்கள் பங்குடமையாளர்களின் இலங்கை பற்றிய இலாபமளிக்கும் சந்தைப்படுத்தல் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதுடன் சமூகத்தின் நலனோம்புகைகளுக்கு பங்களிக்கிறோம். நாங்கள் தகுதியும், முன்கூட்டிய செயற்பாடும் ஊக்கமும் கொண்ட குழுவாக இயங்குகிறோம். எங்களின் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டு அதற்கு விருதும் வழங்கப்பட்டிருக்கிறது.

# முக்கிய விடயங்கள்

| நிதியியல் | | குழுமம் 2013 | குழுமம் 2012 | கம்பனி 2013 | கம்பனி 2012 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | ரூ. மில்லியன் | 121,407.66 | 94,638.60 | 119,570.90 | 92,867.93 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூ. மில்லியன் | 143,961.21 | 111,647.29 | 143,972.27 | 111,775.88 |
| வரிக்கு முன்னைய இழப்பு | ரூ. மில்லியன் | (22,503.54) | (17,197.43) | (21,749.75) | (19,774.74) |
| ஆண்டிற்கான தேறிய இழப்பு | ரூ. மில்லியன் | (22,518.78) | (17,208.38) | (21,749.75) | (19,778.03) |
| மொத்தச் சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 92,388.40 | 68,998.50 | 89,447.13 | 65,807.97 |
| பங்குடமையாளர் நிதியம் | ரூ. மில்லியன் | (7,160.42) | 3,050.08 | (11,695.70) | (2,248.39) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் இயலளவு | கி.இ.கி.மீ மில்லியன் | | | 15,944.31 | 14,248.94 |
| மொத்த இயலளவு | கி.தொ.கி.மீ மில்லியன் | | | 2,186.96 | 1,978.33 |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | வ.த.ப.கி.மீ மில்லியன் | | | 12,968.74 | 11,270.23 |
| மொத்தமாக கொண்டு செல்லப்பட்ட பாரம் | வ.த.தொ.கி.மீ மில்லியன் | | | 1,513.70 | 1,338.30 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 81.34 | 79.10 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 69.22 | 67.65 |
| இலாப நட்டமற்ற சுமைக் காரணி | % | | | 90.52 | 88.84 |
| **அலுவலர் உற்பத்தித்திறன்** | | | | | |
| அலுவலர் தொகை | எண்ணிக்கை | 7,241 | 6,367 | 6,359 | 5,594 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் | ரூ. மில்லியன் | 16.77 | 14.86 | 18.80 | 16.60 |
| ஊழியர் ஒருவருக்கான கூட்டப்பட்ட பெறுமதி | ரூ. மில்லியன் | (1.12) | (0.65) | (1.14) | (1.32) |
| **2012 மாச்சில் உள்ளவாறு விமானங்களின் தொகுதி** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | | | 8 | 7 |
| A330-200 | எண்ணிக்கை | | | 7 | 7 |
| A340-300 | எண்ணிக்கை | | | 6 | 6 |
| ரேபோ ஒட்டர் | எண்ணிக்கை | | | 1 | 2 |
| ஆண்டின் இறுதியில் பணியிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 22 | 22 |

## தலைவரின் பொதுநோக்கு

சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் 35ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் கம்பனியின் 2012/13ஆம் நிதியாண்டிற்குரிய ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் மீண்டுமொரு முறை தங்களுக்கு சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகளாவிய விமானப் போக்குவரத்து கைத்தொழிலின் போக்கு மற்றும் உள்நாட்டு பொருளாதார மீளெழுச்சி என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஆய்விற்குரிய ஆண்டின் தொனிப் பொருளாக "வலுப்படுத்தும் ஆண்டு" எனப் பெயரிடப்பட்டுள்ளது. கம்பனியின் நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எமது மூலவளங்களை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதன் மூலம் எமது நிலையினைப் பலப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என நாம் எண்ணுகின்றோம். இது இலங்கையர் என்ற எமது குழுவின் பாரிய பலத்தையும் சொத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

## இலங்கையின் பொருளாதாரம் - உறுதியான பிடியில்

உலகின் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் பல வீழ்ச்சியைக் கொண்டிருந்த போதும் மேம்பட்ட வியாபாரம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை என்பனவற்றினால் உந்தப்பட்டு இலங்கையின் பொருளாதாரம் 2012இல் 6.4 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதமொன்றில் வளர்ச்சி கண்டமைக்கு, முற்போந்த இரண்டு ஆண்டுகளில் நாடு அனுபவித்த பொருளாதார வளர்ச்சியின் மீளெழுச்சி காரணமாக அமைந்தது. மேலும், பல்வேறு உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சவால்களுக்கு மத்தியிலும் பணவீக்கம் தொடர்ந்தும் நான்காவதாண்டாக ஒற்றை இலக்க மட்டத்தில் பேணப்பட்டது. முன்னைய இரு ஆண்டிலும் தொடர்ச்சியாகக் காணப்பட்ட 8 சதவீதம் கொண்ட வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்த மேம்பட்ட வியாபாரம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையும் உயர்ந்த கொடுகடன் மற்றும் நாணய விரிவாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் உயர்ந்த இறக்குமதிக் கேள்வியின் தூண்டுதலினால் வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடையச் செய்தது.

உலகளாவிய கேள்வியில் மெதுவான மீட்சி காணப்பட்டமைக்கிடையிலும் பொருளாதாரம் வளர்ச்சி கண்டதுடன், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக பல்முனை கொண்ட கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அனைத்து முக்கிய துறைகளும் சாதகமான முறையில் பங்களித்தன. வெளிநாட்டு வர்த்தகத்தில் காணப்பட்ட மெதுவான தன்மை, போக்குவரத்து துணைத் துறையில் காணப்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக பணிகள் துறையின் வளர்ச்சி மிதமடைந்து காணப்பட்டது.

மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாதகமான பேரண்டப் பொருளாதார அடிப்படைகளிலிருந்து கிடைத்த நன்மை காரணமாக இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உட்கட்டமைப்பில் அரசாங்கம் மேற்கொண்ட முதலீடுகளின் நன்மைகளை அடைந்து கொள்வதற்கு தனியார் துறையினை ஊக்குவிப்பதும் உற்பத்தியாக்க இயலளவை விரிவாக்குவதற்கு அவர்களுக்கு வசதியளிப்பதும் எதிர்பார்க்கப்பட்ட நடுத்தர கால வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இன்றியமையாதனவாக இருக்கும்.

## இலங்கைச் சுற்றுலா - உத்வேகத்தினை ஒன்றுதிரட்டுதல்

நாட்டின் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியில் அதன் உத்வேகத்தினைத் தொடர்ந்தும் காட்டியவிடத்து இலங்கை அதன் இலக்கினை விஞ்சி ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததன் மூலம் சாதனை மட்டமொன்றினைப் பதிவு செய்தது. சிறிலங்கன் எயார்லையின்ஸ் சீனாவிலிருந்து மில்லியனுக்கும் கூடுதலான பயணிகளை இலங்கைக்கு கொண்டு வரும் வாய்ப்பினைப் பெற்றது. இவ்வாண்டுப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை முன்னைய ஆண்டிற்கெதிராக 17.5% இனால் அதிகரித்ததுடன் 2012 திசெம்பரில் நாட்டின் சுற்றுலா வரலாற்றிலேயே முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. குறிப்பாக ஐரோப்பிய சந்தைகளில் ஏற்பட்ட பொருளாதார மீட்சியின் காரணமாக சுற்றுலாக் கைத்தொழிலில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்புடன் இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் மிகச் சிறந்த சாதகமான தோற்றப்பாடொன்றினை அடையும் என்பதுடன் இத்தொழில் துறையும் அதிகாரிகளும் பொருத்தமான சந்தைப்படுத்தல்களுக்கும் மற்றைய நாடுகளில் சுற்றுலாவினை மேம்படுத்த வழங்கிவரும் முன்னுரிமைகளைக் கருத்திற் கொள்கையில் 2013 இறுதியில் இலக்கிடப்பட்ட 1.25 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அடைவது சாத்தியமானதொரு இலக்காகவே நம்பப்படுகிறது. இலங்கைச் சுற்றுலா தற்பொழுது கம்பனித் துறை மற்றும் அரச துறைகளுடன் சேர்ந்து அதன் சந்தைப்படுத்தல் உபாயங்களைத் திட்டமிட்டு வருவதுடன் ஏற்கனவேயுள்ள சந்தைகளையும் பேணி வருகின்ற வேளையில் புதிய சந்தைகளையும் எதிர்பார்க்கிறது. சுற்றுலாவினை ஊக்குவிப்பதற்கான புதிய வியாபார மாதிரியொன்று தற்பொழுது உருவாக்கப்பட்டு வருகின்றவிடத்து பிராந்திய சந்தைகளும் புதிய சந்தைகளும் மெதுவான மாதங்களில் காணப்படும் வீழ்ச்சிகளை நிரப்புவதில் முக்கிய பங்கினை வகிக்க முடியும்.

## முக்கிய நிகழ்வுகளைக் கொண்டதொரு ஆண்டு

கடந்த ஆண்டு இலங்கையின் வான் போக்குவரத்து தொழில் துறையில் இரண்டு முக்கிய சம்பவங்களைக் கொண்டதொரு ஆண்டாக விளங்குகிறது. இவ்வாண்டு இலங்கையின் விமானப் போக்குவரத்தில் நூற்றாண்டினைக் குறிக்குமொரு ஆண்டாகவும் தீவின் தென்பகுதியில் இரண்டாவது சர்வதேச விமான நிலையமொன்று திறந்து வைக்கப்பட்ட ஆண்டாகவும் விளங்குகின்றது.

### *இலங்கையின் விமானப் போக்குவரத்தின் 100ஆவது ஆண்டினை கொண்டாடுதல்*

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் விமானப் போக்குவரத்தில் நூற்றாண்டினை நினைவுறுத்திக் கொள்வது நாடு உண்மையிலேயே பெருமைப்படத்தக்கதொரு விடயமாக விளங்குவதுடன் நாட்டின் விமானப் போக்குவரத்து தொழிலின் முதுகெலும்பாக விளங்கும் உங்கள் கம்பனி இடம்பெற்ற கொண்டாட்டங்களில் தீவிரமான பங்காளராக பங்கேற்பதற்கான சிறப்புரிமையினையும் கொண்டிருந்தது.

*மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது*

தேசிய விமான நிறுவனத்திற்கான உயர்ந்த முன்னுரிமையுடன் கூடிய விமானப் போக்குவரத்தில் மற்றொரு மைல்கல் யாதெனில் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் நிறுவப்பட்டமையாகும். மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் அதிலிருந்தும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அனைத்து விமான நிறுவனங்களுக்கும் பணி வழங்குவதற்காக சிறிலங்கன் விமான நிலையத்திற்குள்ளேயே அதன் பேணல், ஓடு பாதை தொடர்பான கையாளல்கள், சரக்கு மற்றும் உணவு வழங்கல் வசதிகள் என்பனவற்றை ஏற்கனவே வழங்கி வருகின்றது.

**முன்னேற்றங்கண்ட ஆண்டு**

*நீண்ட மற்றும் குறுங்கால விமானங்களின் தொகுதிக்குத் திட்டமிடல்*

குறுங்காலத்தில், நாங்கள் தற்பொழுது ஏற்கனவேயுள்ள விமானங்களின் தொகுதியினை தரமுயர்த்தி நவீனமயப்படுத்தி வருகின்றோம். நடுத்தர காலத்தில் நாங்கள் பல ஆண்டுகளாக எமக்குப் பணி புரிந்த அனைத்து A340 எயார் பஸ்களையும் அகற்றுவதற்கு எண்ணியுள்ளோம். A340 விமானங்களை அகற்றுவதற்காக நாங்கள் ஆறு புதிய A330 - 300 எயார் பஸ்களில் முதலீடு செய்யவுள்ளதுடன் இறுதியாக அடுத்த பரம்பரைக்குரிய புதிய பஸ்களான A350 - 900 பஸ்களின் மூலம் A330 - 200 எயார் பஸ்களை அகற்றவும் எண்ணியுள்ளோம். நீண்ட கால மீள் விமானங்களை தொகுதிப்படுத்தல் திட்டம் யாதெனில், எரிபொருள் சிக்கனமானதும் நவீனமான அகன்ற உலமைப்பினையும் ஒடுங்கிய உடலமைப்பினையும் கொண்ட அடுத்த பரம்பரைக்குரிய விமானங்களை வைத்திருப்பதேயாகும். இது எரிபொருள் செலவினையும் பேணல் செலவினையும் குறைப்பதன் மூலமாக எயார்லையின்சின் நேரடிச் செலவு அமைப்பினை கணிசமானளவிற்கு மாற்றியமைக்கும். நவீன வசதிகள் பொருத்தப்பட்ட, அதிநவீனத்துவம் வாய்ந்த இருக்கை வசதிகள் மற்றும் உள்ளகப் பறப்புக்களில் செய்யப்பட்ட களியாட்ட முறைமைகள் என்பனவற்றுடன் கூடிய புதிய விமானங்கள் போட்டியிடக்கூடிய அல்லது அதனையும் விஞ்சிய முறையில் வசதிகளை வழங்குவதுடன் வருமான உருவாக்க வாய்ப்புக்களிலும் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும்.

**நாட்டின் முன்னேற்றத்திற்கு தூண்டுதலளித்தல்**

தேசிய போக்குவரத்து நிறுவனம் என்ற முறையில், உங்கள் கம்பனி அநேக முன்னெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கியாக தொடர்ந்துமிருக்கும்.

- இலங்கையினை விமானப் போக்குவரத்து மையமாக மாற்றியமைக்கின்ற அரசாங்கத்தின் தொலைநோக்குடன் இசைந்து செல்லும் விதத்தில், வருமான வாய்ப்புக்களை உயர்த்தும் விதத்தில் எமது பேணல், திருத்துதல் மற்றும் பழுது பார்த்தல் வேலைகளை விரிவாக்கியுள்ளோம்.

- 2013/14இல் இரண்டாவது பூரணமான பறப்பு 330 பறப்பு மாதிரி உருவகப்படுத்தல் நிலையமொன்றிற்காக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையானது ஏற்கனவேயுள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு பரந்த ரீதியிலான பணிகளை வழங்க எம்மை இயலச் செய்யும்.

- விமானத் தரைப் பணிகள் மற்றும் சரக்கு கையாளல் சாதனங்களில் செய்யப்படும் மேலதிக முதலீடுகள், மூன்றாந்தரப்புப் பணிகளின் ஏக வழங்குநராக கம்பனி விளங்குகின்ற கொழும்பு மற்றும் மத்தளவிலுள்ள தரைப் பணிகளின் கையாளலின் வினைத்திறனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- பல முன்னணி உள்நாட்டு சுற்றுலா விடுதிகள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய சுற்றுலாவுடன் தொடர்பான நிறுவனங்களின் பங்காளரான கம்பனியின் பொழுதுபோக்குப் பிரிவான சிறிலங்கன் கொலிடேஸ் நாட்டிற்கு வருகைதரும் பயணிகளுக்கு பரந்தளவிலான விடுமுறைத் தேர்வுகளை வழங்குகிறது.

**சாதனைகள்**

எமது நீண்ட கால வெற்றியின் பாரம்பரியம் பிரதிபலிக்கப்படுகின்ற இன்னொரு வெற்றி ஆண்டாக இது விளங்குகிறது.

- பிராந்தியத்தின் மிகச் சிறந்த நிறுவனம் - ஆசியா மற்றும் அவுத்திரலாசியா (விமான நிறுவனப் பயணிகள் அனுபவ அமைப்பு - நியூயோர்க் - 2012) அபெக்ஸ் விருது

- சிறிலங்கன் எயார்லையின்சிற்கு 2012ஆம் ஆண்டிற்கான தேசிய விடுல்கா வலுச் சிக்கன விருது

- உலகிலுள்ள மிகச் சிறந்த முதல் பத்து பயிற்சி நிறுவனங்களிலொன்றாக அயட்டா முதன்மையாளர் வட்டத்திற்குள் நுழைந்தமை.

**வளர்ச்சிக்கான ஆண்டு - 2012/13 இற்கான நிதியியல் பொதுநோக்கு**

- 2012/13ஆம் இறையாண்டிற்கான கம்பனியின் வருமானம் 2011/12இன் ஆண்டிற்கான ரூ.92,867.93 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.119,570.90 மில்லியனாக விளங்கி 28.75 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது.

- தொழிற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூ.111,775.88 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.143,972.27 மில்லியனாக விளங்கி 28.80 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது.

- பயணிகள் இயலளவு முன்னைய ஆண்டின் 14,248.94 மில்லியனிலிருந்து 15,944.31 மில்லியன் கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர்களுக்கு அதிகரித்தது.

- வருமானப் பணிகள் கிலோமீற்றர் முன்னைய ஆண்டின் 11,270.23 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12,968.74 வருமானப் பயணிகள் கிலோமீற்றராகக் காணப்பட்டது.

- 2012/13 காலப்பகுதியில் பயணிகள் சுமைக் காரணி முன்னைய ஆண்டின் 79.10% இலிருந்து 81.34% இற்கு அதிகரித்தது.

எவ்வாறெனினும் கம்பனியின் தேறிய இழப்பு முன்னைய ஆண்டின் ரூ.19,774.74 மில்லியனிலிருந்து 2012/2013 இல் ரூ.21,749.75 மில்லியனுக்கு உயர்வடைந்தமைக்கு பின்வரும் காரணிகளே காரணங்களாகும்:

- உயர்ந்த எரிபொருள் செலவு

- ஐரோப்பாவில் காணப்பட்ட மந்தநிலைமை மற்றும் மற்றைய விமான நிறுவனங்களின் போட்டி என்பன காரணமாக வருமானம் திருப்திகரமான மட்டத்திலிருந்தும் குறைவாக விளங்கியமை

- மேலதிக இயலளவுகள் தொடர்பான கொள்வனவுகள் மற்றும் விமானத்தின் உள்ளக பகுதிகளைத் தரமுயர்த்தும் நிகழ்ச்சித்திட்டம் உட்பட ஆதரவுப் பணிகளினை உயர்த்துவதற்காக செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க முதலீடு. இவற்றின் மொத்த நன்மைகள் இனிவரும் ஆண்டுகளிலேயே அடையப்படும்

### சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்

இன்னொரு வெற்றிகரமான ஆண்டினைப் பதிவு செய்த, சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட், சிறிலங்கன் எயார்லையின்சின் கீழ்மட்டத்திற்கு உதவிக் கரமாக விளங்கியது. மேலும், விருது பெற்ற விமான நிறுவனமான எமிரேற்ஸ் எயார்லையின்சின் “எமிரேட்ஸ் லோன்ஜ்” இற்கு உணவுப் பரிமாறல் வசதிகளை ஆரம்பித்தமையின் மூலம் இது அதன் நடவடிக்கைகளை மேலும் பன்முகப்படுத்திக் கொண்டது. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தொழிற்படுகின்ற பல வாடிக்கையாளர் விமான நிறுவனங்களுக்கு உணவு பரிமாறல் வசதிகளை வழங்குவதற்காக ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அடுத்த நிதியாண்டுப் பகுதியில் மேலும் பல வாடிக்கையாளர்களைக் கவர முடியும் என சிறிலங்கன் கேட்டறிங் நம்பிக்கை கொண்டுள்ளது. மேலும், மத்தளவில் நிருமாணிக்கப்பட்டு வரும் புதிய பறப்பு சமயலறை தொடர்பில் மேலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்வரும் கௌரவிம்மிக்க விருதுகளை வெற்றி கொண்டதன் மூலம் சிறிலங்கன் கேட்டறிங் நேர்த்தி பொருந்திய குழுமத்தின் வளர்ந்துவரும் கீர்த்தியை மேலும் அதிகரித்திருக்கிறது:

- “ஆத்மார்த்தங்கள்” வகையின் கீழ் “சுகமளிக்கும் உணவு - சிறந்த உடல் நலத்திற்கான இயற்கை வழி” இற்காக சர்வதேச பயண உணவு பரிமாறல் அமைப்பிலிருந்து மேர்கூரி விருது

- தேசிய விடுல்கா வலுச்சிக்கன விருது 2012

- தரமான முகாமைத்துவ முறைமை, உணவு பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ முறைமை ஆகியவற்றிற்காக மூன்று சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட ஒரு சில விமான நிறுவன உணவு பரிமாறுபவர்களிடையே சிறிலங்கன் கேட்டறிங்கும் ஒன்றாகும். ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் சிறிலங்கன் கேட்டறிங் இவ்வனைத்துத் துறைகளிலும் அதன் தரத்தினை உயர்த்துவதற்கான ஆய்வினை நிறைவு செய்தது.

### எதிர்காலம் - பறப்பதற்கு தயாராகிவிட்டது

சிறிலங்கன் பயணிகளின் வருவாயினை மேம்படுத்துதல், துணை வருமானங்களை உருவாக்குதல் மற்றும் நன்மைகளை ஒன்றிணைத்தல் என்பன மூலம் எயார்லையின்சின் வருமானத்தினை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு முழுமையாக மாற்றப்பட்ட வியாபாரத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற வேளையில், அதன் வலையமைப்பினை உச்சப்படுத்தி போட்டி ரீதியிலான செலவுத் தளத்தினைப் பேணி வருகின்றது.

இலங்கை அரசாங்கம் எயார்லையின்சின் ஐந்தொகையினை வலுப்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டினை தொடர்ந்தும் காட்டியதுடன் 2016 வரையுள்ள இனிவரும் ஆண்டுகளில் தொடர்ச்சியான மூலதன உள்ளீடுகளின் மூலம் அதன் விமானத் தொகுதிகளைப் புதுப்பிக்கவும் ஆதரவளித்து வருகின்றது.

எயார்லையின்ஸ் பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் பயணிகள் வருமானத்தினை உச்சப்படுத்த திட்டமிடுகிறது:

- இலங்கைக்கான இடைநிறுத்தமற்ற நேரடிப் பயணத்தின் போட்டி ரீதியான அநுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

- தரமுயர்த்தப்பட்ட வியாபார வகுப்புச் சாதனங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் கட்டண வருவாய்களை அதிகரித்தல்.

- ஏற்றுக்கொள்ளத்தக்க விளைவுகளில் உயர் சுமைக் காரணிகளைப் பேணுவதற்காக வருமான முகாமைத்துவ நடைமுறைகளையும் முறைமைகளையும் உயர்த்துதல்.

- குறைந்த செலவினைக் கொண்ட இணையத்தள இருக்கை ஒதுக்கு வழிப்படுத்தல்களினூடாக பயணிகள் போக்குவரத்தில் பெரும் விகிதத்தினைக் கவர்ந்து கொள்ளுதல்.

பின்வருவனவற்றிலிருந்தும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள சிறிலங்கன் எதிர்பார்க்கிறது:

- இலங்கைப் பயணத்திற்கான அதிகரித்த கேள்வி
- பிராந்தியத்தில் அதிகரித்த கட்டண போக்குவரத்து
- நாட்டிலும் அதன் முக்கிய சேரிடங்களிலும் காணப்படும் வலுவான பொருளாதார வளர்ச்சி
- முக்கியமாக வளர்ந்துவரும் குடித்தொகை மற்றும் பொருளாதார நிலையங்களுடனான வலையமைப்பின் இணைப்பு
- கொழும்பு விமான நிலையத்தினை விரிவாக்குவதில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மற்றும் சர்வதேச முதலீடுகள் மற்றும் நாட்டின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டமை

வண்வோர்ள்ட் எலையன்சில் கிடைத்த உறுப்புரிமையானது சிறந்த உலகளாவிய தொடர்புபடுத்தல்களை வழங்குவதற்கான அதன் எலையன் பங்காளர்களுடன் இணைந்த அட்டவணையின் மூலம் உயர்ந்த தொடர்புபட்ட சந்தைப் பங்குகளை கம்பனி கைப்பற்றிக் கொள்வதனை இயலச் செய்தது.

**முடிவுரை**

இம்முடிவுரையில், இலங்கையின் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் துறைகளின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேதகு சனாதிபதிக்கு அவர் வழங்கிய கடப்பாடுகளுக்காக எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்குத் தொடர்ந்தும் வழங்கிவரும் ஆதரவிற்காக மாண்புமிகு பொருளாதார அமைச்சருக்கும் மாண்புமிகு விமானப் போக்குவரத்து அமைச்சருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

சபை உறுப்பினர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர், முகாமைத்துவக் குழு மற்றும் கம்பனியின் அலுவலர்களுக்கு அவர்களது சோர்வற்ற கடின உழைப்பிற்காகவும் அர்ப்பணிப்பிற்காகவும், எமது முயற்சிகளுக்கு அவர்கள் அளித்த ஆதரவிற்காகவும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை அரசாங்கம் உட்பட எமது அனைத்துப் பங்குடமையாளர்களுக்கும் உங்கள் கம்பனியான சிறிலங்கன் தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு அவர்கள் தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவிற்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்

**நிஷாந்த விக்கிரமசிங்க**
தலைவர்
2013 யூலை 30

### முதன்மை நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

நிதியியல் ஆண்டு 2012/13 இற்கான தொழிற்பாடுகளின் மீளாய்வினையும் உங்கள் கம்பனியின் எதிர்காலத்திற்கான செயற்பாட்டின் எயார்லையின்சின் திட்டத்தையும் தங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு எனக்குக் கிடைத்த இன்னுமொரு வாய்ப்பு இதுவாகும்.

விமானப் போக்குவரத்து தனிச் சிறப்பு வாய்ந்ததொரு தொழில் துறையாகும். இது, நாளாந்தம் 24,000 வர்த்தக விமானங்கள் வானம் முழுவதும் பறக்கின்ற 10 மில்லியனுக்கு மேற்பட்ட பயணிகளைக் கொண்டு செல்வதற்காக 80,000 பறப்புக்களைத் தொழிற்படுத்துகின்ற மிக உயர்ந்த சுமைக் காரணிகளைக் கொண்ட உலகின் போக்குவரத்து ஊடகமாக விளங்குகிறது. வருடாந்தம் ஐ.அ.டொலர் 539 பில்லியன்களை உள்ளீடு செய்கின்ற இத்துறை உயர்ந்த பல்முனைத் தாக்கத்தினைக் கொண்ட உலகளாவிய பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பாளராக விளங்குகின்றது. எனினும், தீவிரமான போட்டி மற்றும் உயர்ந்த எரிபொருள் செலவு, அதேபோன்று பங்களிப்புக்களை நேரடியாக அறவிடமுடியாதிருக்கும் பிரதிகூலம், தேறிய இலாபத்தினை பெறமுடியாமல் போகின்றமை ஆகிய காரணங்களினால் விமானப் போக்குவரத்துத் துறைக்குள்ளே, மற்றைய கைத்தொழில்களுடன் ஒப்பிடுகையில் முதலீட்டிலிருந்து கிடைக்கும் நேரடி வருமான நியதிகளில் எயார்லையின்ஸ் மிகக் குறைந்த வருமானத்தினை உருவாக்குமொன்றாகக் காணப்படுகின்றது. விமானப் போக்குவரத்து பெறுமதிச் சங்கிலியில் அதன் அனைத்து பயன்படுத்துநர்களுக்கும் தொடர்ந்தும் பிரமாண்டமான பெறுமதியினை உருவாக்கி வருகின்ற வேளையில் இது இந்த எயார்லையின்சின் பங்குடமையாளர்களுக்கு மிகக் குறைந்த இலாபத்தினையே வழங்கி வருகின்றது.

தேசிய விமான நிறுவனமென்ற முறையில் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். ஆண்டொன்றில் ஐ.அ.டொலர் 1.3 பில்லியன்களை - மொ.உ.உற்பத்தியில் 2.2% இனை நாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதுடன் இப்பங்களிப்பினை மேலும் அதிகரிப்பதற்கான குறிப்பிடத்தக்க உள்ளார்ந்த வளத்தினையும் கொண்டிருக்கின்றோம்.

### மீளாய்விற்குரிய ஆண்டு

கடந்த ஆண்டு, பல வழிகளில் எமக்கு மிக முக்கியமானதொரு ஆண்டாக விளங்குகின்றது. இது வலுப்படுத்தப்பட்டதொரு ஆண்டாகவும் அதேபோன்று முதலீடு மற்றும் நடைமுறைப்படுத்தல் நியதிகளில் புதிய யுகமொன்றின் ஆரம்பமாகவும், முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்ட உங்கள் கம்பனியின் வரலாற்றில் புதிய அத்தியாயமொன்று ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாகவும் விளங்குகின்றது. எங்கள் நாட்டில் பொருளாதாரமும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளும் முன்னேற்றங்கண்டு வருவதனால் எமது தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனமும் தேவையான எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடிய உத்வேகத்துடன் உறுதியான நிலையில் இருத்தல் வேண்டும். விமான நிறுவனங்களின் மீது எப்பொழுதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற உலகளாவிய கைத்தொழிலின் கீழ் நோக்கிய போக்கின் சவால்களுக்கு உண்மையில் உட்பட்ட இன்னொரு ஆண்டாக இது விளங்குகிறது. எனினும், நாங்கள் எமது வியாபாரத் திட்டத்தினை நிறைவேற்றக்கூடியவர்களாக இருந்தோம். எமது செயலாற்றத்தினை பின்னடைவுகள் பாதித்த போதும் எமது இலக்கினை நோக்கி நாம் உறுதியாக முன்னேறினோம். விமான எரிபொருள் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக தொழிற்பாட்டுச் செலவுகள் தொடர்ந்தும் மேல் நோக்கி உயர்வடைந்து கடந்த தசாப்த காலத்தில் 261 சதவீதத்தினால் அதிகரித்தன. விமான எரிபொருள் கடந்த ஆண்டின் எமது தொழிற்பாட்டுச் செலவில் 47 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் இப்பிராந்தியத்தில் தொழிற்படுகின்ற மற்றைய விமான நிறுவனங்கள் தொடர்பில் எமது அலகுச் செலவு போட்டித்தன்மையுடையதாகக் காணப்பட்ட போதும் வருமானத்தினை எரிபொருள் செலவின் உயர்விற்கேற்ற விதத்தில் பேண முடியாமல் போயிற்று. 2011 யூலையில் இலங்கை அரசாங்கத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியனின் இரண்டாவது தொகுதி 2013 மாச்சில் பெறப்பட்டமையானது ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் முதலீடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பினை எமக்கு வழங்கியது. முக்கியமானதொரு நடவடிக்கை உங்கள் கம்பனியினை முன்னேற்றகரமான புதிய வளர்ச்சிப் பாதைக்கு நிச்சயமாக எடுத்துச் செல்லும்.

கடந்த காலப்பகுதியில் முதலீட்டில் பற்றாக்குறை காணப்பட்டபோதும், தேசிய விமான நிறுவனமென்ற ரீதியில் மிக அதிகமான விடயங்களை நாம் நிறைவேற்றியுள்ளதுடன் நாட்டிற்கான எமது பங்களிப்பு அளப்பரியதாகவும் காணப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் சில பின்வருமாறு:

- சுமைக் காரணியினை அதிகரிப்பதற்காக தரமுயர்த்தப்பட்ட வியாபார வகுப்புச் சாதனத்தினைக் கட்டம் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. வியாபார வகுப்பு பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 48 சதவீதத்தினால் அதிகரித்தது.

- புதிய முறைமைகளின் அறிமுகம், கட்டண வகுப்புக்கள் மீள ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் தொழில்துறையில் மிகச் சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டமை என்பனவற்றின் மூலம் வருமான முகாமைத்துவ தொழிற்பாடு மேம்பாடடைந்தது. இதன் காரணமாக பயணிகள் வருவாயில் அதிகரிப்பு ஏற்பட்டது.

- சந்தை அபிவிருத்திகளை விளங்கிக் கொள்ளவும், எதிர்வு கூறல்களை மிகத் துல்லியமாக மேற்கொள்வதற்குமாக சிறந்த தரவு மற்றும் கருவிகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- துணை வருவாய்களை அதிகரிப்பதற்காக புதிய பெறுமதிகூட்டப்பட்ட வருவாய் துறைகள் நடைமுறைக்கிடப்பட்டன.

- ஏற்கனவேயுள்ள ஒடுங்கிய உடலமைப்பினைக் கொண்ட எமது விமானங்கள் புதிய மற்றும் எரிபொருள் சிக்கனமான விமானங்களின் மூலம் தொடர்ந்தும் மீள்தொகுதிப்படுத்தப்பட்டு வருகின்றன.

- கடுமையான போட்டி வாய்ந்த சூழலொன்றின் சவால்களைச் சந்திக்கும் பொருட்டு அமடியூஸ் அல்ரீ பயணிகள் பணிகள் முறைமையை அறிமுகப்படுத்துவதன் மூலம் எமது தொழில்நுட்பங்களைத் தரமுயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்பிராந்தியத்தில் இத்தொழில் துறையில் முன்னணித் தொழில்நுட்பங்களை பின்பற்றும் முதலாவது விமான நிறுவனம் இதுவாகும். இது, உண்மையில் எமது தகவல் தொழில்நுட்பச் செயன்முறைகளை நவீனமயப்படுத்தி எமது பணி ஏற்பாடுகளை உயர்த்துகின்ற வேளையில் முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் எம்மை “வாடிக்கையாளரை மையப்படுத்திய” ஒரு விமான

நிறுவனமாக மாறுவதற்கும் இயலச் செய்திருக்கிறது. 2013/14 இலிருந்து, எதிர்வரும் நிதியாண்டில், இவ்வுடன்படிக்கையானது எமது ஊழியர்களுக்கும் பயணிகளுக்கும் மற்றும் பங்குடமையாளர்களுக்கும் மிகவும் குறிப்பிடத்தக்கதாக விளங்கும்.

- 'வண்வேர்ள்ட் குளோபல் எலையன்ஸ்' இல் எமது உறுப்புரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டமையினைத் தொடர்ந்து அடுத்த நிதியாண்டில் எலையன்சில் இணைவதற்கான கட்டாயத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக நாங்கள் கணிசமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

- உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காகவும் நிறை மற்றும் எரிபொருளைச் சேமிப்பதற்காகவும் 'ஐபாட்' இனை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் பறப்புப் பொதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- முக்கியமாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டில் எமது தொழிற்பாட்டு இலாபம் 6 சதவீதப் புள்ளியினால் அதிகரித்துள்ளது.

### வண்வேர்ள்டில் உறுப்புரிமை

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் உலகின் முன்னணி எயார்லையின் எலையன்ஸ் ஆன - வண்வேர்ள்டில் இணைவதற்கு உங்கள் வான் நிறுவனத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் 2014இன் ஆரம்பத்தில் இணைவதற்கும் தற்பொழுது ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விமானப் பயண வியாபாரத்தில் மிகப் பெரியதும் முன்னணியிலுள்ளதுமான வர்த்தக நாமங்களுடன் சேர்ந்து பறப்பதற்கு இது முக்கியமானதொரு கூட்டாக அமைவதுடன் இது உலகம் முழுவதிலுமுள்ள 800 இற்கும் மேற்பட்ட புதிய சேரிடங்களுடன் இணைக்கப்படுவதன் மூலம் எமது செயற்பரப்பு அதிகரிக்கும் என்பதுடன் எமது வளர்ச்சி உபாயத்திற்கும் ஆதரவாக அமையும். வண்வேர்ள்ட் தற்பொழுது ஐந்து முன்னணி சர்வதேசத்தின் "பெஸ்ட் எயார்லையின் எலையன்ஸ்" விருதுகளை பெற்றிருக்கிறது.

உலகளாவிய விமான நிறுவனங்களின் ஏதாவதொரு அணியில் இணைகின்ற துணைக் கண்டத்திலுள்ள முதலாவது நிறுவனம் சிறிலங்கன் எயார்லையின்சாகும். இதன் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவிலான தடம்களின் வலையமைப்பு, வண்வேர்ள்ட்டிலுள்ள ஏதேனும் வான் நிறுவனமொன்றின் மூலம் உழைப்பதற்கான வாய்ப்புக்களையும் பறப்பு மைல்களை அடிக்கடி பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல் போன்றவற்றின் மூலமாக கூடுதலான பணிகளையும் நன்மைகளையம் வழங்கமுடியும். உயர்மட்ட உறுப்பினை உள்ளடக்கிய பிளைசிமைல் அடிக்கடி பறக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் உறுப்பினர்கள் உலகம் முழுவதிலுமுள்ள 550 உடன் கூட்டிய விமான நிலைய மண்டபங்களை அணுகுதல் உட்பட வண்வேர்ள்ட் வலையமைப்பினூடாக சலுகைகளையும் நன்மைகளையும் அனுபவித்தனர்.

### விமானங்களின் தொகுதி மற்றும் வலையமைப்பின் விரிவாக்கம்

இன்னுமொரு விமானம் குத்தகைக்கு பெறப்பட்டதுடன் மீளாய்விற்குரிய ஆண்டில் புதிய விமானங்களின் கொள்வனவு தொடங்கப்பட்டதுடன் எமது தொகுதியின் எண்ணிக்கை 22 ஆகியது. 2011/12 இல் தொடங்கப்பட்ட தூண்டல் நிகழ்ச்சித்திட்டம் ஐந்து A320, இரண்டு A330 மற்றும் ஒரு A340 வான்கலங்களை உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டுப் பகுதியில் இடம்பெற்ற வலையமைப்பின் விரிவாக்கம், இந்தியா தூர கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு என்பனவற்றிற்கான பயணங்கள் 17 தடவைகளுக்கு விரிவடைந்தமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

### எமது பயணிகள் பயணம் செய்யும் இருக்கை இடங்களை மாற்றியமைத்தல்

எமது நீண்ட விமானத்தில் மிக ஆடம்பரமான சாதனங்களை வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவடைந்தமையின் காரணமாக எமது விமான நிறுவனம் இப்பிராந்தியத்திலுள்ள மிகச் சிறந்த வியாபார வகுப்பிற்குச் சமமான நிலையினை அடைந்தது. எமது நீண்ட தூர இடங்களுக்கு வழங்கப்பட்ட மாற்றியமைப்புக்கள் வியாபார வகுப்பில் தட்டையான படுக்கை வசதியுடனான இருக்கைகள், கேட்கப்படுமிடத்து வழங்கப்படும் கட்புல, செவிப்புல, பொழுதுபோக்கு முறைமைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### பணி வழங்கல்

பணி வழங்குவதனைப் பொறுத்தவரையில் அனைத்துத் துறைகளிலும் அநேக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. முனைக்கோடியில் பரிசோதிக்கும் கருமபீடங்களை, வர்த்தக நாமப்படுத்தல் மண்டபங்களைப் புதுக்கியமைத்தல், பரிசோதனை இடங்களில் பரிசோதனை - கிசோக்களை அறிமுகப்படுத்தல் மற்றும் கைகளில் கொண்டு செல்லப்படக்கூடிய முனைக்கோடி பரிசோதனைகளை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட வாடிக்கையாளரின் வசதிகளை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பறப்புக்களின் போது வழங்கப்படுகின்ற உணவு மற்றும் குடிபானம் என்பன பரந்த தெரிவுகளுடன் கூடிய பெருமளவு வீச்சினைக் கொண்ட உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டதனூடாக பெருமளவிற்கு மேம்படுத்தப்பட்டன. திரைப்படங்களின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டமை, அதேபோன்று அநேக மொழிகளைத் தெரிவு செய்யக்கூடியதாக இருந்தமை என்பனவற்றின் காரணமாக பறப்புக்களின் போதான பொழுதுபோக்குத் துறைகளில் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. விமான நிறுவனத்தின் சொந்த விமானங்களினையும் அதேபோன்று வாடிக்கையாளர் விமான நிறுவனங்களினது விமானங்களையும் சிறந்த முறையில் கையாள்வதற்கும் தரை ஆதரவுச் சாதனங்களின் மீது முதலீடுகள் செய்யப்பட்டன.

### வாடிக்கையாளர் கருத்துக்களும் அவை தொடர்பான நடவடிக்கைகளும்

எமது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வது எமக்கு இன்றியமையாதது என்பதனால், ஆய்விற்குரிய இவ்வாண்டுப் பகுதியில் மிகக் கூடிய அமைப்பியல் முறையிலும் தீவிரமான ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் மூலமாகவும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் இலகுவானதொரு முறைக்கு வசதியளிப்பதன் மூலமும் வாடிக்கையாளர் கருத்துக்களையும் அவை தொடர்பான நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்கான புத்தம் புதிய வழிகளை நாம் கண்டறிந்திருக்கின்றோம். இனிவரும் ஆண்டுகளில்,

வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட அளவிலான பணிகளை வழங்கும் பொருட்டு அவர்களின் பிரச்சனைகளை சிறந்த முறையில் விளங்கிக் கொள்வதற்காக அவர்களுடன் இன்னும் நெருக்கத்தினை ஏற்படுத்தும் விதத்தில் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பத்தினூடாக மேலும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

### சிறிலங்கன் கார்கோ

எயார்லையின்சின் வரலாற்றில் இந்நிதியாண்டிலேயே சிறிலங்கன் கார்கோ ஐ.அ.டொலர் 98 மில்லியன் கொண்ட மிக உயர்ந்த வருமானத்தினைப் பெற்றது. இது 101,000 மெற்றிக்தொன் கொண்ட சரக்குகளைக் கொண்டு வந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மொத்த வலையமைப்பு வருமானத்தில் கொழும்பு 28 சதவீதத்திற்குப் பங்களித்த வேளையில் தூரகிழக்கு, இந்தியா, ஐரோப்பா என்பனவற்றின் வருமானப் பங்களிப்பு முறையே 29 சதவீதமாகவும் 16 சதவீதமாகவும் 19 சதவீதமாகவும் காணப்பட்டன. மொத்த வலையமைப்பிற்கான சரக்கு வருமானத்தின் பங்களிப்பு 12 சதவீதமாக இருந்தது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பல புதிய செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. உயிருடனான விலங்குகளை வைத்திருக்கும் அறை, வானொலி செயற்பாடுகளுடன் கூடிய களஞ்சியப்படுத்தும் வசதி, கூடுதலாக 30 சதவீதத்திற்கு இடவசதியை அதிகரிக்கும் நோக்குடன் களஞ்சியப்படுத்தும் நிலப்பேழைகளின் உயரத்தினை அதிகரித்தமை மற்றும் மின்தூக்கி எந்திரங்களுடன் கூடிய பாரிய திரை வசதிகளைக் கொண்ட பாரிய பொருள்களைக் கண்காணிக்கும் எந்திரங்கள் என்பன அவற்றுள் சிலவாகும்.

அதிகரித்த வருமான நன்மைகளை விமான நிறுவனம் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில், 2013 யூன் தொடக்கம் சரக்கு வருமான முகாமைத்துவப் பிரிவொன்றினை சிறிலங்கன் கார்கோ ஏற்படுத்தியது. இயலளவுத்தடைகளை வெற்றி கொள்ளும் நோக்குடன் ஐரோப்பாவிற்கான இடமொன்றினைக் கொள்வனவு செய்வதற்காக மெகா கறியர்சுடன் தற்பொழுது பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது வியாபாரத்தினை மேம்படுத்துவதற்காக, எமது வெளியேயுள்ள நிலையங்களில் புதிய சரக்கு விற்பனை முகவர்களை திறக்கும் செயன்முறைகளில் நாமும் ஈடுபட்டிருந்தோம். இவ்வாண்டினை வெற்றிகரமான ஆண்டாகப் பதிவு செய்யும் விதத்தில் வியாபாரத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த அதிகரிப்பு சிறிலங்கன் கார்கோவின் வலையமைப்பினூடாக வாடிக்கையாளர் நம்பிக்கை வளர்ச்சியடைய குறிப்பிடத்தக்களவிற்கு உதவியது.

### சிறிலங்கன் என்ஜினியறிங்

சிறிலங்கன் என்ஜினியறிங் அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களின் வியாபார வகுப்பு மற்றும் பொருளாதார வகுப்புப் பகுதிகள் இரண்டினையும் தரமுயர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட, சிறிலங்கன் எயார்லையின்சின் சொந்த விமானத் தொகுதியினதும் அதேபோன்று வாடிக்கையாளர் விமானங்களினதும் மீதான முக்கிய பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வழமையான பேணல் நடவடிக்கைகள் தொடர்பில் மிக வெற்றிகரமான ஆண்டொன்றினைப் பதிவு செய்துள்ளது.

எமது என்ஜினியறிங் பிரிவு முக்கியமாக திருத்தங்களைப் பேணுதல் மற்றும் பழுது பார்த்தல் என்பன பற்றிய எமது இலக்கில் பாரிய பாய்ச்சல் ஒன்றினை ஏற்படுத்தியதுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த தரமான தொழில்சார் நிபுணத்துவப் பணிகளையும் வழங்குகிறது. இந்தியாவின் பாரிய குறைந்த கட்டண விமான இண்டிகோ எமது முக்கிய வாடிக்கையாளர்களுள் ஒருவராக இருப்பதுடன் அவர்களது சி - பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ந்து ஐந்தாவதாண்டாக பெற்றுக்கொண்டதுடன் மேற்கொள்ளப்பட்ட சி-பரிசோதனையின் எண்ணிக்கையிலும் உறுதியான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பாதையினைப் பேணுகின்ற பிரிவு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும் மத்தளவிலுமுள்ள மூன்றாந்தரப்பினர் தொடர்பான அதன் பங்கினை அதிகரித்துக் கொண்டதுடன் இரண்டு விமான நிலையங்களிலும் முன்னுரிமை வாய்ந்த தொழில்நுட்பப் பணி வழங்குநராகத் திகழ்ந்தது. மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் எமது பாதை ஒழுங்கு பேணல் வசதியானது விமான நிலையத்தினைப் பயன்படுத்தும் சிறிலங்கன் மற்றும் மூன்றாந்தரப்பு தொழிற்பாட்டாளருக்கு தொழில்நுட்பப் பேணல் வசதிகளை வழங்கியது.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சிறிலங்கன் என்ஜினியறிங்கில் வசதிகளை அதிகரிக்கின்ற விதத்தில் A320 விமானம் பிரத்தியேகமாக நிறுத்துமிடமொன்று நிருமாணிக்கப்பட்டதுடன், இது, விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் காரணமாக மூன்றாந்தரப்பினருக்கான பேணல் நடவடிக்கைகளை மேலும் அதிகரிப்பதற்கு எம்மை இயலச் செய்யும் விதத்தில் A320 இற்கான முழுநேரம் கணிசமானளவில் குறைக்கப்படவுள்ளது.

### சிறிலங்கன் எயார் டக்சி

எயார் டக்சி தொழிற்பாட்டுடன் இணைந்து காணப்படும் உயர்ந்த தொழிற்பாட்டுச் செலவின் காரணமாக எயார் டக்சி தொழிற்பாடுகள் குறைவடைந்தன. இதற்கமைய, விமானத்தின் எண்ணிக்கை ஒன்றிற்குக் குறைக்கப்பட்டதுடன் அடிப்படை அட்டவணை உயர்ந்த கேள்வியைக் கொண்ட சேரிடங்களுக்குப் பேணப்பட்டதன் மூலம் உயர்ந்த வருமானத்திற்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்ட ஒப்பந்த அடிப்படையிலான பறப்புகள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டன. தொடர்ந்து தொழிற்படுவதற்காகவும் எமது வர்த்தக நாம பிரச்சன்னத்தினை பேணிக் கொள்வதற்காகவும் மிகச் சிக்கனமான மாற்று வியாபார மாதிரிகளை நாம் கண்டறிந்து வருகின்றோம்.

### அடிக்கடி பறக்கும் பிளை சிமைல்ஸ் நிகழ்ச்சித்திட்டம்

எண்ணிக்கை மற்றும் வருமானம் ஆகிய இரு நியதிகளிலும் சிறிலங்கன் பிளை சிமைல்ஸ் இன்னொரு வெற்றிகரமான ஆண்டினைப் பதிவு செய்கிறது. உறுப்புரிமை 61,000 புதிய உறுப்பினர்களுக்கு அதிகரித்திருக்கிறது. மேலும், கூடுதலான நன்மைகள் துல்லியமானதன்மை மற்றும் தேர்வுகளை அடைந்து கொள்ளுதல் என்பனவற்றை வழங்குகின்ற குறிக்கோளுடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு புதிய பங்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

### தகவல் தொழில்நுட்பம்

அதிநவீனத்துவ தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பயணிகளின் வசதியை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அடையப்பட்டதன் வாயிலாக தொழிற்பாட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் விரைவான பரிசோதனை முறைகளை வழங்குவதற்காக சுயபரிசோதனைகளை அனுமதிக்கின்ற கியோஸ்க்கள், ஸ்கானர்களுடன் கூடிய கைகளில் கொண்டு செல்லப்படக்கூடிய கருவிகள், போர்டிங் அட்டை அச்சிடும் வசதி என்பன விமான நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. விரைந்த பயணத்தின் பொருட்டும் பொதிகள் தவறுதலாகக் கையாளப்படுவதனைக் குறைப்பதற்காகவும் பொதிகள் மீள் இணக்கப்படுத்தல் முறைமை தரமுயர்த்தப்பட்டது. வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு பறப்புக்களை தாமதமடைவதனால் ஏற்படுகின்ற செலவுகளை ஆய்வு செய்யும் முறைமை, விமானிகளினது மதிப்பீட்டு முறைமை முகாமைத்துவத் தகவல்களுடன் பிரயோகங்களை செறிவுபடுத்தல் ஆகிய உள்ளக முறைமைகள் வியாபாரத்தில் பிரமாண்டமான அதிகரிப்புக்களை ஏற்படுத்தின. தொழில்நுட்பம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புதிய மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு எவ்வித தடங்கலுமின்றி விரிவாக்கப்பட்டது. மையப்படுத்தப்பட்ட கணக்கீட்டு செயன்முறைக்காக வெளிநாட்டு நிலையங்களின் கணக்குகளை ஒறாகில் இலத்திரனியல் வியாபாரங்களுடன் ஒருங்கிணைக்கின்றமையானது வெளிநாட்டு நிலையங்கள் அவற்றின் நிலையச் செலவுகளையும் கணக்குகளையும் தரமுயர்த்துவதற்கான வழிகளை வழங்குவதுடன் நிதியியல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சில வெற்றிகரமான முயற்சிகளையும் உள்ளடக்கியிருந்தது.

தரமான முகாமைத்துவ முறைமைகளுக்காக ஐஎஸ்ஓ 9001: 2008 சான்றிதழும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்காக ஐஎஸ்ஓ 27001: 2005 சான்றிதழும் பெறப்பட்டமையின் மூலம் உயர்ந்த - தொழில்நுட்பப் பணிகள் எமது தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு பெருமைகளைக் கொண்டு வந்தன.

### மக்கள் பயிலுதல் மற்றும் கலாச்சாரம்

கடந்த ஆண்டில், மனித வள அபிவிருத்தியும் முகாமைத்துவத் தொழிற்பாடுகளும் அவையாகவே இணைந்து வியாபார பங்குடமை சுபீட்சத்திலிருந்தான நிறுவனத்தின் தேவைகளை கூடுதலாக பூர்த்தி செய்தன. கம்பனியின் உயர்ந்த செயலாற்றத்தினையும் உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினையும் கொண்ட அலுவலர்களிலிருந்து நிறுவனத்திற்குத் தேவையான எதிர்கால முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவங்களை நிரப்புவதற்காகத் தேவைப்படும் குழுவினரை அடையாளம் காண்பது முக்கியமானதொரு முயற்சியாகக் காணப்பட்டது. மேலும், தற்பொழுது நடைபெற்றுவரும் செயற்றிட்டங்களின்படி, உயர் செயலாற்றத்தினைக் கொண்ட அலுவலர்களின் தலைமைத்துவ அபிவிருத்தி, நம்பகத்தன்மை மற்றும் தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தி என்பன முன்னெடுக்கப்பட்டதுடன் உயர்ந்த செயலாற்றத்தினைக் கொண்டவர்கள் சரியாக அங்கீகரிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டனர். வியாபார சமூகத்தினருக்காக நிறுவனத்தின் கூட்டு பயில்தல் மற்றும் அறிவுக் குழாமிற்கு அறிவு முகாமைத்துவ முறைமையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் ஊழியர்களின் அறிவாற்றல் மற்றும் உற்பத்தி உயர்விற்காக பல உபாயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

### சிறிலங்கன் தொழில்நுட்பப் பயிற்சி

ஈரோப்பியன் ஏவியேசன் சேவ்ரி ஏஜென்டிடமிருந்து ஈஏஎஸ்ஏ 147 சான்றுபடுத்தலைப் பெற்றவர்கள் என்ற கௌரவத்துடன் நாங்கள் சிறிலங்கன் என்ஜினியறிங்கிற்கு மட்டுமன்றி கடல்கடந்த வாடிக்கையாளர் விமான நிறுவனங்களுக்கும் அதேபோன்று தனிப்பட்டவர்களுக்கும் தொடர்ந்தும் தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குகிறோம். ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கான எமது விமானங்களின் பேணல் பாடநெறி, குறித்துரைக்கப்பட்ட வகைப் பயிற்சி, கட்டாய ஒழுங்குமுறைப்படுத்தல் பயிற்சி என்பன இவ்வசதியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது விமானங்களைப் பேணல் தொடர்பான இரண்டாண்டு அடிப்படை பாடநெறியினை மூன்று தொகுதியினர் பின்பற்றுகின்றனர்.

### சிறிலங்கன் பறப்புக் கல்லூரி

எயார் பஸ் A320 வகை விமானங்களின் தொழிற்பாடு தொடர்பாக மூன்றாந்தரப்பு தொழில்நுட்ப விமானிகளுக்கு வகைத் தரமிடல் பயிற்சியனை வழங்குவதற்காக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து எயார்லையின்ஸ், வகை தரமிடல் பயிற்சி நிறுவன ஒப்புதலைப் பெற்றுக் கொண்டது.

A320 - 200 பறப்பு உருவகப்படுத்தல் பயிற்சிக் கருவிக்காக ஈரோப்பியன் ஏவியேசன் சேவ்டி ஏஜென்சியின் தகைமை பிளைட் சிமுலேட்டர் சென்டருக்கு வழங்கப்பட்டது. மூன்றாந்தரப்பு தொழில்நுட்ப விமானிகளுக்கு பயிற்சியளிக்கும் விதத்தில் எமது இயலாற்றலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் ஆசியாவின் விரைந்து வளர்ந்து வரும் விமானப் போக்குவரத்துத் துறையின் மனித வளத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட சிறிலங்கன் பயிற்சியினை வழங்குவதற்கு திட்டமொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம்.

### சர்வதேச விமானப் போக்குவரத்துக் கல்லூரி

சர்வதேச விமானப் போக்குவரத்துக் கல்லூரி கடந்த இரண்டாண்டுப் பகுதியில் சாதன சொத்துப்பட்டியலின் விரிவாக்கம், வருமானம் மற்றும் இலாபத்தில் வளர்ச்சி ஆகிய விடயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்தது. கல்லூரியின் வெளிவாரி வியாபார வருவாய்கள், கம்பனியின் தொழில் மற்றும் மீண்டெழும் பயிற்சி என்பன செலவுகளில் 90 சதவீதமான மிகையினை உள்ளடக்கியிருந்தது. சர்வதேச விமானப் போக்குவரத்துக் கல்லூரியினால் வழங்கப்பட்ட அயட்டா நிகழ்ச்சித்திட்டங்கள் 4 மடங்கு அதிகரித்ததுடன் நாங்கள் 6 பரிசு வெற்றியாளர்களையும் உருவாக்கக் கூடியதாக இருந்தது. இச்சாதனைகளின் உச்சக்கட்டமாக உலகிலுள்ள அயட்டா பயிற்சிப் பங்காளர்களின் முதல் பத்து நிறுவனங்களிலொன்றாக நாம் தெரிவு செய்யப்பட்டமை - எமது தொடர்ச்சியான செயலாற்றத்திற்குக் கிடைத்த குறிப்பிடத்தக்கதொரு அங்கீகாரமாகும்.

## கம்பனி சமூகப் பொறுப்பாண்மை

2012/2013 காலப்பகுதியில் கம்பனி சமூகப் பொறுப்பாண்மை நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுகளைப் போன்றே தொடர்ந்ததுடன் கோ-கிறீன் குழு மற்றும் பசுமை முன்னெடுப்புக்களில் மேலதிக கவனத்தினையும் செலுத்தியது. எமது “உறுதியானதும் முன்னேற்றம்மிக்கதுமான வியாபார அபிவிருத்தியை பூர்த்தி செய்கின்ற கோளக சிநேகபூர்வ எயார்லையின்சாக இருத்தல்” என்ற பசுமை தொலைநோக்கினைப் பேணுகின்ற விதத்தில் பல நிகழ்ச்சித்திட்டங்களை நாம் மேற்கொண்டோம். இவை எமது “கார்பன்” வூட் பிறின்ட்” இனை குறிப்பிடத்தக்களவிற்குக் குறைக்கும். நாங்கள் தேசிய பசுமை வினைத்திறன் விருது வழங்கும் வைபவத்தில் வெற்றிப் பதக்க விருதினையும் பெற்றிருக்கின்றோம்.

சமூகத்திற்கான எமது கடப்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் விதத்தில், வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்குப் புறம்பாக இரண்டு குறிப்பிடத்தக்க செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சிறிலங்கன் கெயார்ஸ், பல் ஒழுங்குமுறை சார்ந்த சிறுவர் மனோதத்துவ வாட் ஒன்றினை கட்டுவதற்காக சுகாதார அமைச்சுடனும் லேடி றிஜ்வே வைத்தியசாலையுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டது. கட்டுமானம் 2013 மாச்சில் தொடங்கியதுடன் இது 2013 செத்தெம்பரில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையிலுள்ள முதலாவது பிரத்தியேக சிறுவர் மனோதத்துவ வாட் இதுவாகும்.

வான் போக்குவரத்தின் 100 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, சிறிலங்கன் கெயார்ஸ் பத்து அநாதை நிலையங்களிலிருந்து 125 பிள்ளைகளுக்கு அவர்களின் கனவினை நனவாக்கும் முயற்சியொன்றாக நாட்டினைச் சுற்றிக்காட்டும் காட்சி காண் ஞாபகார்த்த பறப்புக்களை ஒழுங்கு செய்தது. பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்ற அறிமுகமாகுதல் சுற்றுலா தொடர்பான சிறிலங்கன் பறப்புக்களை நிறுத்தி வைக்குமிடம் மற்றும் பறப்பின் போதான பணிகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டன.

விமானப் போக்குவரத்து எரிபொருள் முகாமைத்துவத்தினூடாக பறப்பு தொழிற்பாடுகளினால் பல எரிபொருள் சிக்கன மேம்பாட்டு முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. இது கார்பன் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கு பங்களித்தது.

- எரிபொருள் சிக்கனத்தினை அதிகரிப்பதற்காக இரு துறைகளின் மீது தேவைப்படுத்தப்பட்ட கடற் போக்குவரத்து/ செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்து அணுகுமுறை நடைமுறைக்கிடப்பட்டது.
- விமானத்தின் தரை நகர்வின் போது ஏற்படும் கார்பன் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கு எயார்போட் அன்ட் ஏவியேசன் ஒவ் சிறிலங்காவுடன் இணைந்து தொழிற்பட்டது.
- எரிபொருள் நிறையில் ஏற்படும் வேறுபாடுகளைக் குறைப்பதற்காக வலையமைப்பினூடாக பூஜ்ய எரிபொருள் நிறை கண்காணிப்புப் பொறிமுறையொன்று நடைமுறைக்கிடப்பட்டதன் மூலம் மேலதிக எரிபொருள் உயர்வு குறைக்கப்பட்டது.

## எதிர்வரும் ஆண்டிற்கான பொதுவான உபாயம்

அடுத்துவரும் மூன்றாண்டு காலப்பகுதியில், எமது வியாபாரத் திட்டமொன்றாக வாடிக்கையாளர் கவனிப்பினை உயர்த்துதல், வருமானத்தினை அதிகரித்தல், இலாபநட்டமற்ற ஒரு நிலையினை எய்தும் நோக்குடன் கீழ்மட்ட நிலைமைகளை மேம்படுத்துதல் என்பன மீது கவனம் செலுத்தப்பட்டது. ஆசியாவின் விமானப் போக்குவரத்தின் மையமாக இலங்கையை உருவாக்கும் பொருட்டு எமது உபாயம்மிக்க புவிசார் அமைவிடங்களை உச்சமட்டத்திற்கு அதிகரிக்கும் பொருட்டு ஆசிய பசுபிக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கவனம் செலுத்த எதிர்பார்க்கிறோம்.

வருமானத்தினை அதிகரிப்பதற்காக, நவீன தொழில்நுட்பங்களை தொடர்ந்தும் பயன்படுத்தவுள்ளோம். சந்தைத் தகவல்கள் மற்றும் அறிவார்ந்த அடிப்படையில் தீமானங்களை மேற்கொள்வோம். அரசிறையினை உச்சப்படுத்துவதற்கும் கட்டணங்களின் சீராக்கத்திற்காகவும் கட்டண அமைப்பின் நியதிகளில் தொடர்ச்சியான வருமான முகாமைத்துவ மாற்றங்களை இது உள்ளடக்கியுள்ளது. “பிளஸ்கிறாட்” என அறியப்படும் விற்பனை செய்யப்படாத வியாபார வகுப்பு இருக்கைகளுக்கு சிறந்த பயன்பாட்டினை வழங்கும் நோக்குடன் புதிய முன்னெடுப்பொன்று நடைமுறைக்கிடப்பட்டது. வண்வேர்ள்ட் இற்குள் நுழைவது மேலதிக பங்கு வருமானத்தினை குறிப்பாக ஐரோப்பிய சந்தையில் ஏற்படுத்துவதுடன் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவிலான வலையமைப்பிற்கான இணைப்பினையும் வழங்குகிறது. சிறந்த தரவு மற்றும் சாதனங்களின் மீதான முதலீடு போட்டியாளர் நடவடிக்கைகளிலிருந்து கூடுதலான அறிவினைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்தும் என்பதுடன் புதிய சந்தைகள் மற்றும் போட்டியாளர்களின் மாற்றங்கள் என்பன மீதான தாக்கத்தினை சிறந்த முறையில் எதிர்வுகூறுவதற்கும் எம்மை இயலச் செய்கிறது. மிகத் தீவிரமான விலையிடல் நிகழ்ச்சித்திட்டத்தினைப் பின்பற்றுவது உயர் சமைக் காரணிகளைக் கொண்டுள்ள சந்தைகளின் மீது கட்டண அதிகரிப்பினை உயர்த்துவதற்கு எம்மை இயலச் செய்யும். இம்முன்னெடுப்புக்கள் விலையிடல் அமைப்பில் இயல்பான நெகிழ்ச்சித் தன்மையினை அறிமுகப்படுத்த எம்மை இயலச் செய்யும்.

எயார்லையின்சின் அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களின் மீள்தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆறு புதிய A330 - 300 எயார் பஸ்களை கிடைக்கச் செய்வதன் மூலம் ஏற்கனவேயுள்ள ஆறு A340 விமானங்களை நீக்கி விடுகின்றதுடன் இறுதியில் புதிய அடுத்த பரம்பரைக்குரிய A350 - 900 எயார் பஸ்கள் A330 - 200 தொகுதிகளை அகற்றிவிடும். எரிபொருள் சிக்கனத்தைக் கொண்ட நவீன அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களின் எரிபொருள் சிக்கனத்தினை உயர்ந்தபட்சமாக்குவதனையும் செலவு அமைப்பினை மேலும் மேம்படுத்தப்படுவதனையும் இயலச் செய்யும். இவ்விமானங்கள் நவீனத்துவம் மிக்கதும், மிக நவீனத்துவம் வாய்ந்த இருக்கை வசதிகளைக் கொண்டதும், பறப்பின் போதான பொழுதுபோக்கு முறைமைகளையும் கொண்டிருப்பதனால் எமது வாடிக்கையாளர்களுக்கு மிகக் கூடியளவு போட்டித்தன்மை கொண்ட சாதனங்களை வழங்குவதனை இயலச் செய்யும்.

**தங்களுக்கு நன்றி**

முதலீடு மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றின் பக்கபலத்துடன் வலிமைப்படுத்தப்பட்டதொரு ஆண்டாக விளங்குவதுடன், ஆய்விற்குரிய ஆண்டு சிறிலங்கன் எயார்லையின்சுக்கு ஒரு மைல் கல்லாக விளங்குவதுடன் எங்களுடன் தோளோடு தோள் நின்ற அனைவருக்கும் நன்றிகளையம் தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு சனாதிபதி மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம், மாண்புமிகு விமானப் போக்குவரத்து அமைச்சர் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அவர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கும் உதவிக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் தலைவர், பணிப்பாளர் சபையிலுள்ள எனது நண்பர்கள், மூத்த முகாமைத்துவக் குழுவினர் ஆகியோருக்கு அவர்களது தொடர்ச்சியான வழிகாட்டல்கள் மற்றும் உறுதியான ஆதரவிற்காக எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிலங்கன் குடும்பமென கூட்டாக அறியப்படுகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அவர்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பிற்கும் கடுமையான உழைப்பிற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல நிறுவனங்கள் தமது ஆதரவினை எமக்கு வழங்கியிருக்கின்றன. வெளிநாடுகள் மற்றும் இலங்கையிலுள்ள எமது நிதியியலாளர்களுக்கும் இலங்கைச் சுற்றுலா, விமான நிலையம் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் மற்றும் பண்டாரநாயக்கா விமான நிலையத்திலும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலும் தொழிற்படுகின்ற அனைத்து வான் நிறுவனங்களுக்கும்; எமது நிரம்பலர்கள் மற்றும் வியாபாரங்களுக்கும் எமது பெறுமானமாக விளங்கும் எல்லாவற்றிற்கும் மேலான எமது வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றிகள். எதிர்வரும் புதிய ஆண்டிலும் எமது வாக்குறுதிகளையும் செயலாற்றத்தினையும் தொடர்வதற்கு நாம் ஒன்றிணைவோமாக.

ஒப்பம்

**கபில சந்திரசேன**
பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
2013 யூலை 30

## பணிப்பாளர்களின் விபரக் குறிப்பு

### நிசாந்த விக்கிரமசிங்க

2006 சனவரியில் சபைக்கு நியமிக்கப்பட்டார். 2008 ஏப்பிறலில் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2008 செத்தெம்பரில் பதில் தலைவராக நியமிக்கப்பட்டு 2009 யூலையிலிருந்து தலைவரானார். அவர் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட்டின் தலைவராகவும் விளங்குவதுடன் உடபுசல்லாவ பிளாண்டேசன் பிஎல்சி மற்றும் கப்புகஸ்தென்ன பிளாண்டேசன் பிஎல்சி என்பனவற்றின் பணிப்பாளருமாவார்.

### கபில சந்திரசேன

2008 திசெம்பரில் சபைக்கு நியமிக்கப்பட்டார். இதற்குப் புறம்பாக 2011 ஓகத்தில் முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டார். தொழில்சார் ரீதியில் சந்தைப்படுத்துநரான இவர் தற்பொழுது சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் பணிப்பாளராகவும் மிகின் லங்கா (பிறைவேட்) லிமிடெட்டின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் விளங்குகின்றார்.

### நிகால் ஜயமானே ச.ச

1994 - 1998 வரையான காலப்பகுதியில் பணிப்பாளர் சபையிலிருந்த இவர் அதன் பின்னர் 2008 செத்தெம்பரில் மீண்டும் நியமிக்கப்பட்டார். சிரேஷ்ட சனாதிபதி சட்டத்தரணியான இவர் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சட்டத்தரணியாக விளங்கியதுடன் இலங்கை சட்ட ஆணைக்குழுவினதும் கம்பனிச் சட்ட மதியுரை ஆணைக்குழுவினதும் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். இவர் சிறிலங்கன் கேட்டறிங்கினதும் செலான் வங்கி பிஎல்சி இனதும் பணிப்பாளருமாவார்.

### சமீந்திரா ராஜபக்ஷ

2009 ஓகத்தில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தொழில்சார் ரீதியில் கணனிப் பொறியியலாளரான இவர் தற்பொழுது மாண்புமிகு நிதியமைச்சரின் தனிப்பட்ட செயலாளராக பதவி வகிக்கின்றார். இவர் சிறிலங்கன் ரெலிகொம் பிஎல்சி, எஸ்எல்ரி ஹொங்கொங் லிமிடெட், எஸ்எல்ரி பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் என்பனவற்றின் பணிப்பாளருமாவார்.

### மணிலால் பர்னாந்து

2010 மேயில் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது கொல்சிம் லங்கா லிமிடெட்டின் தலைவராகப் பணியாற்றுகின்றார். தொழில்சார் ரீதியில் சட்டத்தரணியான இவர் எயிட்கென் ஸ்பென்ஸ் அன்ட் கோ பிஎல்சி, சிலோன் இன்வெஸ்ட்மன் பிஎல்சி மற்றும் சிப்பிங் கார்கோ லொஜிஸ்ரிக் (பிறைவேற்) லிமிடெட் என்பன உட்பட பல்வேறு நிறுவனங்களிலும் பணிப்பாளராக இருந்து வருகின்றார்.

### லக்ஷ்மி சங்கக்காரா

2011 செத்தெம்பரில் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் கணக்காய்வுக் குழுச் சபையின் ஒரு உறுப்பினராகவும் விளங்குகின்றார். தொழில்சார் ரீதியில் சட்டத்தரணியான இவர் பீப்பிள்ஸ் றவல்சின் தலைவராகவும் மக்கள் வங்கியின் பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

### சனத் உக்வத்த

2004 - 2008 வரையான காலப்பகுதியிலும் 2008 - 2010 காலப்பகுதியிலும் பணிப்பாளராக இருந்த இவர் அதன் பின்னர் 2011 செத்தெம்பரிலிருந்து இன்று வரை பணிப்பாளராக இருந்து வருகின்றார். தொழில்சார் ரீதியில் சுற்றுலா விடுதியாளரான இவர் தற்பொழுது மவுன்ட்லவனியா ஹோட்டல் குறூப்பின் தலைவராக இருந்து வருகின்றார். இவர் கணக்காய்வுச் சபை உறுப்பினராகவும் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டில் பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

### சுசந்தா ரட்ணாயக்கா

2011 திசெம்பரில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். சபைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரான இவர் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் சுதந்திரமான பணிப்பாளருமாவார். இவர் தற்பொழுது ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் பிஎல்சி இன் தலைவராகவும் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றுவதுடன் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் குழுமத்திலுள்ள பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பல கம்பனிகளிலும் பணியாற்றுகின்றார்.

## பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை 2013 மாச்சு 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது.

### பிரதான நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வும்

கம்பனியின் முக்கியமான வியாபார நடவடிக்கைகள் யாதெனில், இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட விமானப் போக்குவரத்து துறை என்ற முறையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள், பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் என்பனவற்றைக் கொண்டு செல்வதற்காக அட்டவணையிடப்பட்ட/ அட்டவணையிடப்படாத விமானப் பணிகளை நடத்துவதேயாகும். கம்பனியின் ஏனைய முக்கிய நடவடிக்கைகளில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும் விமான முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், விமானங்களில் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயுமான விடுமுறைப் பொதிகளைச் சந்தைப்படுத்தல் மற்றும் பயணிகள் போக்குவரத்திற்காக உள்நாட்டு எயார் டக்சிப் பணிகளின் தொழிற்பாடு என்பனவும் உள்ளடக்கியிருந்தன. மூன்றாந்தரப்பு பேணலை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு பணிகளின் ஏற்பாடு மற்றும் வான் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளில் அடங்கியிருந்தன.

இந்நிதியியல் ஆண்டுப் பகுதியில் கம்பனியின் நடவடிக்கைத் தன்மைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவும் காணப்படவில்லை.

கம்பனி உள்ளடக்கியிருக்கும் குழுமம் மற்றும் கம்பனிக்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் என்பனவற்றின் முக்கிய நடவடிக்கையாக இலங்கை கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் தொழிற்படுகின்ற விமான நிறுவனங்களுக்கு உள்ளக உணவுப் பரிமாறல் வசதிகளை வழங்குவதும் காணப்படுகின்றது. ஏனைய துணை நடவடிக்கைகள் பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை தொழிற்படுத்தல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான சுற்றுலா விடுதிகளை முகாமைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### நிதியியல் கூற்றுக்களும் கணக்காய்வாளர் அறிக்கையும்

2013 மாச்சு 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் பிரிவின் தலைவரினாலும் பணிப்பாளர்களினாலும் சரியான முறையில் கையொப்பமிடப்பட்ட முழுமையான நிதியியல் கூற்றும் அதற்கான கணக்காய்வாளர் அறிக்கையும் இவ்வறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியியல் கூற்றுக்களைக் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 25 இலிருந்து 38 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### குழுமத்தின் மொத்தப் புரள்வு

குழுமத்தின் மொத்தப் புரள்வு ரூ.121,408 மில்லியன்களாகக் (2011/12இல் ரூ.94,639 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் மொத்தப் புரள்வு தொடர்பான விபரமானதொரு பகுப்பாய்வு நிதியியல் கூற்றின் குறிப்பு 18இல் தரப்பட்டுள்ளது.

கம்பனிக்கும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டிற்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

### பெறுபேறுகள்

வரி விதிப்பிற்பு முன்னரான குழுமத்தின் பெறுபேறு ரூ.22,503 மில்லியன் (2011/12: குழுமத்தின் பற்றாக்குறை ரூ.17,197 மில்லியன்) கொண்ட பற்றாக்குறையாகக் காணப்பட்டது. வரி விதிப்பிற்கான ரூ.15 மில்லியன் கொண்ட சீராக்கத்தின் பின்னர் (2011/12: ரூ.11 மில்லியன்) குழுமத்தின் இவ்வாண்டிற்கான பெறுபேறு ரூ.22,519 மில்லியன் கொண்ட பற்றாக்குறையாகக் காணப்பட்டது. (2011/12இற்கான குழுமத்தின் பற்றாக்குறை ரூ.17,208 மில்லியன்களாகும்).

இவ்வாண்டிற்கான ஒன்று திரட்டப்பட்ட வருமானக் கூற்று 21ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### குழுமத்தின் முதலீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இவ்வாண்டிற்குரிய குழுமத்தின் மூலதனச் செலவினம் ரூ.2,139 மில்லியனாகக் (2011/12: ரூ.2,692 மில்லியன்) காணப்பட்டது.

### சொத்து, பொறி மற்றும் சாதனம்

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு குழுமத்தின் சொத்து, பொறி மற்றும் சாதனத்தின் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூ.8,155 மில்லியன்களாகக் (2011/12: ரூ.7,234 மில்லியன்) காணப்பட்டது. சொத்து, பொறி மற்றும் சாதனம் மற்றும் அவற்றின் அசைவுகளின் விபரங்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 3இல் தரப்பட்டுள்ளது.

### கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூ.32,033 மில்லியனாக (2011/12: ரூ.19,433 மில்லியன்) காணப்பட்டது.

இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை அரசாங்கம் திறைசேரி முறிகள் வடிவில் ரூ.12,600 மில்லியன்களை பங்கு மூலதனம் தொடர்பான முற்பணமாக முதலீடு செய்தது. பங்குடமையாளர்களின் ஒப்புதலுக்குட்பட்டு பணிப்பாளர் சபை கம்பனியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 9இன் நியதிகளுக்கிணங்க இலங்கை அரசாங்கத்திற்கான தனிப்பட்ட வைப்புக்கள் வடிவில் சாதாரண பங்குகளை வழங்குவதற்கு அதிகாரமளித்தது.

இப்பங்குகளை வழங்குவதற்கான பங்குடமையாளர்களின் ஒப்புதல் 2013 செத்தெம்பர் 26ஆம் நாளன்று அதிவிசேட பொதுக்கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

### ஒதுக்குகள்

2013 மாச்சு 31ஆம் திகதியிலுள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்குகள் எதிர்க்கணியமான ரூ.39,193 மில்லியனாக (2010/11: எதிர்க்கணியமான ரூ.16,383 மில்லியன்) காணப்பட்டது. இது, ரூ.40,743 மில்லியன் கொண்ட ஒன்று சேர்ந்த இழப்புக்கள், (2011/12: ரூ.18,163 மில்லியன்) ரூ.2,523 மில்லியன் (2011/12: ரூ.2,523 மில்லியன்) கொண்ட மூலதன ஒதுக்கங்கள் ரூ.1,027 மில்லியன் கொண்ட எதிர்க்கணிய சந்தைப் பெறுமதி ஒதுக்கங்கள் (2011/12 எதிர்க்கணியமான ரூ.796 மில்லியன்), ரூ.0.63 மில்லியன் கொண்ட வருமான ஒதுக்கங்கள் (2011/12: ரூ.0.63 மில்லியன்) மற்றும் ரூ.53 மில்லியன் கொண்ட பொதுவான ஒதுக்கங்கள் (2011/12: ரூ.53 மில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வொதுக்கங்களின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்களிலுள்ள பங்குகளில் காணப்படும் மாற்றங்களினது கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

### கம்பனி நன்கொடைகள்

குழுமம் இவ்வாண்டில் எந்தவொரு காசு நன்கொடையினையும் மேற்கொள்ளவில்லை. அரசியல் நோக்கங்களுக்காக எவ்வித கொடைகளும் வழங்கப்படவில்லை.

### வரி விதிப்பு

இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி, கம்பனி 2013 மாச்சு 31ஆம் நாள் வரை வரி விடுப்பினை அனுபவிக்கலாம். 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021 மாச்சு 31ஆம் நாள் வரை கம்பனி அதன் அனைத்து வியாபார நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

தற்பொழுது இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் கம்பனி மேற்கொள்ளும் கடல் கடந்த தொழிற்பாடுகளின் மீது வரி செலுத்துவதற்கு கம்பனி பொறுப்புடையதாகும்.

முழுமையாகச் சொந்தமான துணைக் கம்பனியான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டினைப் பொறுத்தவரை, இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி விமானங்களின் சமயலறை மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகங்களிலிருந்து கிடைத்த வருமானத்திற்கு 2006 யூலை 1ஆம் நாளிலிருந்து 2021 மே 31ஆம் நாள் வரை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மற்றைய மூலங்களிலிருந்து கிடைத்த வருமானம் தற்போது நிலவும் வரி வீதங்களில் வரி செலுத்துவதற்குட்பட்டதாகும்.

### பங்குத் தகவல்கள்

2013 மாச்சு 31இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் வருமாறு:

| பங்குடமைகள் | பங்குகளின் எண்ணிக்கை | உடமைகளின் விகிதம் |
|---|---|---|
| இலங்கை அரசு | 26,275,436 | 51.06% |
| இலங்கை வங்கி | 12,115,570 | 23.54% |
| மக்கள் வங்கி | 4,236,135 | 8.23% |
| தேசிய சேமிப்பு வங்கி | 4,236,135 | 8.23% |
| ஊழியர் சேம நிதியம் | 1,863,676 | 3.62% |
| ஏனையவை | 2,736,511 | 5.32% |

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பங்கு மூலதனங்களுக்கான ரூ.26.89 பில்லியன் முற்பணத்தினை மேலேயுள்ள பங்குத் தகவல்கள் உள்ளடக்கவில்லை.

### எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

2013 மாச்சு 31ஆம் நாளன்று உள்ளவாறான எதிர்பாராத பொறுப்புக்களும் அந்த நாளன்று உள்ளவாறான மூலதனச் செலவினத்தில் செய்யப்பட்ட கடப்பாடுகளும் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 23இல் தரப்பட்டுள்ளன.

### ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்களுக்கான 25ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தவிர சீராக்கத்தினை அல்லது வெளிப்படுத்துகையினைத் தேவைப்படுத்துகின்ற எந்தவொரு நிலைமையும் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் ஏற்படவில்லை.

### தொழில்நிலைக் கொள்கைகள்

தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் குழுமத்தின் தொழில்நிலைக் கொள்கையானது பால், இனம் அல்லது சமயம் என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதேயாகும். தொழில் ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு கவனத்தினைப் பெற்றுள்ளன. ஆண்டின் இறுதியில் கம்பனியினாலும் அதன் துணை நிறுவனத்தினாலும் தொழில் வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை 7,241 ஆகக் காணப்பட்டது (2011/12: 6,387 ஆகக் காணப்பட்டது).

### சட்ட ரீதியான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கை என்பனவற்றின்படி ஊழியர்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் தொடர்பான அனைத்துச் சட்ட ரீதியான கொடுப்பனவுகளும் நாளது வரை சரியான முறையில் செலுத்தப்பட்டிருக்கின்றன என திருப்திபடுகின்றனர்.

### சுற்றாடல் பாதுகாப்பு

குழுமத்தின் வியாபார நடவடிக்கைகள் சுற்றாடலின் மீது நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களை கொண்டிருக்க முடியும். சுற்றாடலின் மீதான மோசமான தாக்கத்தினை இயன்றவரை குறைப்பதும் தொடர்பான அதிகாரசபைகளுடனான ஒத்துழைப்பினை ஊக்குவித்து ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடப்பதுமே குழுமத்தின் கொள்கையாகவுள்ளது.

### கம்பனி ஆளுகை/ உள்ளகக் கட்டுப்பாடு

இன்றைய கம்பனி உலகில் சிறந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவது மிக இன்றியமையாததொரு தேவைப்பாடாக மாறியிருக்கிறது.

பணிப்பாளர்கள், குழும முறைமையின் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான அவர்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். முறைமையானது உத்தரவாதங்களை வழங்குதல், மற்றைய விடயங்கள், சொத்துக்களின் மீதான பாதுகாப்பு, சரியான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் தயாரிக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மை என்பனவற்றை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், எந்தவொரு முறைமையும் நியாயமான அளவிற்கு மாத்திரமே உத்தரவாதத்தினைக் கொண்டிருக்க முடியுமேயன்றி முழுமையான உத்தரவாதத்தினை கொண்டிருக்க முடியாது. தவறுகளும் ஒழுங்கீனங்களும் நியாயமானதொரு காலப்பகுதிக்குள் தடுக்கப்படுகின்றன அல்லது கண்டுபிடிக்கப்படுகின்றன. கணக்காய்வுக் குழுச் சபையின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் ஒரு பகுதியாக தரப்பட்டுள்ளது.

நிதியியல் கூற்றுக்கள் கையொப்பமிடப்பட்ட நாளது வரையான காலப்பகுதியில் உள்ளகக் கட்டுப்பாடு முறைமை காத்திரமான முறையில் தொழிற்பட்டமையையிட்டு சபை திருப்தியடைந்திருக்கிறது.

### தொடர்ந்து செல்லும் கரிசனைகள்

பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றில் தெரிவிக்கப்பட்டவாறு, நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையினைப் பின்பற்றியிருக்கின்றனர்.

### பணிப்பாளர் சபை - தற்போதையது

கம்பனியின் தற்போதைய பணிப்பாளர் சபை கீழே தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| திரு. நிஷாந்த விக்கிரமசிங்க | - | தலைவர் |
| திரு. நிஹால் ஜயமான ச.ச. | - | பணிப்பாளர் |
| திரு. கபில சந்திரசேன | - | பணிப்பாளர் |
| திரு. சமீந்திர ராஜபக்ஷ | - | பணிப்பாளர் |
| திரு. மணிலால் பர்னாந்து | - | பணிப்பாளர் |
| திருமதி. லக்ஷ்மி சங்கக்காரா | - | பணிப்பாளர் |
| திரு. சனத் உக்வத்த | - | பணிப்பாளர் |
| திரு. சுசந்த ரட்ணாயக்கா | - | பணிப்பாளர் |

2012 ஏப்பிறல் 01இல் பணிப்பாளராக இருந்த செல்வி டபிள்யு. ஏ. நாளானி 2012 யூலை 04ஆம் திகதியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

### பணிப்பாளர் சபை - சிறிலங்கன் கேட்டறிங்

சிறிலங்கன் கேட்டறிங்கின் தற்போதைய பணிப்பாளர் சபை வருமாறு:

| | | |
|---|---|---|
| திரு. நிஷாந்த விக்கிரமசிங்க | - | தலைவர் |
| திரு. நிஹால் ஜயமான ச.ச. | - | பணிப்பாளர் |
| திரு. சமீந்திர ராஜபக்ஷ | - | பணிப்பாளர் |
| திரு. கபில சந்திரசேன | - | பணிப்பாளர் |
| திரு. சுசந்த ரட்ணாயக்கா | - | பணிப்பாளர் |
| முனைவர் நாலக கொடகேவா* | - | பணிப்பாளர் |
| திரு. சனத் உக்வத்த | - | பணிப்பாளர் |

* சுதந்திரமான பணிப்பாளர்

### பணிப்பாளர்களின் ஊதியம்

பணிப்பாளர்களின் ஊதியம் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 26இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்களின் பங்குடமைகள்

அலுவலக அதிகாரங்களின்படி இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் உட்பட இரண்டு பணிப்பாளர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்திருக்கின்றனர்.

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்கள்

கம்பனியின் ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்கள் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 26இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் பணிப்பாளரின் கூட்டங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. பணிப்பாளர்கள் கம்பனியுடனான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களிலோ அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தங்களிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வித நலவுரித்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

### ஆண்டுப் பொதுக்கூட்டம்

ஆண்டுப் பொதுக்கூட்டம் 2013 செத்தெம்பர் 26ஆம் நாளன்று நடத்தப்படும்.

### கணக்காய்வாளர்கள்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கிணங்க திருவாளர்கள் ஏர்ணஸ்ட் அன்ட் யங் பட்டயக் கணக்காளர்களை கம்பனியின் கணக்காய்வாளர்களாக மீண்டும் நியமிக்கும் பிரேரணையொன்று ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 21இல் தரப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் (ஒரு கணக்காய்வாளர் தவிர) கம்பனியுடனோ அல்லது துணைக் கம்பனியுடனோ எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

**சபையின் கட்டளைப்படி**

ஒப்பம்

**மில்ட்ரெட் பீரிஸ்**
கம்பனி செயலாளர்

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| பணிப்பாளர் | பணிப்பாளர் |

2013 யூலை 30

## பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள்

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைகள், பக்கம் 22இல் காணப்படும் கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களிலிருந்தும் வேறுபடுகின்றன.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறு கம்பனியினதும் குழுமத்தினதும் விவகாரங்கள் தொடர்பான நோக்கில் உண்மையானதும் நியாயமானதுமான அம்சங்களை ஒவ்வொரு நிதியாண்டும் வழங்குகின்ற விதத்தில் நிதியியல் கூற்றுக்களையும் நிதியாண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் இலாப அல்லது நட்டக் கணக்கினைத் தயாரிக்க வேண்டும் என தேவைப்படுத்துகின்றது. நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுவதுடன் நியாயமானதும் முன்மதியுடையதுமான தீர்ப்புக்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

நிதியியல் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்கும் விதத்திலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் கம்பனியும் அதன் துணை நிறுவனமும் போதுமான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுகின்றமையை உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களின் பொறுப்பாக இருக்கின்றது. குழுமத்தின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அத்தகைய கருத்திற்கிணங்க மோசடி மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களை தடைசெய்தல் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாடுகளில் பொருத்தமான முறைமைகளை நிறுவுவது தொடர்பாக பொருத்தமான தன்மைகளை பேணுவதற்கும் அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர்.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையினைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். குழுமமானது தொடர்ந்தும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் போதுமான மூலவளங்களைக் கொண்டுள்ளது என்பதனை பரிசீலனையில் கொள்ளும் விதத்தில் காசுப்பாய்ச்சல்கள் மற்றும் கடன்பாட்டு வசதிகள் உட்பட 2013 மாச்சு 31இல் முடிவடைகின்ற நிதியாண்டிற்கான குழுமத்தின் வரவு செலவுத்திட்டம் பற்றி பணிப்பாளர்கள் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அதன் மீளாய்வினை ஆராய்ந்தனர்.

கண்காய்வாளர்கள் நிதியியல் கூற்றுக்கள் பற்றிய அவர்களது கருத்தினை உருவாக்குவதற்கு இயலச் செய்வதற்கு எவை பொருத்தமானது என அவர்கள் கருதினார்களோ அவை எதுவாக இருப்பினும் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டிருந்தனர்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவுக்கெட்டிய வரையில், அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் அனைத்தும் நிதியியல் கூற்றுக்களின் பொருட்டு போதுமான விதத்தில் செலுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றனர்.

சபையின் கட்டளைப்படி

ஒப்பம்

**மில்ட்ரெட் பீரிஸ்**
கம்பனி செயலாளர்
2013 யூலை 30

## சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### வகிபாகமும் பொறுப்புக்களும்

சிறிலங்கன் எயார்லையின்சின் சபைக் கணக்காய்வுக் குழுவின் செயற்பரப்பும் பொறுப்புக்களும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட சபைக் கணக்காய்வு பட்டயத்தின் மூலம் ஆளப்படுகின்றது. சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கியமான வகிபாகம் யாதெனில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் சுயாதீனமான மீளாய்வு நிதியியல் அறிக்கையிடல் முறைமை, வியாபார இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துதல் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கம்பனியின் செயன்முறை, வெளிநாட்டுக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு என்பன தொடர்பான பணிப்பாளர் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதற்கு உதவுவதாகும்.

### சபையின் கணக்காய்வுக் குழுவின் அமைப்பும் கூட்டங்களும்

சபைக் கணக்காய்வுக் குழு மூன்று (3) உறுப்பினர்களையும் ஒரு (1) சுயாதீன அவதானிப்பாளரையும் உள்ளடக்கியுள்ளது. 2013 மாச்சு 31இல் உள்ளவாறான உறுப்பினர்கள் திரு. சுசந்த ரத்னாயக்க (தலைவர்) திரு. சனத் உக்வத்தை (உறுப்பினர்) மற்றும் திருமதி. லக்ஷ்மி சங்கக்காரா (உறுப்பினர்) ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. சுயாதீனமான அவதானிப்பாளராக இருந்த திரு. சந்திரபாலா விமானப் போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதியாக விளங்கினார்.

2013 மாச்சு 31இல் முடிவடைந்த நிதியாண்டுப் பகுதியில் சபைக் கணக்காய்வுக் குழு ஐந்து (5) கூட்டங்களை நடத்தியது. முகாமைத்துவ உறுப்பினர்கள் அழைப்பின் பேரில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு விளக்கமளிப்பதற்காக கலந்து கொண்டனர். மேலும், வெளிவாரிக் கணக்காய்வின் தன்மை, செயற்பரப்பு அணுகுமுறை என்பன பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவ அறிக்கைகள் பற்றி மீளாய்வு செய்வதற்காகவும் வெளிக் கணக்காளர் சபையான ஏர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனத்துடன் கூட்டங்களை நடத்தினர்.

### குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள்

சிறிலங்கன் எயார்லையின்சின் குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள் தொழிற்பாடு, சபை கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக அறிவிக்கிறது. குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள் தகவல் முறைமை/ தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் உட்பட உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமானதன்மை, வினைத்திறன் மற்றும் முறைமையின் காத்திரமான தன்மை என்பன பற்றி சுயாதீனமானதும் குறிக்கோள் கொண்டதுமான மதிப்பீடுகளை வழங்கியதுடன் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியளித்தது. குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள், கம்பனி ஒப்படைப்புக்கள் தொடர்பான மதியுரைப் பணிகளையும் வழங்கியது.

### நிதியியல் ஆண்டில் சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கிய நடவடிக்கைகள்

- தகவல் முறைமை/ தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் உட்பட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாகக் கண்டறியப்பட்ட கணக்காய்வு விடயங்கள் மற்றும் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நிலை என்பன பற்றி மீளாய்வு செய்யப்பட்டது.

- பணிகள் எதிர்பார்க்கப்படுகின்ற மட்டத்தில் கட்டுப்பாடுகளின் சிறந்த முறைமைகள் மற்றும் தடங்கலற்ற வியாபாரத் தொழிற்பாடுகள் ஆகிய நோக்கங்களுக்காக கம்பனியின் அனைத்துக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் ஆவணப்படுத்தும் பொருட்டு கம்பனி கைநூல் செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினைப் பணித்தது.

- நிலையங்களினது செயன்முறைகளின் கட்டுப்பாட்டு பலயீனங்களை அடையாளம் காண்பதற்காக இந்தியா மற்றும் மத்திய கிழக்கிலுள்ள நிலையங்களின் நிலையக் கணக்காய்வுகளை வெளிமூலங்களிடம் கையளிக்க விதந்துரைக்கப்பட்டது.

- வியாபார இடர்நேர்வுகளின் தாக்கத்தினைத் தணிப்பதற்காக முக்கிய கம்பனி மட்ட இடர்நேர்வுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளை மீளாய்வு செய்தல்.

- வியாபாரத் தடங்கல்கள்/ அனர்த்தங்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளின் தாக்கத்தினைக் குறைக்கும் பொருட்டு, சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் அமைப்பியல் சார்ந்த கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்காக தடங்கலற்ற வியாபாரத் திட்டமொன்றினை உருவாக்குமாறு முகாமைத்துவத்திற்குப் பணிக்கப்பட்டது.

- தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், பாதுகாத்தல், தொடர்பூட்டல், பயன்படுத்தல், வைத்திருத்தல், வெளிவிடுதல் ஆகிய நியதிகளில் எதிர்நோக்கப்பட்ட வியாபாரத்தின் தாக்கத்தினைக் குறைப்பதற்காக கம்பனி தகவல் பாதுகாப்பு கைநூல் மீளாய்வு செய்யப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டது.

- அனைத்துத் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகின்றமை பற்றி தீர்மானிப்பதற்காக காலாண்டு அடிப்படையில் கம்பனியின் இணங்குவிப்பு செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டது.

- வெளிக்கணக்காய்வு அறிக்கையின் பெறுபேறுகளும் அதில் எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சனைகளுக்கான முகாமைத்துவத்தின் பதிலிறுப்புக்களும் மீளாய்வு செய்யப்பட்டன.

- தற்போதுள்ள நிதியியல் அறிக்கையிடல் கட்டமைப்பிலும் பின்பற்றப்படவுள்ள புதிய இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமக் கட்டமைப்பிற்குமிடையிலுள்ள இடைவெளியினை அடையாளம் காணும் பொருட்டு இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நிலையங்களின் இடைவெளிப் பகுப்பாய்வு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டது.

ஒப்பம்

**சுசந்த ரட்ணாயக்கா**
தலைவர் - சபைக் கணக்காய்வுக் குழு
2013 யூலை 24

Ernst & Young
Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka

Tel : +94 11 2463500
Fax Gen : +94 11 2697369
Tax : +94 11 5578180
eysl@lk.ey.com
ey.com

## சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பங்குடமையாளர்களுக்கான சுதந்திரமான கணக்காய்வாளர் அறிக்கை

### நிதியியல் கூற்றுக்கள் மீதான அறிக்கை

கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் ஒன்று திரட்டிய நிதியியல் கூற்றுக்களைக் கொண்ட சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் (கம்பனி) ஒன்று சேர்ந்த நிதியியல் கூற்றுக்களை நாங்கள் கணக்காய்வு செய்திருக்கிறோம். இது 2013 மாச்சு 31ஆம் நாளன்று உள்ளவாறான கம்பனியின் நிதியியல் நிலைமைக்கூற்று, வருமானக்கூற்று, அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்று, அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு மூலதனங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்றுக்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு, ஏனைய விளக்க குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### நிதியியல் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கையின் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிப்பதற்கும் நியாய பூர்வமாக சமர்ப்பிப்பதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் தொடர்பாக பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையைத் தெரிவு செய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

### கணக்காய்விற்கான நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

எமது கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எமது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நாம் இக்கணக்காய்வினை மேற்கொண்டோம். இந்நிதிக்கூற்றுக்கள் பாரிய தவறுகளைக் கொண்டிருக்கவில்லை என்பது தொடர்பாக நியாயமாக உறுதிப்படுத்தக் கூடியவாறு கணக்காய்வினை திட்டமிட்டு செயற்படுத்துவது இந்நியமத்தின் பிரகாரம் அவசியமானதாகவுள்ளது.

கணக்காய்வொன்று பரீட்சிப்பு, பரீட்சை அடிப்படை, நிதியியல் கூற்றுக்களிலுள்ள தொகைகள், வெளிப்படுத்தல்கள் என்பன தொடர்பான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. கணக்காய்வு பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளின் மதிப்பிடல், முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் அதேபோன்று ஒட்டுமொத்த நிதியியல்கூற்று முன்வைத்தலின் மதிப்பீடு என்பனவற்றையும் உள்ளடக்குகிறது.

எமது சிறந்த அறிவிற்கெட்டிய வரையில் நாம் கணக்காய்வு நோக்கங்களுக்கு அவை அவசியமானவை எனவும் நம்பும் அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றிருக்கின்றோம். ஆகவே, எமது அபிப்பிராயத்திற்கான போதுமான அடிப்படையினை எமது கணக்காய்வு வழங்குகிறது என நம்புகிறோம்.

### அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தின்படி, எமது பரீட்சிப்புக்களிலிருந்து இதுவரை காணப்பட்டவற்றின்படி, 2013 மாச்சு 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனி சரியான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணி இருப்பதுடன், நிதியியல்கூற்றுக்கள், 2013 மாச்சு 31இல் உள்ளவாறான, உண்மையான தன்மையினையும் கம்பனியினது அலுவல்களின் நிலையினது நியாயமான நோக்கினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான இழப்புக்களையும் காசுப்பாய்ச்சல்களையும் தருகின்றன.

எமது அபிப்பிராயத்தின்படி, திரட்டிய நிதியியல்கூற்றுக்கள் 2013 மாச்சு 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமையின் உண்மையானதும் நியாயமானதுமான நோக்கொன்றினைத் தருவதுடன் இதுவரை கம்பனியின் பங்குடமையாளர்களைப் பொறுத்தவரையில், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க கம்பனியினதும் அதனுடன் தொடர்பான துணை நிறுவனத்தினதும் அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான இழப்புக்களையும் காசுப்பாய்ச்சலையும் தருகின்றது.

எமது அபிப்பிராயத்தினை உறுதிப்படுத்தாமல் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ள குறிப்பு 2.1.2 இற்கு கவனத்தினை ஈர்க்கின்றோம்.

### மற்றைய சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் மீதான அறிக்கை

எமது அபிப்பிராயத்தின்படி இந்நிதியியல்கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 151(2) மற்றும் 153(2) இலிருந்து 153(7) வரையான பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றன.

ஒப்பம்

ஏர்னஸ்ட் அன்ட் ஐங்
பட்டயக் கணக்காளர்கள்
2013 யூலை 30
கொழும்பு

நிதியியல் நிலைமைக்கூற்று
2013 மாச்சு 31இல் உள்ளவாறு

| | குறிப்பு | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ஏப்.1 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ஏப்.1 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| சொத்து, பொறி மற்றும் சாதனம் | 3 | 8,154.80 | 7,234.01 | 4,647.69 | 6,380.13 | 5,312.22 | 2,558.82 |
| முக்கிய திருத்தல், விமான எந்திரங்களின் தரமுயர்த்தல் | 4 | 11,430.46 | 6,684.88 | 6,080.36 | 11,430.46 | 6,684.88 | 6,080.36 |
| விமானப் பேணல் ஒதுக்கு | 5 | 13,570.76 | 15,209.12 | 8,763.58 | 13,570.76 | 15,209.12 | 8,763.58 |
| விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | | 2,967.38 | 3,056.59 | 2,113.03 | 2,967.38 | 3,056.59 | 2,113.03 |
| அருவச் சொத்து | 6 | 150.91 | 60.53 | 111.69 | 150.74 | 60.20 | 110.07 |
| முதலீடுகள் | 7.2 | 0.40 | 13,370.21 | 0.40 | 42.44 | 13,412.25 | 42.44 |
| | | 36,274.71 | 45,615.34 | 21,716.75 | 34,541.91 | 43,735.26 | 19,668.30 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| இருப்புக்கள் | 8 | 5,021.85 | 4,513.76 | 4,490.19 | 4,664.89 | 4,232.38 | 4,259.99 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை | 9 | 15,320.25 | 14,233.25 | 10,781.06 | 14,509.85 | 13,498.51 | 10,282.99 |
| விமானப் பேணல் ஒதுக்கு | 5 | 6,331.17 | 2,608.50 | 2,506.16 | 6,331.17 | 2,608.50 | 2,506.16 |
| விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | | 160.97 | - | - | 160.97 | - | - |
| முதலீடுகள் | 7.1 | 25,597.78 | - | - | 25,597.78 | - | - |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 10.1 | 3,681.67 | 2,027.65 | 1,757.24 | 3,640.56 | 1,733.32 | 1,455.17 |
| | | 56,113.69 | 23,383.16 | 19,534.65 | 54,905.22 | 22,072.71 | 18,504.31 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 92,388.40 | 68,998.50 | 41,251.40 | 89,447.13 | 65,807.97 | 38,172.61 |
| **பங்கு மூலதனம் மற்றும் இலாபங்கள்** | | | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11 | 32,032.75 | 19,432.67 | 5,146.35 | 32,032.75 | 19,432.67 | 5,146.35 |
| ஒதுக்குகள் | 12 | 1,549.42 | 1,780.59 | 1,840.05 | 877.71 | 1,108.88 | 1,168.34 |
| ஒன்றுசேர்ந்த இழப்பு | | (40,742.59) | (18,163.18) | (766.65) | (44,606.16) | (22,789.94) | (2,823.76) |
| **மொத்தப் பங்கு மூலதனம்** | | (7,160.42) | 3,050.08 | 6,219.75 | (11,695.70) | (2,248.39) | 3,490.93 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 13 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | - | - | - |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 14 | 26,373.61 | 3,752.26 | 1,824.63 | 27,210.76 | 4,595.47 | 2,645.96 |
| ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 15 | 5,531.49 | 5,232.48 | 4,211.97 | 5,247.39 | 4,962.06 | 3,990.46 |
| | | 32,905.10 | 9,984.74 | 7,036.60 | 32,458.15 | 9,557.53 | 6,636.42 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | 16 | 48,627.15 | 46,550.59 | 21,121.67 | 50,509.90 | 48,906.30 | 21,510.26 |
| செலுத்தத்தக்க வருமான வரி | | 230.46 | 211.03 | 204.98 | 175.45 | 175.45 | 175.45 |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 14 | 17,786.11 | 9,202.06 | 6,668.40 | 17,999.33 | 9,417.08 | 6,359.55 |
| | | 66,643.72 | 55,963.68 | 27,995.05 | 68,684.68 | 58,498.83 | 28,045.26 |
| **மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | 92,388.40 | 68,998.50 | 41,251.40 | 89,447.13 | 65,807.97 | 38,172.61 |

இந்நிதியியல்கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்
நிதித் தலைவர்

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாக இருக்கின்றது. சபைக்காவும் சபையின் சார்பாகவும் பின்வருவோரினால் ஒப்பிடமிடப்படுகின்றது.

ஒப்பம்
பணிப்பாளர்

ஒப்பம்
பணிப்பாளர்

28ஆம் பக்கத்திலிருந்து 67ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

கொழும்பு
2013 யூலை 30

வருமானக்கூற்று
2013 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு

| | குறிப்பு | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 18 | 121,407.66 | 94,638.60 | 119,570.90 | 92,867.93 |
| விற்பனைக் கிரயம் | | (129,688.50) | (100,451.90) | (131,598.38) | (101,830.07) |
| மொத்த (இழப்பு)/ இலாபம் | | (8,280.84) | (5,813.30) | (12,027.48) | (8,962.14) |
| ஏனைய வருமானம் மற்றும் நன்மைகள் | 19 | 1,615.83 | 1,196.66 | 4,155.05 | 421.70 |
| விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முறை | | (9,851.25) | (7,472.11) | (9,851.25) | (7,472.12) |
| நிருவாகச் செலவுகள் | | (4,421.46) | (3,723.27) | (2,522.64) | (2,473.68) |
| நிதிச் செலவு | 20.1 | (3,222.38) | (1,642.30) | (3,138.40) | (1,537.89) |
| நிதி வருமானம் | 20.2 | 1,656.56 | 256.90 | 1,634.97 | 249.40 |
| **வரிக்கு முன்னைய இழப்பு** | 21 | (22,503.54) | (17,197.43) | (21,749.75) | (19,774.74) |
| வருமான வரிச் செலவு | 22 | (15.24) | (10.95) | - | (3.29) |
| **ஆண்டிற்கான இழப்பு** | | (22,518.78) | (17,208.38) | (21,749.75) | (19,778.03) |

28ஆம் பக்கத்திலிருந்து 67ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்று
2013 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு

| | குறிப்பு | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான இழப்பு** | | (22,518.78) | (17,208.38) | (21,749.75) | (19,778.03) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | | | |
| ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு மீதான கணிப்பீட்டு இழப்பு | 15.1 | (60.63) | (188.15) | (66.47) | (188.15) |
| காணி மற்றும் கட்டடத்தின் மீள்மதிப்பீடு | 12.1 | - | 736.67 | - | 736.67 |
| விற்பனை முதலீடுகளின் மீது கிடைக்கத்தக்கவற்றின் மீதான தேறிய இழப்பு | 12.3 | (231.17) | (796.13) | (231.17) | (796.13) |
| **வரி நீங்கலாக, ஆண்டிற்கான மொத்த ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | (291.80) | (247.61) | (297.64) | (247.61) |
| **வரி நீங்கலாக, ஆண்டிற்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | (22,810.58) | (17,455.99) | (22,047.39) | (20,025.64) |

28ஆம் பக்கத்திலிருந்து 67ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

பங்குரிமை மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று
2013 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு

| குழுமம் | குறிப்பு | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | விற்பனை ஒதுக்குகளுக்காக கிடைக்கத் தக்கவை | வருமான ஒதுக்கு | பொது ஒதுக்கு | ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **2011 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி** | | 5,146.35 | 1,785.98 | - | 0.63 | 53.44 | (766.65) | 6,219.75 |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | - | (17,208.38) | (17,208.38) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | 736.67 | (796.13) | - | - | (188.15) | (247.61) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | 736.67 | (796.13) | - | - | (17,396.53) | (17,455.99) |
| பங்கு மூலதனத்திற்கான முற்பணம் | 11 | 14,286.32 | - | - | - | - | - | 14,286.32 |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | | 19,432.67 | 2,522.65 | (796.13) | 0.63 | 53.44 | (18,163.18) | 3,050.08 |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | - | (22,518.78) | (22,518.78) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | - | (231.17) | - | - | (60.63) | (291.80) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | - | (231.17) | - | - | (22,579.41) | (22,810.58) |
| பங்கு மூலதனத்திற்கான முற்பணம் | 11 | 12,600.08 | - | - | - | - | - | 12,600.08 |
| **2013 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | | 32,032.75 | 2,522.65 | (1,027.30) | 0.63 | 53.44 | (40,742.59) | (7,160.42) |

| கம்பனி | குறிப்பு | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | விற்பனை ஒதுக்குகளுக்காக கிடைக்கத் தக்கவை | வருமான ஒதுக்கு | பொது ஒதுக்கு | ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **2011 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி** | | 5,146.35 | 1,114.27 | - | 0.63 | 53.44 | (2,823.76) | 3,490.93 |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | - | (19,778.03) | (19,778.03) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | 736.67 | (796.13) | - | - | (188.15) | (247.61) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | 736.67 | (796.13) | - | - | (19,966.18) | (20,025.64) |
| பங்கு மூலதனத்திற்கான முற்பணம் | 11 | 14,286.32 | - | - | - | - | - | 14,286.32 |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | | 19,432.67 | 1,850.94 | (796.13) | 0.63 | 53.44 | (22,789.94) | (2,248.39) |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | - | (21,749.75) | (21,749.75) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | - | (231.17) | - | - | (66.47) | (297.64) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | - | - | (231.17) | - | - | (21,816.22) | (22,047.39) |
| பங்கு மூலதனத்திற்கான முற்பணம் | 11 | 12,600.08 | - | - | - | - | - | 12,600.08 |
| **2013 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | | 32,032.75 | 1,850.94 | (1,027.30) | 0.63 | 53.44 | (44,606.16) | (11,695.70) |

28ஆம் பக்கத்திலிருந்து 67ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்று

2013 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு

| | குறிப்பு | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| வருமான வரிச் செலவுகளுக்கு முன்னான இழப்பு | | (22,503.54) | (17,197.43) | (21,749.75) | (19,774.74) |
| பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள் | | | | | |
| தேய்மானம்/ பதிவழிப்பு | | 4,522.77 | 3,689.90 | 4,256.71 | 3,434.06 |
| நிதிச் செலவு | 20.1 | 3,222.38 | 1,642.30 | 3,138.40 | 1,537.89 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனை மீதான இழப்பு | | 2.90 | 8.87 | 6.48 | 8.87 |
| நிதி வருமானம் | 20.2 | (1,656.56) | (256.90) | (1,634.97) | (249.40) |
| பங்கிலாப வருமானம் | | - | - | (150.00) | (150.00) |
| அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டினை மாற்றிப்பதிதல் | | (47.58) | - | (47.58) | - |
| மெதுவாக அசையும் இருப்பிற்கான ஏற்பாடு | | 211.07 | 101.40 | 211.07 | 101.40 |
| பேணல் ஒதுக்குகளின் ஐய அறவிடல்களுக்கான ஏற்பாடு - வட்டி நீங்கலாக | | 972.53 | 148.69 | 972.53 | 148.69 |
| தேறல் செய்யப்படாத செலாவணி (இலாபம்)/ இழப்பு மீதான தாக்கம் | | (1,888.74) | (1,065.21) | (1,823.55) | 49.02 |
| முன்கூட்டிய விற்பனைகளின் மீள்பதிவு | | (967.03) | (3,775.09) | (967.03) | (3,775.09) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 15.1 | 489.28 | 451.20 | 443.42 | 382.14 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னான தொழிற்பாட்டு இழப்பு | | (17,642.52) | (16,252.27) | (17,344.27) | (18,287.16) |
| இருப்புக்களின் அதிகரிப்பு | | (719.16) | (124.97) | (643.58) | (73.79) |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு | | (312.54) | (2,648.11) | (236.83) | (2,424.05) |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு | | 2,579.27 | 27,735.61 | 2,237.08 | 28,922.11 |
| பேணல் ஒதுக்குகளில் அதிகரிப்பு | | (3,297.88) | (4,326.70) | (3,297.88) | (4,326.70) |
| விமானப் பாதுகாப்பு வைப்புக்களில் அதிகரிப்பு | | (91.13) | (552.97) | (91.13) | (552.97) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) உருவாக்கப்பட்ட காசு | | (19,483.96) | 3,830.59 | (19,376.61) | 3,257.44 |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவு | | (2,775.62) | (1,087.41) | (2,568.20) | (917.67) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 15.1 | (246.26) | (112.22) | (219.92) | (92.08) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | - | (13.60) | - | - |
| தொழிற்பாடுகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல் | | (22,444.84) | 2,617.36 | (22,164.73) | 2,247.69 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 1,098.83 | 20.30 | 1,098.83 | 13.42 |
| பங்குகளிலான முதலீடு | | - | (0.87) | - | (0.87) |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் கொள்வனவு | | (2,021.85) | (1,503.93) | (1,904.44) | (1,428.75) |
| எந்திரகளின் பழுதுபார்ப்பிற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | | (8,129.65) | (3,199.40) | (8,129.65) | (3,199.40) |
| அருவச் சொத்துக்களின் கையேற்பு | | (140.78) | (1.55) | (140.24) | (1.40) |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பெறுகைகள் | | 8.38 | 12.60 | 5.42 | 12.60 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | | **(9,185.07)** | **(4,672.85)** | **(9,070.08)** | **(4,604.40)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | | |
| வட்டி உழைக்கின்ற பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவு | | (7,536.70) | (2,548.83) | (9,741.32) | (2,239.87) |
| வட்டி உழைக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகளிலிருந்தான பெறுகைகள் | | 37,966.97 | 5,119.05 | 40,029.71 | 5,119.05 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | | **30,430.27** | **2,570.22** | **30,288.39** | **2,879.18** |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (வீழ்ச்சி)** | | **(1,199.64)** | **514.73** | **(946.42)** | **522.47** |
| **ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **10** | **(3,338.39)** | **(3,853.12)** | **(3,632.72)** | **(4,155.19)** |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **10** | **(4,538.03)** | **(3,338.39)** | **(4,579.14)** | **(3,632.72)** |

28ஆம் பக்கத்திலிருந்து 67ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

## 1. கம்பனித் தகவல்கள்

### 1.1 பொது

**கம்பனி**

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (கம்பனி) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் தொழிற்படும் கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தலமும் எயார்லையின்ஸ் நிலையம், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

**கம்பனி**

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகளின் போக்குவரத்திற்காக சர்வதேச ரீதியாக அட்டவணையிடப்பட்ட, அட்டவணையிடப்படாத வான் பணிகளைத் தொழிற்படுத்துதல், இலங்கைக்கான குறித்துரைக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனமாக சரக்கு மற்றும் அஞ்சல் பணிகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்தில் வான் முனைக் கோடிச் பணிகளை வழங்குதல், விமானத்தில் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, விடுமுறைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு பயண வசதிப் பொதிகளைச் சந்தைப்படுத்தல், பயணிகள் போக்குவரத்திற்காக உள்நாட்டு வான் டக்சி பணிகளைத் தொழிற்படுத்தல் என்பன ஏனைய முக்கிய பணிகளுக்குள் உள்ளடங்குகின்றன. மூன்றாம் தரப்பினருக்கு பராமரிப்புப் பணிகளை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு பணிகள் மற்றும் வான் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளுள் அடங்குகின்றன.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

துணை நிறுவனத்தின் பிரதான நடவடிக்கை யாதெனில் ("துணை நிறுவனம்") பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் தொழிற்படுகின்ற வான் நிறுவனங்களுக்கு பறப்புக்களுக்குள்ளேயான உணவு வசதிகளை வழங்குவதாகும். மற்றைய துணை நடவடிக்கைகள் பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை நடத்துதல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான சுற்றுலா விடுதியை முகாமைப்படுத்தல் என்பன உள்ளடங்குகின்றன.

### 1.3 வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2013 மாச்சு 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2013 யூலை 30ஆம் திகதியில் இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கிணங்க வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

குழுமத்தின் திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கை நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

2012 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு உட்பட அனைத்துக் காலப்பகுதிகளுக்குமாக குழுமம் தயாரித்த நிதியியல் கூற்றுக்கள் 2012 மாச்சு 31இற்கு ஏற்புடைத்தான விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டன. 2013 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டிற்காக இந்நிதியியல் கூற்றுக்கள் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்திற்கிணங்க குழுமம் தயாரித்த முதலாவது நிதியியல் அறிக்கையாகும் (மாற்றத்திற்கான விளக்கத்திற்கு குறிப்பு 2.6 இனைப் பார்க்கவும்).

இக்கொள்கைகள் நடைமுறையில் இருந்தபோதெல்லாம் குழுமமானது 2011 ஏப்பிறலில் இருந்த நிதியியல் நிலைமையின் ஆரம்ப இலக்கை நிதியியல் அறிக்கையிடல் நியமக் கூற்றினைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் காலங்களுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகித்திருக்கிறது.

சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டிருக்கும் காணி, கட்டடம் மற்றும் விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்கள் தவிர்ந்த கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் வரலாற்று அடிப்படையிலான செலவு அடிப்படை தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளதுடன் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, அனைத்துப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாவிற்கு அணித்தான முழு எண்ணிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

#### 2.1.1 இணங்குவிப்பு கூற்று

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டது. இந்நிதியங்களின் தயாரிப்பும் சமர்ப்பிப்பும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க மேற்கொள்ளப்பட்டன.

### 2.1.2 தொடர்ந்து செல்லும் கரிசனை

நடப்பாண்டு காலப்பகுதியில் கம்பனி ரூ.44,606.18 மில்லியன் ஒன்று சேர்ந்த இழப்பினை (2012 - ரூ.22,789.94 மில்லியன்) பதிவு செய்ததன் காரணமாக கம்பனி ரூ.21,749.75 மில்லியன் (2012 - 19,778.03 மில்லியன்) கொண்ட இழப்பினைப் பதிவு செய்தது. மேலும், கம்பனியின் நடப்புப் பொறுப்புக்கள் இதன் நடைமுறைச் சொத்துக்களை ரூ.13,779.46 மில்லியனால் (2012 - 36,426.12 மில்லியன்) விஞ்சியதுடன் அறிக்கையிடும் நாளன்று உள்ளவாறு கம்பனியின் மொத்த பங்கு மூலதனம் ரூ.11,695.70 மில்லியன் கொண்ட எதிர்க்கணியப் பெறுமதிக்கு (2012 - எதிர்க்கணிய பெறுமதி ரூ.2,248.39 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

இதில் கடந்த அண்மைக் காலத்தில் உலகளாவிய வான் போக்குவரத்து தொழில் துறையின் செயலாற்றத்தில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சி ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியிலும் தொடர்ந்தது. எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஐரோப்பாவின் மந்த நிலை என்பன கம்பனியின் செயலாற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கிய வெளிவாரிக் காரணங்களில் சிலவாகும். எனினும், இவ்வெளிவாரிக் காரணிகளின் எதிர்மறையான தாக்கத்தினைத் தணிப்பதற்கு ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் கம்பனி பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டதுடன் இவற்றின் பெறுபேறு எதிர்காலத்தில் அடையப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2011 யூலையில் கம்பனிக்காக ஒப்புதலளிக்கப்பட்ட மீள் மூலதனமயப்படுத்தப்பட்ட திட்டத்தின்படி, இலங்கை அரசாங்கம் கம்பனிக்கு ரூ.12,600.08 மில்லியன் கொண்ட மூலதன உள்ளீட்டினை (2012இல் - ரூ.14,286.32 மில்லியன்) வழங்கியதன் மூலம் அதன் கடப்பாட்டினைத் தொடர்ந்தும் எடுத்துக்காட்டியது. இந்நிதியிடல் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் மூலதன உள்ளீடு கம்பனியின் நிதியியல் நிலைமையினையும் பலப்படுத்தியது. எனினும், அத்தகைய உள்ளீடுகள் திரவ காசு வடிவில் இல்லாததன் காரணமாக காசு தடங்கல்கள் தொடர்பான சவால்கள் தொடர்ந்தும் காணப்பட்டன. காசுத் தடங்கல்கள் விரிவாக்கம்/ நவீனமயப்படுத்தல் மற்றும் அதன் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கான கம்பனியின் திட்டங்களைப் பாதித்தன. சாதகமானதொரு குறிப்பாக, அறிக்கையிடப்பட்ட திகதியைத் தொடர்ந்து காசினைத் திரட்டுவதற்காக குறிப்பிடப்பட்ட திறைசேரி முறிகள் கம்பனியினால் பயன்படுத்தப்பட்டன (நிதியாண்டு 2013/2014 இலிருந்து). இதன் விளைவாக அத்தகைய காசுப் பெறுகைகள் காசுப்பாய்ச்சல் நிலைமையினை பெருமளவிற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சவால்கள் காணப்பட்ட போதும், தொழிற்பாட்டு வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டும் வாடிக்கையாளர்களுக்கு போட்டித்தன்மை மிக்கச் சாதனங்களை வழங்கும் பொருட்டும் கடந்த மூன்றாண்டு காலப்பகுதிக்கும் மேலாக விமான நிறுவனத்தினை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்தவும் தேவையான உட்கட்டமைப்பிற்காகவும் கம்பனி குறிப்பிடத்தக்க முதலீடுகளை மேற்கொண்டிருக்கிறது. இக்குறிக்கோளுடன் இசைந்து செல்லும் விதத்தில், அறிக்கையிடும் நாளன்று சராசரியாக 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமை வாய்ந்த, குறிப்பாக அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களான ஆறு 340 - 300 விமானங்களுக்குப் பதிலாக இவ்வாண்டுப் பகுதியில் மீள்தொகுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கம்பனி தீர்மானித்தது. இப்பழைய விமானங்கள் 2014/15 இன் மூன்றாம் காலாண்டிற்கும் 2015/16 மூன்றாம் காலாண்டுப் பகுதிக்குமிடையில் அவற்றின் குத்தகைக் காலம் முடிவடையும் வேளையில் இரட்டை எந்திரங்களைக் கொண்டு A330 - 300 நவீன விமானத் தொகுதிகளின் மூலம் அகற்றப்படும். இது மிக இன்றியமையாததாகக் காணப்படும் தொழிற்பாட்டு வினைத்திறனைக் கொண்டு வரும் என்பதுடன் (எரிபொருள் செலவினையும் பேணல் செலவினையும் குறைக்கும்) விமான நிறுவனம்; போட்டி விமான நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பணிகளுக்குச் சமனான அல்லது அவற்றைவிடவும் சிறந்ததான நவீன பயணிகள் வசதிகளுடன் கூடிய சாதனங்களை வழங்கக்கூடிய நிலைமையினையும் ஏற்படுத்தும். இம்மீள் தொகுதிப்படுத்தல் நடவடிக்கைகள் எதிர்கால வருமான உருவாக்க இயலளவில் குறிப்பிடத்தக்களவு சாதகமான அபிவிருத்தியொன்றினை ஏற்படுத்தும் என கம்பனி எதிர்பார்க்கிறது.

இவ்வாண்டுப் பகுதியில் கம்பனி, ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கு மற்றும் தென்னாசியாவிலுள்ள இலாபம் மிக்க சேரிடங்களுக்கு மீண்டும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இந்தியாவிற்கான வலையமைப்பினை வலுப்படுத்தல் போன்ற பல முக்கியமான வேறு பல தொழிற்பாட்டுத் தீர்மானங்களையும் மேற்கொண்டது. வழித்தட வலையமைப்பு உச்சப்படுத்தப்பட்டமை 2014இன் தொடக்கப் பகுதியில் வண்வேர்ள்ட் எலையின்சில் நுழைவதற்குத் திட்டமிட்டுள்ளமையுடன் இணைந்து கம்பனியின் வருமான உருவாக்க இயலளவினை உத்வேகமடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே நேரத்தில் புதிய பயணிகள் பணிகள் முறைமை நடைமுறைப்படுத்தப்படுவதும் (அமடியூசின் அல்ரி முறைமை) தொழிற்பாட்டு வினைத்திறனை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் எதிர்காலத்திற்கான இலங்கை அரசாங்கத்தின் தொலைநோக்கு மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், தேசிய போக்குவரத்து நிறுவனம் என்ற முறையில் சிறிலங்கன் எயார்லையின்ஸ் இத்தேசிய குறிக்கோள்களை அடைவதற்கு வலுவான முறையில் பங்களிப்பதற்கு எண்ணியுள்ளது. இதற்கமைய அகன்ற உடலமைப்பினைக் கொண்ட மீள்தொகுதிப்படுத்தல் திட்டங்கள் மற்றும் மூலதன உள்ளீடு மூலமாக அரசாங்கத்திடமிருந்தான தொடர்ச்சியான உதவி போன்ற குறிப்பிடத்தக்க வெளிவாரி மற்றும் உள்ளக அபிவிருத்திகளை பரிசீலனையில் கொண்டு ஐந்தாண்டு வியாபாரத் திட்டம் இற்றைப்படுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவு, கம்பனியின் புதுமெருகூட்டப்பட்ட வியாபாரத் திட்டம் என்பனவற்றின் அடிப்படையில், கம்பனி அதன் நிதியியல் நிலைமையினை மேம்படுத்தும் எனவும் எதிர்வுகூறத்தக்க

எதிர்காலமொன்றில் இடம்பெற்றுவரும் கரிசனைகளின் அடிப்படையில் தொழிற்பாடுகளைத் தொடர்வதிலும் பணிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

**2.2 ஒன்று திரட்டலுக்கான அடிப்படை**

ஒன்று திரட்டிய நிதியியல்கூற்றுக்கள், சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டினதும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டினதும் நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளன. அதே அறிக்கையிடும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள துணை நிறுவனத்தின் நிதியியல்கூற்றுக்கள் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஒத்துச் செல்லும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி தாய்க் கம்பனியினதைப் போன்றே தயாரிக்கப்பட்டுள்ளன.

குழுமத்திற்குள்ளேயான குறிப்பிடத்தக்க நிலுவைகள், கொடுக்கல்வாங்கல்கள், வருமானம் மற்றும் செலவுகள், இலாபம் மற்றும் இழப்புக்கள், குழுமத்திற்குகிடையேயான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றுகின்ற பங்கிலாபங்கள் என்பன முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

துணை நிறுவனமானது கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து அதாவது அதன் கட்டுப்பாடு தொடங்கிய திகதியிலிருந்து முழுமையாக ஒன்று திரட்டப்பட்டதுடன் அதன் கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட திகதி வரை தொடர்ந்தும் திரட்டப்பட்டது.

**2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருதுகோள்களும் தீர்வுகளும்**

குழுமத்தின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, அறிக்கையிடும் திகதியன்றுள்ள அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் தொகை, பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு மற்றும் வெளிப்படுத்துகை என்பனவற்றைப் பாதிக்கும் தீர்ப்பு, மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பனவற்றை முகாமைத்துவம் பேணுவதனைத் தேவைப்படுத்துகின்றது. முக்கியமான தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் இணைந்த கருதுகோள்கள் தற்போதைய அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சம்பவங்கள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவங்களையும் மற்றைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

விடயம் சார்ந்த மற்றைய விடயங்களிடையே பின்வரும் முக்கிய தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

(அ) தீர்ப்பு

(i) தொடர்ந்து செல்லும் கரிசனை

குறிப்பு 2.1.2 இல் வெளிப்படுத்தப்பட்டவாறு இந்நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து வரும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ii) எதிர்பாராத பொறுப்புக்கள் - வழக்காடல்கள்

நடப்பு நிதி ஆண்டின் முடிவில் குழுமம் குறிப்பு 23இல் வெளிப்படுத்தப்பட்டவாறு பல்வேறு தரப்பினருடனுமான பல்வேறுபட்ட வழக்குகளை நிலுவையில் வைத்திருந்தது. பணிப்பாளர் சபை கம்பனியின் சொலிசிஸ்டர்களுடன் மேற்கொண்ட தகுந்த ஆலோசனைகளின் பின்னர், ஒவ்வொரு வழக்கினதும் தகுதியினை மதிப்பிட்டு, எதிர்காலத்தில் மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று ஏற்படக்கூடிய சாத்தியமிருக்கும் என தீர்மானித்த பொழுது தேவையான ஒதுக்கங்களை மேற்கொண்டது.

(iii) தொழிற்படுகின்ற குத்தகைகள்

விமானங்கள் மற்றும் எந்திரங்கள் தொடர்பாகக் கம்பனி வர்த்தகரீதியான குத்தகை ஒழுங்குகளை மேற்கொண்டது. இணங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், கம்பனியானது அனைத்து முக்கியமான இடர்நேர்வுகளையும் அத்தகைய சொத்துரிமை நன்மைகளையும் பிடித்து வைத்திருக்காத விதத்தில் இது உருவாக்கப்பட்டிருக்குமிடத்து அவை தொழிற்பாட்டுக் குத்தகைகள் என அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) மதிப்பீடுகள்

(i) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பனவற்றின் தேய்மானம்

சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு மற்றும் அச்சொத்துக்கள் பொருளாதார ரீதியாக பயன்படும் காலம் என்பனவற்றின் அடிப்படையில் முகாமைத்துவம், சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களுக்கு பயன்படக்கூடிய காலம் மற்றும் மீதிப் பெறுமதி என்பனவற்றை வழங்குகின்றது. ஒவ்வொரு ஐந்தொகை நாளன்றும் முகாமைத்துவம் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க வாழ்நாள் காலம் மற்றும் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்து முன்னைய மதிப்பீடுகள் மற்றும் இச்சொத்துக்களின் விடயங்களை செயன்முறைப்படுத்துகின்ற முன்னைய மதிப்பீடுகள் மற்றும் பொருளாதார நன்மைகளின் நுகர்வு மாதிரி என்பனவற்றுடன் ஒத்துச்செல்வதனையும் உறுதிப்படுத்தியது. பயனுள்ள வாழ்நாள் காலம் மற்றும் இச்சொத்துக்களின் மீதிப் பெறுமதி என்பனவற்றின் மாற்றங்கள் எதிர்கால தேய்மானத்தின் விதிப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். (கொள்கை 2.4.3 (ஆ) இனைப் பார்க்கவும்).

(ii) விமான எந்திரங்களின் முக்கிய பழுதுபார்த்தல் செலவுகளைப் பதிவழித்தல்

இணங்கப்பட்ட குத்தகை நியதிகளுக்கிணங்க எந்திரங்கள் மற்றும் தரையிறங்கும் சாதனங்கள் தொடர்பாக பாரிய பராமரிப்பு பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் வேண்டுமெனக் கம்பனி தேவைப்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்குத் தயாராக இருக்கும் பொழுது கம்பனி அத்தகைய செலவுகளை பெற்றுக் கொள்கிறது. பெற்றுக் கொள்ளப்படக் கூடிய செலவுகள் விற்பனையாளரின் பொருட்பட்டியல் இல்லாதவிடத்து செய்யப்படும் சிறந்த மதிப்பீடுகள் மற்றும் அத்தகைய பரிசோதனைகளுக்கான வரவுக் குறிப்புக்கள் மற்றும் முன்நிதியிடல் என்பனவற்றைக் கணக்கில் எடுத்தல் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஏற்பட்ட செலவுத் தொகைக்கும் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைக்குமிடையே ஏதாவது சாத்தியமான வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவை முக்கியமான விடயமாகக் கருதப்படமாட்டாது. அதன் பின்னர், அத்தகைய செலவு பாரிய பராமரிப்பு பரிசோதனைகள் மற்றும் குறிப்பிட்ட குத்தகைக் காலம் போன்றவற்றிற்கிடையிலான மதிப்பிடப்பட்ட பறப்பு மணித்தியாலங்கள்/ சுற்றுக்கள் என்பனவற்றைக் குறைப்பதன் மூலம் தீர்க்கப்படும்.

(iii) அடிக்கடி பறக்கும் பிளையர் நிகழ்ச்சித்திட்டம்

கம்பனி அடிக்கடி பறப்பவர்களுக்காக பிளைஸ் ஸ்மைல் என்ற நிகழ்ச்சித்திட்டத்தினை தொழிற்படுத்துகிறது. இது, ஒன்றுசேர்ந்த மொத்த மைல்களின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்கு பயண விருதுகளை வழங்குகிறது. பயணிகளின் வருமானத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி வழங்கப்படும் அடிக்கடி பறப்பவர்களுக்கான நன்மைகள் அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்பட்டன. வருமானத்தினைப் பிற்போடுதல், மீட்பினது வரலாற்றுப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட மீட்பானது இந்நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாடுகளை எறிவு செய்வதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டது. வழங்கப்பட்ட இந்நன்மைகளின் சந்தைப் பெறுமதி, தொடர்பான பணிகளின் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இதற்காக வழங்கப்படும் கொடுகடனும் மீட்கப்படத்தக்கவையாக இருக்கும். இம்மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடுகின்ற திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொறுப்புக்களும் அதற்கேற்ப சீராக்கப்படுகின்றன.

(iv) பராமரிப்பு ஒதுக்கு

பராமரிப்புத் தொடர்பான இணங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில், தொழிற்படுகின்ற குத்தகைகளின் கீழுள்ள பல்வேறு வானூர்திகள் மற்றும் எந்திரங்களின் பேரில் கம்பனியானது குத்தகைக்காரர்களுக்கு கொடுப்பனவினைச் செய்கிறது. இம்மாதாந்த கொடுப்பனவுகள் பறக்கும் மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அறவிடத்தக்க தொகை தொடர்பான சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் முகாமைத்துவம் அறவிடத்தக்க அத்தகைய கொடுப்பனவுகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதித் தொகை அளவிடத்தக்க தொகையினைவிட விஞ்சும் பொழுது சொத்தின் பெறுமதி இழப்புக் கூடியது எனக் கருதப்படுவதுடன் அதன் அளவிடத்தக்க தொகைக்குப் பதிவழிப்பு செய்யப்படுகிறது. (குறிப்பு 5 இனைப் பார்க்கவும்)

(v) இருப்புக்கள்

பூர்வாங்க இருப்புக் கணக்கெடுத்தல் அடிப்படையில் கம்பனி இருப்புக்களின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. பழைய இருப்பு அத்துடன்/ அல்லது அறவிடத்தக்க பெறுமதியின் மதிப்பிடத்தக்க குறைப்பு பற்றி முகாமைத்துவம் தீர்மானிக்கும் பொழுது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (குறிப்பு 8 இனைப் பார்க்கவும்)

(vi) நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கும் தன்மை

குழுமமானது ஏதேனும் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி பெறுமதி இழக்கக்கூடியதாகவுள்ளது என்பதற்கு ஏதேனும் சான்று பொருட்கள் உள்ளனவா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மதிப்பீடு செய்கிறது. முகாமைத்துவமானது அத்தகைய பெறுமதி இழப்புக்களை மதிப்பிடுவதற்கு அவை வெளிநின்ற காலப்பகுதியினையும் அறவிடல்கள் ஐயத்திற்குரியவை என்பதனை எடுத்துக்காட்டும் ஏனைய காரணிகளையும் பரிசீலனையில் கொண்டு அவற்றைப் பயன்படுத்துகிறது.

(இ) கருதுகோள்கள்

(i) வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டம்

இலங்கையிலுள்ள அலுவலர்களின் ஓய்வுகால நன்மைகள் திட்டத்தின் செலவு உண்மையான மதிப்பீட்டினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. உண்மையான பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதம், சிறப்பு இலாபக் கட்டணம், ஓய்வு பெறும் வயது மற்றும் தற்பொழுது நடைபெற்று வரும் கம்பனியின் தொழிற்பாடு என்பனவற்றைக் கருத்திற் கொண்ட கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திட்டத்தின் நீண்டகால தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன. (குறிப்பு 2.4.15 இனைப் பார்க்கவும்)

(ii) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள், சுதந்திரமான தகுதி வாய்ந்த மதிப்பிட்டாளரொருவரின் பணியினைப் பயன்படுத்தி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அறவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் சந்தைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு கருதுகோள்களையும் மதிப்பீட்டு தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டிற்கான அடிப்படைக் குறிப்பு 3இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு

### 2.4.1 வெளிநாட்டு நாணய மாற்று

நிதியியல்கூற்றுக்கள் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான தொழிற்பாட்டு நாணய வீதத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகை நாளில் நிலவும் செலாவணியின் தொழிற்பாட்டு நாணய வீதத்தில் மீள மாற்றப்படுகின்றன. அதன் மூலம் தோன்றிய வெளிநாட்டுச் செலாவணி இலாபம் மற்றும் இழப்புக்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான செலவின் நியதிகளில் அறவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள் ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றல் செய்யப்பட்டன.

### 2.4.2 வரி விதிப்பு

(i) நடைமுறை வருமான வரி

**கம்பனி**

(அ) **உள்ளூர் வரி விதிப்பு**

1994 ஓகத்தில் கம்பனிக்கு பாரிய சிறப்பு நிலைக் கம்பனி என்ற அந்தஸ்து இலங்கை முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்டது. அது அப்போதைய கால கட்டத்தில் காணப்பட்ட வரி விலக்கினை 1998 மாச்சு 31ஆம் நாள் வரை நீடித்தது. 1998 மாச்சில் இலங்கை முதலீட்டுச் சபை வரி விலக்கினை 2013 மாச்சு 31 வரை மேலும் நீடித்தது. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2011 பெப்புருவரியில் கம்பனி அதன் வியாபார நடவடிக்கைகள் அனைத்திற்கும் 2011 ஏப்பிறல் 1இலிருந்து 2021 மாச்சு 31 வரையான 10 ஆண்டு காலப்பகுதிக்கு வரி விலக்கினைப் பெற்றது.

(ஆ) **வெளிநாட்டு வரி விதிப்பு**

கம்பனி இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் மேற்கொள்கின்ற அதன் வெளிநாட்டுத் தொழிற்பாடுகளுக்கு வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும். எனினும், கம்பனிக்கு வரி இழப்புக்களை முன்கொண்டு செல்லத்தக்க வசதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனால் நடப்பாண்டில் வரி செலுத்தும் பொறுப்பு எதுவுமில்லை.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

வருமான வரிச் செலவினம் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி இரண்டினையும் உள்ளடக்குகிறது. வருமான வரிச் செலவினம் என்பது பங்கு மூலதனத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானவற்றின் அளவு வரையானவை தவிர்ந்த இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகிறது. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை இது பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

நடைமுறை வரி என்பது ஆக்கப்பட்ட வரி வீதங்கள் அல்லது பின்னர் அறிக்கையிடும் திகதியில் ஆக்கப்பட்டவைகள் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்படத்தக்க வரிக்கு செய்யப்பட்ட ஏதேனும் சீராக்கங்களைப் பயன்படுத்தி இவ்வாண்டிற்காக வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய வரியாகும்.

முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின்படி வானூர்திகளின் சமயலறை மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகம் என்பனவற்றிலிருந்தான வருமானங்களுக்கு 2021 மே 31ஆம் நாள் வரை விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் வழமையான வரி வீதத்திற்கு உட்பட்டனவாகும்.

(ii) பிற்போடப்பட்ட வருமான வரி

பிற்போடப்பட்ட வருமான வரியானது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் ஏட்டுப் பெறுமதி என்பனவற்றிற்கிடையில் அறிக்கையிடும் திகதியன்று காணப்படும் தற்காலிக வேறுபாடுகளின் மீதான பொறுப்பு முறைகளைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**கம்பனி**

கம்பனி, வரி விடுப்புக் காலப்பகுதியில் இருப்பதனால் உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது என்பதுடன் தற்காலிக வேறுபாடுகள் எதுவும் வரி விலக்கல் காலப்பகுதியில் காணப்படவில்லை. இதன்படி, இந்நிதியியல்கூற்றில் பிற்போடப்பட்ட வரி விதிப்பிற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**துணைக் கம்பனி - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் கொண்டு செல்லப்பட்ட தொகைக்கும் வரி விதிப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்குட்பட்ட விதத்தில் அறிக்கையிடும் திகதியன்றுள்ள பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி அங்கீகரிக்கப்படுகிறது. பிற்போடப்பட்ட வரித் தொகையின் ஏற்பாடு அறிக்கையிடப்படும் திகதியன்று ஆக்கப்பட்ட வரி வீதங்கள் அல்லது நிலையாக ஆக்கப்பட்ட வீதங்களைப் பயன்படுத்தி, முன்கொண்டு செல்லப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தேறல் அல்லது தீர்ப்பனவு என்பனவற்றின் எதிர்பார்க்கப்படும் தன்மையின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரித் தொகை ஏற்பாடு செய்யப்படுகிறது.

பிரதானமான தற்காலிக வேறுபாடுகள் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் தேய்மானம், முன்கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புக்கள் மற்றும் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் என்பனவற்றிலிருந்து தோன்றின.

முன்கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தப்படாத வரி இழப்புக்கள் தொடர்பான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களுக்கெதிராக எதிர்காலத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் வரி இலாபத்தினைப் பயன்படுத்த முடியுமென்ற அளவிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், சொத்துக்களுக்கு எதிராக எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்களின் கிடைப்பனவினைப் பயன்படுத்த முடியும் என்ற அளவிற்கு மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அறிக்கையிடும் திகதியில் மீளளிப்பு செய்யப்படுவதுடன் தொடர்பான வரி நன்மைகள் கிடைக்கக் கூடியதாக இருக்காது என்ற அளவினால் குறைக்கப்படுகின்றன.

**2.4.3 சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்**

(அ) கிரயம் மற்றும் மதிப்பீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பன ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. கிரயத்தினை உள்ளடக்கிய செலவினம் கொள்வனவில் உடனடியாக சேர்க்கப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்படுகையில் அத்தகைய மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் அவற்றின் மீது இடம்பெற்ற தேய்மானங்கள் மற்றும் பழுதுறும்தன்மை ஏதுமிருப்பின் அதனைக் கழித்து மீள் மதிப்பீட்டுத் தொகைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மற்றைய அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் தேய்மானங்கள் ஏதுமிருப்பின் அதனைக் கழித்த வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு சொத்து மீள்மதிப்பிடப்படும் பொழுது, ஏதாவது மீள்மதிப்பு மிகையானது ஏனைய ஒன்றுசேர்ந்த வருமானத்தில் இனங்காணப்படுவதோடு, சொத்து மீள்மதிப்பு ஒதுக்கில் உரிமை மூலதனத்துடன் ஒன்றுசேர்க்கப்படும். எனினும், அதே சொத்தானது வருமானக் கூற்றில் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு குறைவை நேர மாற்றீடு செய்யும் சந்தர்ப்பத்தில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் இனங்காணப்படும். மீள்மதிப்பு பற்றாக்குறையானது, இது சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள அதே சொத்தின் ஏற்கனவேயிருக்கும் மிகையை எதிரீடு செய்யும் சந்தர்ப்பத்தைத் தவிர, மற்றைய சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதி ஏட்டுப் பெறுமதித் தொகையிலிருந்தும் பெருமளவிற்கு வேறுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் போதுமானளவிற்கு அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் ஏற்படும் கிரயங்கள் இவ்விடயங்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு பாய்வதற்கும் கிரயத்தினை நம்பகரமான முறையில் அறவிடத்தக்கதாகவும் இருக்கும் சாத்தியத்தில் மட்டும் பொருத்தமான விதத்தில் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் அல்லது தனியானதொரு சொத்தாக உள்ளடக்கப்படுகின்றன.

பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் அவை உறப்பட்ட காலப்பகுதிக்குரிய வருமானக்கூற்றில் விதிக்கப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றைய பல விடயங்களுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

**(i)** மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய விமான உதிரிப்பாகங்கள்

உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்ற மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய விமான உதிரிப்பாகங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட அதன் பயன்பாட்டு ஆயுள் காலப்பகுதியில் தேய்வடைகின்றது. இவ்விடயம் "விமானம் தொடர்பான சாதனங்கள்" என்ற தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகிறது.

**(ii)** செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம்

செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் கிரயத்தில் காட்டப்படுவதுடன் இது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது ஆரம்பிக்கப்படும் நாள் வரையில் ஏற்பட்ட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்குகிறது. தொழிற்படும் பொழுது, செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கீழ் பொருத்தமான வகைக்கு மாற்றல் செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் காலப்பகுதிக்கு தேய்மானம் செய்யப்படுகிறது.

(ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்துச் சொத்துக்கள் பொறிகள் மற்றும் சாதனங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் மீது நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. சமமான தவணைகளின் மூலம் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுள் காலப்பகுதியில் அத்தகைய தொகையினைப் பதிவழிப்பதற்காக இவை மேற்கொள்ளப்படுகின்றன.

எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்மிக்க ஆயுள்காலத் தேய்மான முறையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவிடத்து மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| விமானத்துடன் தொடர்புபட்ட சாதனங்கள் | - | 8 ஆண்டுகளுக்குக் குறைவாக அல்லது குத்தகைக் காலப்பகுதி |
| பொறி மற்றும் சாதனங்கள் | - | சாதனங்களினது வகையின் அடிப்படையில் 1 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வீச்சினைக் கொண்ட காலப்பகுதி |
| கட்டிடங்கள் | - | உயர்ந்தபட்சம் 20 ஆண்டுகள் என்ற நியதிக்குட்பட்டு எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க காலப்பகுதி |

மேலே குறிப்பிடப்பட்ட தேய்மான வீதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் காலங்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

(இ) அங்கீகரிக்கப்படாதவை

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் விடயமொன்று அகற்றப்படும் பொழுது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது, அது அங்கீகரிக்கப்படாமல் போகிறது. சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாதமையின் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது இலாபம் (தேறிய அகற்றல் பெறுகைகளுக்கும் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதித் தொகைக்குமிடையிலான வேறுபாடாகக் கணிக்கப்படுகிறது) சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாது ஆண்டிற்கான நிதியியல்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

### 2.4.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்கள், அச்சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளியல் நன்மைகள் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதுடன், அச்சொத்துக்களின் கிரயம் நம்பகமாக அளவிடக் கூடியதாக இருக்கும் போது மட்டுமே அருவச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதன்படி, இச்சொத்துக்கள், கிரயத்திலிருந்து ஒன்று சேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்று சேர்ந்த பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் கழித்து வரும் பெறுமதியில் நிதியியல் நிலைமைக்கூற்றில் காட்டப்படும்.

தொடர்புடைய கணனி வன்பொருளிலிருந்து வேறாக்கக் கூடிய கணனி மென்பொருளின் கொள்வனவு அல்லது அபிவிருத்திச் செலவானது வேறாக மூலதனப்படுத்தப்படுவதுடன் 5 ஆண்டுகளுக்கு விஞ்சாத வகையில் நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றன. பதிவழிப்புக் காலம் மற்றும் பதிவழிப்பு முறை என்பன ஒவ்வொரு ஐந்தொகைத்

திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மாற்றங்கள் தேறிய பெறுமதி மீளப் பெறப்பட முடியாது என்பதை எடுத்துக்காட்டினால் இச்சொத்துக்களின் தேறிய பெறுமதி பதிவழிப்புக்காக காலாந்தரம் மீளாய்வு செய்யப்படும்.

### 2.4.5 விமான எந்திரங்களின் முக்கிய பழுதுபார்ப்பு

முன் நிதிகள் மற்றும் உத்தரவாத கோரல்கள் நீங்கலாக ஒரு காலப்பகுதிக்கும் கூடுதலான எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்குகின்ற விமான எந்திரங்களினதும் தரையிறங்கும் சாதனங்களினதும் பழுதுபார்த்தல் செலவு பயன்படுத்தப்படுவதுடன் முக்கிய பழுது பார்த்தல் மற்றும் குத்தகைக் காலப்பகுதிக்கிடையிலான குறுகிய காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது.

### 2.4.6 குத்தகைகள்

(அ) தொழிற்படுகின்ற குத்தகைகள்

குத்தகைக்கு விட்டவர் குத்தகைக்கான நியதிகள் மீதான அனைத்து இடர்நேர்வுகளையும் மற்றும் சொத்துரிமை தொடர்பான நன்மைகளையும் கணிசமானளவில் பயனுள்ள விதத்தில் பிடித்து வைத்திருக்கின்றவிடத்து குத்தகையானது தொழிற்படுகின்ற குத்தகை எனக் கருதப்படுகிறது. இன்னொரு முறையியல் சார்ந்த அடிப்படை பயன்படுத்துநரின் நன்மைகளிலிருந்து நேர மாதிரியினை கூடியளவிற்கு பிரசன்னப்படுத்தினாலொழிய, தொழிற்படுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள் நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் தொழிற்பாட்டுச் செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகிறது.

தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழ் சொத்துக்களின் மீள்வடிவமைப்பு தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் மூலதனமாக்கப்பட்டு பயனுள்ள ஆயுள் பகுதிக்குள்ளும் குத்தகைக் காலப்பகுதிக்குள்ளும் பதிவழிப்பு செய்யப்படுகின்றன.

(ஆ) நிதிக் குத்தகைகள்

இடர்நேர்வுகளும் நன்மைகளும் குத்தகைக்கு விடப்பட்ட விடயங்களின் சொத்துரிமைகளுக்கு ஏற்படுமிடத்து பயனுள்ள முறையில் கம்பனிக்கு மாற்றப்படுகின்ற குத்தகைகள் ஆரம்பத்தில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் அல்லது குறைவாக இருக்குமிடத்து குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதியில் மூலதனமாக்கப்படுகின்றது. பொறுப்பின் எஞ்சியுள்ள மீதியின் மீது நிலையான வட்டி வீதத்தினைப் பெறும் நிமித்தம் நிதிக் கட்டணங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பின் குறைப்புக்களுக்குமிடையில் குத்தகைக் கொடுப்பனவுகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. நிதிக் கட்டணங்கள் வருமானக் கூற்றுக்களில் நிதிச் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

மூலதனமாக்கப்பட்ட குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என வெளிப்படுத்தப்பட்டு குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களிலிருந்து கம்பனி பலனை எதிர்பார்க்கும் காலப்பகுதி வரை தேய்மானம் செய்யப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கை 2.4.9 இனைப் பார்க்கவும்.

(இ) விற்பனையும் மீள்குத்தகையும்

தொழிற்பாட்டுக் குத்தகைகளில் தோன்றுகின்ற விற்பனை மற்றும் மீள் குத்தகைக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான இலாபங்கள், குறிப்பிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை விற்பனைப் பெறுகைகள் விஞ்சாததொரு அளவிற்கு வருமானக்கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஈ) பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவு

தொடர்பான தொழிற்பாட்டுத் குத்தகை உடன்படிக்கைகளின் திரும்பல் நிபந்தனைகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவின் தற்போதைய பெறுமதி நடப்பிலில்லா சொத்துக்களின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சொத்துக்களின் பயன்பாட்டுக்காலம் மற்றும் குத்தகைக்காலம் என்பனவற்றிற்கும் குறைவானதொரு காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டு இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37 இற்கிணங்க அளவிடப்பட்ட தொடர்பான பொறுப்புடன் சேர்த்து நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.7 இருப்புக்கள்

பயன்படுத்த முடியாத பழைய மற்றும் மெதுவாக அசைகின்ற விடயங்களுக்காக உரிய ஏற்பாடுகளைச் செய்த பின்னர் கிரயம் மற்றும் தேறிய கைத்தேறத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதன் அடிப்படையில் இருப்புக்கள்

மதிப்பீடு செய்யப்படுகின்றன. அனைத்து இருப்புக்களும் நிறையேற்றப்பட்ட சராசரி செலவின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.8 நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி இழப்பு

கம்பனியானது, ஏதேனும் சொத்தின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மையினைக் காட்டுகின்றதா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலிருந்தும் மதிப்பிட்டுக் கொள்கிறது. அத்தகைய அடையாளங்கள் ஏதும் காணப்படுமிடத்து அல்லது அத்தகைய சொத்திற்கு வருடாந்த பெறுமதி இழப்புத்தன்மை பற்றிய பரீட்சிப்பு தேவைப்படுமிடத்து, கம்பனியானது சொத்தின் அறவிடக்கூடிய தொகை பற்றி மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதி அறவிடத்தக்க தொகையினை விஞ்சுமிடத்து அச்சொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்பட்டு அறவிடத்தக்க தொகை பதிவழிக்கப்படுகின்றது.

### 2.4.9 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப அங்கீகரித்தல் மற்றும் பின்னரான அளவீடு

#### 2.4.9.1 நிதியியல் சொத்துக்கள்

நிதியியல் சாதனங்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக குழுமம் மாறுகின்ற பொழுது நிதியியல் சொத்துக்கள், நிதியியல் நிலைமைகளின் கூற்றுக்களின் மீது அங்கீகரிக்கப்படுகின்றன. நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதி, கடன்கள் மற்றும் பெறத்தக்கவை, முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை அல்லது விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை என பொருத்தமான விதத்தில் வகைப்படுத்தப்படுகின்றன. முகாமைத்துவமானது ஆரம்ப அங்கீகரிப்பில் அதன் நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலை தீர்மானிப்பதுடன் வகைப்படுத்தல் சொத்துக்களின் தன்மை மற்றும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் நோக்கம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது.

அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டன.

கம்பனியின் நிதியியல் சொத்துக்கள் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. அங்கீகரிப்பு, ஆரம்ப மற்றும் பின்னரான அளவிடல்கள், பெறுமதி இழப்பு மற்றும் அங்கீகரிக்கப்படாமை என்பன மீதான குழுக் கொள்கை பற்றிய விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

அ) கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பது தீவிர சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதிகளல்லாத நிதியியல் சொத்துக்களாகும். ஆரம்ப அளவிடல்களின் பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் குறைந்தளவில் பழுதுறக்கூடிய பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பயனுறு வட்டி வீத முறையில் மிக முக்கியமானதொரு பகுதியாக விளங்கும் கையேற்பு மற்றும் கட்டணம் அல்லது செலவுகள் மீதான ஏதேனும் கழிவிடல் அல்லது கட்டணத்தினை கணக்கிலெடுப்பதன் மூலம் தேய்மானச் செலவு கணிக்கப்படுகின்றது.

ஆ) விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்கள்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்கள் பங்குரிமை மூலதனங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்குகிறது. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவையென வரைவிலக்கணம் செய்யப்பட்ட பங்குரிமை மூலதனங்கள் என்பது ஒன்றில் விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என்றோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டனவாகவோ வகைப்படுத்தப்படவில்லை. இவ்வகையிலுள்ள படுகடன் பிணையங்கள் என்பது நிர்ணயிக்கப்படாத ஒரு காலப்பகுதிக்கு வைத்திருக்கப்படும் நோக்கத்தினைக் கொண்டவையாகவும் திரவத் தேவையினைக் கருத்திற் கொண்டு அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் விற்பனை செய்யக்கூடியனவாகவும் இருப்பவையாகும்.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்கள் பின்னர் முதலீடு அங்கீகரிக்கப்படாத வரை விற்பனைக்குக் கிடைக்கத்தக்க ஒதுக்குகளில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமாக அங்கீகரிக்கப்படாத இலாபங்கள் அல்லது இழப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதுடன் ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் விற்பனை ஒதுக்கிற்குக் கிடைக்கத்தக்கவை என்பதிலிருந்து நிதிச் செலவுகளில் வருமானக் கூற்றிற்கு மீளவகைப்படுத்தப்படும் பொழுது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் மற்றைய தொழிற்பாட்டு வருமானத்தில் அங்கீகரிக்காமல் விடப்படுகின்றன அல்லது முதலீடு பழுதுறாதிருக்குமென தீர்மானிக்கப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளை வைத்திருக்கும் பொழுதே உழைக்கப்படுகின்ற வட்டியானது பயனுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானமாக அறிக்கையிடப்படுகிறது.

இ) அங்கீகரிக்கப்படாதவை

பின்வரும் நேரங்களில் நிதியியல் சொத்தொன்று அங்கீகரிக்கப்படுவதில்லை:

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகியிருக்கும் பொழுது

- சொத்துக்களிலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை உரிமமானது மாற்றல் செய்திருக்கும் பொழுது அல்லது “மாற்றங்கள் மீது சுமத்தும்” ஒழுங்குகளின் கீழ் பெறப்பட்ட காசுப்பாய்ச்சல்களை பெருமளவு தாமதங்கள் இல்லாமல் மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்துவதற்கான கடப்பாடொன்றினை அனுமானித்தல் மற்றும் ஒன்றில் (அ) குழுமம் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளையும் சொத்துக்களின் விருதுகளையும் மாற்றல் செய்திருத்தல் அல்லது (ஆ) குழுமம் ஒன்றில் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளையும் சொத்துக்களின் விருதுகளையும் மாற்றல் செய்யாமல் அல்லது பிடித்துவைத்திருக்காமல் இருக்கின்ற போதும் சொத்துக்கள் மீதான கட்டுப்பாடுகளை மாற்றல் செய்திருத்தல்.

ஈ) நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதியின் பெறுமதி இழக்கப்பட்டிருக்கின்றதா என்பதற்கு ஏதேனும் குறிப்பிடத்தக்க சான்றுகள் காணப்படுகின்றதாக என்பதனைக் கண்டறிவதற்காக குழுமம் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. நிதியியல் சொத்தொன்றில் அல்லது நிதியியல் சொத்துத் தொகுதியொன்றில், சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பொன்று (ஏற்பட்ட இழப்பு நிகழ்வு) ஏற்பட்டதன் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கான சான்றுகள் காணப்படுமிடத்தும், அந்த இழப்புச் சம்பவம் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பின் அதனை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யலாம். பெறுமதி இழப்புத் தொடர்பான சான்றுகள் கடன்பட்டவர்கள் அல்லது கடன்பட்ட குழுவினர் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகளை, கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியமை, அவர்கள் வங்குரோத்து நிலையொன்றினை அடைந்துள்ளமைக்கான சாத்தியமானதன்மை அல்லது மற்றைய நிதியியல் நிறுவனத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டமையினை அவதானிக்கத்தக்க தரவுகள் எடுத்துக்காட்டுகின்றமையினை உள்ளடக்கியிருக்கும்.

(i) தேய்மானச் செலவில் கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள்

பெறுமதி இழப்புத் தொடர்பான இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்குத் தெளிவான சான்றுகள் காணப்படுமிடத்து, இழப்புத் தொகையானது கொண்டு செல்லப்பட்ட சொத்தின் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடொன்றாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி, நிதியியல் சொத்துக்களின் மூல பயனுறு வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது.

சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது படிக்கணக்கினை பயன்படுத்துவதனூடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வட்டி வருமானம் குறைக்கப்பட்ட கொண்டு செல்லப்படும் தொகையின் மீது தொடர்ந்தும் ஒன்றுசேருமென்பதுடன் பழுதுறுவது தொடர்பான இழப்புக்களை அளவிடுகின்ற நோக்கத்திற்காக, ஒன்றுசேர்ந்த வட்டிக்குப் பயன்படுத்தப்பட்ட வட்டி வீதம் எதிர்கால காசுப்பாய்ச்சலை கழிவிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. வருமானக் கூற்றில் வட்டி வருமானம் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாக பதிவு செய்யப்படுகின்றது.

அடுத்துவரும் ஆண்டில், பெறுமதி இழப்பு நிகழ்ந்தமைக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வொன்றின் காரணமாக ஏற்படுகின்ற அதிகரிப்புக்கள் அல்லது இழப்புக்களினால் ஏற்படும் மதிப்பிடப்பட்ட பழுதுறும் இழப்புக்களின் தொகை அங்கீகரிக்கப்படுமிடத்து, முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பழுதுறும் தன்மை தொடர்பான இழப்பு படிக்கணக்கினை சீராக்குவதன் மூலம் அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. பதிவழிப்பொன்று பின்னர் அறவிடப்படுமிடத்து, அறவிடப்பட்ட தொகை, வருமானக் கூற்றில் நிதிச் செலவாக வரவு வைக்கப்படுகின்றது.

(ii) விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகளுக்காக முதலீடொன்று அல்லது முதலீட்டுத் தொகுதியொன்று பழுதடைவதற்கான தெளிவான சான்றுகள் கிடைக்கின்றனவா என்பதனைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் குழுமம் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவையென வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனத்தினைப் பொறுத்தவரையில், தெளிவான சான்றகள், முதலீட்டின் சந்தைப் பெறுமதி அதன் இரண்டிற்குக்

கீழே ஏற்படும் குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட கால வீழ்ச்சிகளை உள்ளடக்கியிருக்கும். பெறுமதி இழப்புத் தொடர்பான தெளிவான சான்றுகள் காணப்படும் பொழுது, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட முன்னைய முதலீட்டின் மீதான பழுதுறும் இழப்புக்கள்மீதான ஏதேனும் கழிவுகள் நீங்கலான கொள்வனவுக் கிரயத்திற்கும் நடைமுறைச் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்ற ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றிலிருந்து நீக்கப்படுகின்றன. பங்குரிமை மூலதனத்தின் மீதான பெறுமதி இழப்புக்கள் வருமானக் கூற்றினூடாக மாற்றிப் பதியப்படுவதுடன்; பெறுமதி இழப்பின் பின்னரான அவற்றின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் இழப்புக்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவையென வகைப்படுத்தப்பட்ட படுகடன் சாதனங்களைப் பொறுத்தவரை, நிதியியல் சொத்துக்கள் தேய்மானச் செலவில் கொண்டு செல்லப்படுவதனைப் போன்று அதே பிரமாணங்களின் அடிப்படையில் பழுதுறும்தன்மை மதிப்பிடப்படுகிறது. எனினும், பழுதுறும்தன்மைக்காக பதிவு செய்யப்பட்ட தொகை என்பது வருமானக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டின் மீதான ஏதேனும் பழுதுறும்தன்மை தொடர்பான இழப்புக்கள் நீங்கலான தேய்மானச் செலவிற்கும் நடைமுறைச் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்ற ஒன்றுசேர்ந்த இழப்பாகக் காணப்படுகின்றது.

### 2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39இன் செயற்பரப்பிற்குள் காணப்படும் நிதியியல் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டம் அல்லது கடன்கள் மற்றும் கடன்பாடுகள் எனப் பொருத்தமான ஒன்றினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. குழுமம் அதன் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கிறது.

அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடன்பாடுகளைப் பொறுத்தவரை கொடுக்கல்வாங்கல் செலவில் நேரடியாகச் சேர்க்கப்படுகின்றது.

குழுமத்தின் நிதியியல் பொறுப்புக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை, வங்கி மேலதிகப் பற்றுக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாத உடன்படிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

நிதியியல் பொறுப்புக்களின் பின்னைய அளவீடுகள் கீழே விபரிக்கப்பட்டவாறான அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியிருக்கிறது.

அ) கடன்கள் மற்றும் கடன்பாடுகள்

ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர், வட்டி உழைக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகள் பின்னர் பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படாத போதும் அதேபோன்று பயனுறு வட்டி வீத கடன் தீர்ப்பனவு செயன்முறையினூடாக இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

தேய்மானச் செலவுகள், கையேற்புக்கள் மீதான ஏதேனும் கழிவிடலின் அல்லது கட்டணங்கள் மற்றும் பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதியாக விளங்கும் கட்டணங்கள் அல்லது கிரயங்களைக் கணக்கில் கொண்டு கணிக்கப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத் தேய்வுகள் வருமானக் கூற்றிலுள்ள நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

ஆ) அங்கீகரிக்கப்படாதவை

பொறுப்பு மீதான கடப்பாடுகள் நீக்கப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் பொழுது நிதியியல் பொறுப்புக்கள் அங்கீகரிக்காமல் விடப்படுகின்றன.

ஏற்கனவேயுள்ள நிதியியல் பொறுப்பொன்று, கணிசமாக வேறுபட்ட நியதிகள் அல்லது கணிசமானளவில் மாற்றியமைக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள பொறுப்பொன்றில் நியதிகளின் மீதான அதே கடன்பாட்டாளரிடமிருந்தான இன்னொன்றின் மூலம் நீக்கப்படும் வேளையில் அத்தகைய பரிமாற்றங்கள் அல்லது மாற்றியமைப்பு ஆரம்பப் பொறுப்புக்களின் அங்கீகரியாமையாகவும் புதிய பொறுப்பின் அங்கீகரியாமையாகவும் கருதப்படுகின்றன. தொடர்பான கொண்டு செல்லும் தொகையில் காணப்படும் வேறுபாடுகள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இ) நிதியியல் சாதனங்களை எதிரீடு செய்தல்

நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகை பின்வரும் விதத்தில் இருக்குமிடத்து, நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமைகளை தற்பொழுது நடைமுறைப்படுத்தத்தக்கதாக இருத்தல்
- தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான உண்மையான எண்ணம் இருத்தல் அல்லது சொத்துக்களை விடுவித்தல் மற்றும் சமகாலத்தில் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்

ஈ) நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தீவிரமான சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் அல்லது வணிகர் விலைக்கோரல்களின் மூலம் (நீண்ட நிலைமைகளுக்கான கோரல் விலை மற்றும் குறுகிய நிலைமைக்காக கேட்கப்பட்ட விலை) கொடுக்கல்வாங்கல் செலவிற்கான கழிவுகள் எதுவுமின்றி நிர்ணயிக்கப்படுகின்றன.

தீவிரமான சந்தையொன்றில் விற்கப்படாத நிதியியல் சாதனங்களுக்காக, பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்களைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது. அத்தகைய நுணுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

- அண்மைய சாத்தியமான சந்தைப் பெறுமதியினைப் பயன்படுத்தி
- கணிசமானளவிற்கு ஒரே மாதிரியான இன்னொரு சாதனத்தின் தொடர்பான தற்போதைய சந்தைப் பெறுமதி
- கழிவு செய்யப்பட்டதொரு காசுப்பாய்ச்சல் பகுப்பாய்வு அல்லது ஏனைய மதிப்பீட்டு மாதிரிகள்

நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதிகளின் பகுப்பாய்வும் அவை எவ்வாறு அளவிடப்படுகின்றன என்ற மேலதிகத் தகவல்களும் குறிப்பு 17இல் தரப்பட்டுள்ளன.

### 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கு

விமானப் பராமரிப்பு ஒதுக்கு, தொழிற்படுகின்ற குத்தகை உடன்படிக்கையின் நியதிகளில் எந்திரங்கள், வான் கலங்கள் மற்றும் விமானக் கூறுகள் என்பனவற்றின் எதிர்கால பழுதுபார்த்தலுக்காக மாதாந்த அடிப்படையில் குத்தகைக்கு விடுபவருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது. கம்பனியானது எந்திரங்கள், வான் கலம்கள், வான் கலக்கூறுகள் (ஒதுக்கிற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரையில்) என்பனவற்றின் பழுது பார்ப்பு மீது ஏற்பட்ட செலவுகளை, பராமரிப்பு வேலைகள் முடிவடைந்ததும் அத்தகைய ஒதுக்குகளுக்கெதிராக குத்தகைக்கு விடுபவரிடமிருந்து அறவிட்டுக் கொள்கிறது.

தன்மைகளின் அடிப்படையில் விமானப் பேணல் ஒதுக்கு கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்துக்களின் இவ்வகைக்கான தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகள் மேலேயுள்ள 2.4.9.1(அ) குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.4.11 வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்

வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் அறவிடமுடியாத மற்றும் ஐயத்திற்குரிய பெறத்தக்கவைக்கான ஏற்பாடுகள் நீங்கலாக பெறத்தக்கவை என மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் குறிப்பிடப்படுகின்றன. ஏனைய பெறத்தக்கவைகளும் தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவைகளும் அறிவிடமுடியா மற்றும் ஐயத்திற்குரிய பெறத்தக்கவை தொடர்பானவற்றைக் கழித்த செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.4.12 முதலீடுகள்

(அ) திறைசேரி முறிகளில் முதலீடு

திறைசேரி முறிகள் மீதான முதலீடு, "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள" நிதியியல் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர் முதலீடுகள் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. நிதியியல் சொத்துக்களின் இவ்வகைக்கான கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 2.4.9.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(ஆ) துணைக் கம்பனிகளில் முதலீடு**

கம்பனியின் நிதியியல்கூற்றுக்களில், துணைக் கம்பனியில் காணப்படும் முதலீடு, பெறுமதியில் ஏற்படக்கூடிய தற்காலிக குறைவு தவிர்ந்த வேறு ஏதேனும் ஒதுக்கங்கள் நீங்கலாக கிரயத்தில் கணக்கிடப்பட்டது.

**(இ) ஏனைய முதலீகள்**

ஏனைய நீண்ட கால முதலீடுகள் பங்குரிமை மூலதன பிணையங்களிலுள்ள முதலீடுகளையும் உள்ளடக்குகிறது. இம்முதலீடுகளின் வர்த்தகத்திற்குத் தீவிரமான சந்தைகள் இல்லாமையால் சந்தைப் பெறுமதியினை நம்பகமாக அளவிடமுடியவில்லை. இம்முதலீடுகள் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

### 2.4.13 காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசிற்குச் சமமானவையும் வங்கியிலும் கையிலுமுள்ள காசு, அழைப்பு வைப்புக்கள் மற்றும் பெறுமதியில் மாற்றுவதில் குறிப்பிடத்தக்களவிற்கு இடர்நேர்வற்றவை என்ற நிபந்தனைக்குட்பட்டு தெரிந்த காசுத் தொகைக்கு மாற்றுவதற்கு ஆயத்தமாகவுள்ள உயர்ந்த திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு மற்றும் வெளிநின்ற வங்கி மேலதிகப் பற்றுக்கள் நீங்கலான வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. குறுங்கால முதிர்ச்சிகளைக் கொண்ட முதலீடுகளும் (அதாவது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசிற்குச் சமமானவைகள் எனக் கருதப்படுகின்றன. வங்கி மேலதிகப் பற்றுக்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில், வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 2.4.14 ஏற்பாடுகள்

(i) பொது

கடந்த கால நிகழ்வுகளின் பெறுபேறாக, கம்பனி தற்பொழுது கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது அதன் அர்த்தம்) கொண்டிருக்கும் பொழுது அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிப்பாய்கின்ற மூலவளங்கள் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படுமிடத்து கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் கடப்பாட்டுத் தொகையினையும் நம்பகமாக மதிப்பீடு செய்து கொள்ள முடியும். ஓரளவு ஏற்பாடு அல்லது முழு ஏற்பாடும் மீளளிக்கப்பட வேண்டுமென கம்பனி எதிர்பார்க்கும் பொழுது, மீளளிப்பு உறுதிப்படுத்தப்படும் வேளையில் மாத்திரம் இம்மீளாய்வு தனியானதொரு சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறது. ஏதேனும் ஏற்பாட்டு செலவு தொடர்பாக மீளச் செலுத்தல்கள் இருப்பின் அதனைக் கழித்து வருமானக்கூற்றில் காட்டப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடுகள் தொடர்பிலான செலவுகள் ஏதேனும் மீள்வழங்கல்களைக் கழித்த வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன.

(ii) பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் பொறுப்பு

தொழிற்படுகின்ற குத்தகை தொடர்பாக, குறிப்பிட்ட விமான எந்திரங்களுக்கான பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவுகளுக்கான ஒதுக்கங்களை குழுமம் பதிவு செய்கிறது. பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவுகள் மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி கடப்பாடுகளைத் தீர்ப்பனவ செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவுகளின் தற்போதைய பெறுமதியை வழங்குவதுடன் தனியானதொரு சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றன (குறிப்பு 15). காசுப்பாய்ச்சல்கள் தற்போதைய வரிக்கு முன்னைய வீதத்தில் கழிவு செய்யப்படுவதுடன் இது பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவுகளுக்கே உரிய இடர்நேர்வுகளையும் பிரதிபலிக்கின்றது. கழிவிடல் முடிவுறுத்தப்படாமையானது உறப்பட்ட செலவினமாக விளங்கி நிதிச் செலவாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. எந்திரங்களின் தரமுயர்த்தலின் மதிப்பிடப்பட்ட எதிர்காலச் செலவுகள் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான விதத்தில் சீராக்கப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட எதிர்காலச் செலவுகளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது பிரயோகிக்கப்பட்ட கழிவிடல் வீதம் சொத்துக்களின் செலவில் சேர்க்கப்படுகின்றன அல்லது கழிக்கப்படுகின்றன.

### 2.4.15 ஓய்வுகால நன்மைகள் தொடர்பான கடப்பாடுகள்

**(அ) வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டம் - பணிக்கொடை கொடுப்பனவு**

கம்பனியினது வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டமாக விளங்கும் உறுதியளிக்கப்பட்ட பணிக்கொடையான ஓய்வுகால நன்மைகள் திட்டத்தினை ஒவ்வோராண்டும் கணிப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்ற வாக்குறுதி வழங்கப்பட்ட ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் தற்போதையப் பெறுமதியினை கம்பனி அளவிடுகின்றது.

அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்றில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டங்களுடன் தொடர்புபட்ட ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மற்றும் செலவினங்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டத்திலிருந்து உருவாகின்ற கணிக்கப்பட்ட இலாபங்கள்/ இழப்புக்களை கம்பனி/ குழுமம் அங்கீகரிக்கிறது.

'கணக்கீட்டாளரினால்' பயன்படுத்தப்பட்ட முக்கியமான கருதுகோள்கள் பின்வருமாறு:

| | | கம்பனி | | | துணைக் கம்பனி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2012 | 2011 | 2013 | 2012 | 2011 |
| (i) | வட்டி வீதம் | 11% | 11% | 10% | 10% | 10% | 12% |
| (ii) | சம்பள அதிகரிப்பு வீதம் | | | | | | |
| | - இலங்கை ரூபா | 10% | 10% | 10% | | | |
| | - ஐ.அ.டொலர் | 2% | 2% | 2% | | | |
| | - நிறைவேற்று அலுவலர் | | | | 10% | 10% | 10% |
| | - நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர் | | | | 20% | 20% | 17% |
| (iii) | ஓய்வு பெறும் வயது - ஆண்டுகள் | 60 | 60 | 60 | 55 | 55 | 55 |
| (iv) | நிறுவனம் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும். | | | | | | |

பணிக்கொடை பொறுப்புக்களுக்கு வெளியிலிருந்து நிதியிடப்படமாட்டாது. இவ்விடயம், ஐந்தொகையில் "ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள்" என்ற தொகுதியின் கீழ் காட்டப்படுகின்றன. வெளிநாடுகளைத் தளமாகக் கொண்ட ஊழியர்கள் அவர்களது சொந்த நாடுகளுக்குப் பொருந்தத்தக்க சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர்.

(ஆ) வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள் - ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

இலங்கையிலுள்ள ஊழியர்கள், தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதிய உதவுதொகைகளுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிய உதவுதொகைகளுக்கும் உரித்துடையவராவர். ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் கம்பனி, ஊழியர் சேம நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் 15 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்த வேளையில் துணை நிறுவனம் 12 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்தது.

### 2.4.16 அடிக்கடி பறப்பவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

கம்பனி, அடிக்கடி பறப்பவர்களுக்காக 'பிளைஸ்மயில்' என அழைக்கப்படும் நிகழ்ச்சித்திட்டமொன்றினை தொழிற்படுத்துகிறது. அது ஒன்று சேர்ந்த மொத்த மைல்களின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்கு பயண விருதினை வழங்குவதாகும். அடிக்கடி பறப்பவர்களுக்கான நன்மைகளின் விருதிற்கு பயணிகள் வருமானத்தின் ஒரு பகுதி காரணமாக அமைவதுடன் இந்நன்மைகளின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்படுகின்றன. இவை நிதியியல் நிலைமைக் கூற்றுக்கள் மீதான பிற்போடப்பட்ட வருமானத்தினையும் உள்ளடக்குகிறது.

### 2.4.17 வருமானத்தினை அங்கீகரித்தல்

வருமானமானது குழுமத்திற்குப் பாயக்கூடிய பொருளாதார நன்மைகளின் சாத்தியமானளவிற்கு அங்கீகரிக்கப்படுவதுடன், வருமானமானது அது எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதனைக் கருத்திற் கொள்ளாது நம்பகமாக அளவிடப்படுகிறது. வருமானமானது பெறப்பட்ட பரிசீலனையின் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. குழுமத்திற்கான வருமானம் கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை நீக்குகிறது.

(அ) எயார்லையின்சின் வருமானம்

வருமானம் முக்கியமாக, பயணிகளைக் கொண்டு செல்லுதல், சரக்கு மற்றும் அஞ்சல், விமானங்களுக்கு முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், பொறியியல் பணிகள், உள்நாட்டு விமான டக்சி தொழிற்பாடுகள், வான் ஒப்பந்த பறப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்றது. குழுமத்திற்கான வருமானம் கம்பனிக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை நீக்குகிறது.

(i) போக்குவரத்து வழங்கப்படும் பொழுது பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து விற்பனைகள் தொழிற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

(ii) பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி, முன்கூட்டிய பயணச்சீட்டு விற்பனைகளாக நடப்புப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி ஓராண்டிற்குப் பின்னும் பயன்படுத்தப்படாது செல்லுபடியற்றதாக இருக்குமாயின் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

(iii) விமான நிலைய முனைக்கோடிப் பணிகளின் வழங்கல்களிலிருந்தான வருமானம், பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(iv) மூன்றாந்தரப்பினருக்கான பராமரிப்புப் பணிகளை வழங்குவதிலிருந்து கிடைக்கும் வருமானம் அத்தகைய அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(v) பறப்பு தொழிற்பாட்டுப் பணிகளை வழங்குவதிலிருந்தான வருமானம் அப்பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) எயார்லையின் கேட்டறிங் சேர்விஸஸிலிருந்தான வருமானம்

பொருட்களின் விற்பனை

சொத்துடமையின் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளும் நன்மைகளும் வாங்குநருக்கு மாற்றல் செய்யப்படும் வேளையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் பெறுமதிசேர் விற்பனை வரியினை நீக்குவதுடன் வர்த்தகக் கழிவுகளைக் கழித்ததன் பின்னர் இது பெறப்படுகின்றது. வரவேண்டிய அறவிடல்கள், அவற்றுடன் இணைந்த செலவுகள் அல்லது பொருட்கள் திரும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றமை மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவ தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றவிடத்து வருமானம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

(இ) பங்கிலாப வருமானம்

பங்குடமையாளர் உரிமைகள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்படும் பொழுது பங்கிலாபங்கள் கணக்கிடப்படுகின்றன.

(ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

(உ) வட்டி வருமானம்

அனைத்து நிதிச் சாதனங்களும் தேய்மானச் செலவில் அளவிடப்பட்டதுடன் வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்கள் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை என வரைவிலக்கணம் செய்யப்பட்டதுடன் பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வட்டி வருமானம் அல்லது செலவினம் பதிவு செய்யப்படுகிறது. இது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது நிதிச் சாதனங்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுளினூடான பெறுகைகள் அல்லது நிதியியல் சொத்தின் தேறிய கொண்டு செல்லும் தொகைக்கு ஏற்புடைத்தானவிடத்து குறுகிய காலம் அல்லது பொறுப்புக்களினூடான பெறுகைகளைச் சரியான முறையில் அழிவிடுகின்ற ஒரு வீதமாகும். வட்டி வருமானம் வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**2.4.18 செலவினை அங்கீகரித்தல்**

உறப்பட்ட செலவு மற்றும் குறிப்பிட்ட சில விடயங்களின் வருமான உழைப்பு என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் செலவுகள் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வியாபரத்தினை தொழிற்படுத்தியமை மற்றும் வினைத்திறன் பொருட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் பேணல் என்பனவற்றின் பொருட்டு உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வருமானக்கூற்றினைக் காட்டுகின்ற நோக்கங்களுக்காக, கம்பனியின் மூலங்களையும் குழுமத்தின் செயலாற்றத்தினையும் நியாயமான முறையில் காட்டும் அடிப்படையில் “தொழிற்பாட்டுச் செலவினங்கள்” என்ற முறை பின்பற்றப்பட்டிருக்கிறது.

**2.4.19 கடன்பாட்டுச் செலவுகள்**

கடன்பாட்டுச் செலவுகள் பயன்படுத்தும் அல்லது விற்பனை செய்யும் நோக்குடன் கணிசமான காலப்பகுதிக்கு தயாராக வைத்திருக்கப்படும் சொத்துக்களின் கையேற்பு, கட்டுமானம் அல்லது உற்பத்திக்கு நேரடியாக சேர்க்கப்படுகின்ற காலப்பகுதி நீங்கலாக அவை உறப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு சொத்துக்களின் ஒரு பகுதியாக மூலதனமயப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.20 பிரிவு அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, மற்றைய பிரிவுகளிலிருந்து வேறுபட்டு, இடர்நேர்வுகளுக்கும் நன்மைகளுக்கும் உட்பட்டு குறிப்பிட்டதொரு பொருளாதார சூழலில் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமமொன்றின் தனித்தன்மை வாய்ந்ததொரு கூறு எனக் கருதப்படுகிறது.

கம்பனி பல்வேறுபட்ட நாடுகளில் தொழிற்படுகின்றமையின் காரணமாக அதன் இடர்நேர்வுகளும் வருமான வீதங்களும் பாதிக்கப்படுவதால் புவியியல் ரீதியாக பரந்திருக்கும் அதன் தொழிற்பாடுகளின் அடிப்படையில் முக்கியமான பிரிவுகள், நிர்ணயிக்கப்படுகின்றன. ஆரம்ப விற்பனைகளின் மூலமான மொத்தப் புரள்வின் பகுப்பாய்வுகள் விற்பனை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்திற்கான வருமானத்தினை ஒதுக்குவதன் மூலம் பெறப்படுகின்றது. குறிப்பிட்ட பிரிவிற்கான நேரடியாக அடையாளம் காணப்படாத செவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

புவியியல் ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்களையும் தொடர்பான பொறுப்புக்களையும் ஒதுக்குவதற்கு பொருத்தமானதொரு அடிப்படை காணப்படவில்லையென முகாமைத்துவம் கருதுகிறது. இதற்கமைய பிரிவிற்கான சொத்துக்கள், பிரிவிற்கான பொறுப்புக்கள் ஏனைய பிரிவிற்கான தகவல்கள் புவியியல்சார்ந்த பிரிவுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படவில்லை. வியாபாரப் பிரிவின் அடிப்படையிலான இரண்டாவது அறிக்கையிடல் குழுமத்தினால் வழங்கப்பட்ட பணிகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குழுமமானது இரண்டு முக்கிய வியாபாரப் பிரிவுகளான வான் போக்குவரத்திலும் அதன் துணை நிறுவனத்தினூடாக பறப்புக்களில் உணவு வழங்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

## 2.5 நியமங்கள் விடுக்கப்பட்டுள்ளனவெனினும் இன்னமும் நடைமுறைக்கிடப்படவில்லை

நியமங்கள் விடுக்கப்பட்டுள்ளனவெனினும் கீழே காட்டப்பட்டுள்ள இந்நிதியியல் கூற்றுக்கள் வழங்கப்படும் திகதி வரை அவை நடைமுறைக்கிடப்படவில்லை. இந்நியமங்கள் நடைமுறைக்கு வரும் பொழுது குழுமம் அவற்றைப் பின்பற்றும். விபரமான மீளாய்வுகள் நிலுவையிலிருப்பதனால் இந்நியமங்களின் நிதியியல் தாக்கம் நியாயமான முறையில் மதிப்பிடப்படவில்லை.

(i) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 - நிதியியல் சாதனங்கள்: வகைப்படுத்தல் மற்றும் அறவிடல்

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமமம் 9, விடுக்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமம் 39இனை நீக்குவது மீதான பணியின் முதல் கட்டத்தினை பிரதிபலிப்பதுடன் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தலையும் அளவிடலையும் பிரயோகிக்கிறது.

(ii) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 - சந்தைப் பெறுமதி அளவிடல்

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 அனைத்துச் சந்தைப் பெறுமதி அளவிடல்களுக்காக இலங்கை நிதியம் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் ஒற்றை மூலவள வழிகாட்டலொன்றினை உருவாக்கியது.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் 13 என்பன முறையே 2015 சனவரி 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற நிதியியல் ஆண்டிலும் 2014 இலும் நடைமுறைக்கு வரும்.

மேலே குறிப்பிடப்பட்டவற்றிற்குப் பதிலாக பின்வரும் நியமங்கள் விடுக்கப்பட்டிருப்பதுடன் 2014 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும்.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 10 - ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 11 - கூட்டு ஒழுங்குபடுத்தல்கள்

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 12 - ஏனைய நிறுவனங்களிலுள்ள நலவுரித்துக்களை வெளிப்படுத்தல்

## 2.6 முதற்தடவையாக இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் பின்பற்றப்பட்டமை

**2011 ஏப்பிறல் 01 இல் உள்ளவாறு நிதியியல் நிலைமையினை மீள்இணக்கப்படுத்தல் (இ.நி.அ.நி. மாறிய திகதி)**

| | குறிப்பு | குழுமம் இ.க.நி. 2011.04.01 | மீள்அளவீடு | குழுமம் இ.நி.அ.நி. 2011.04.01 | கம்பனி இ.க.நி. 2011.04.01 | மீள்அளவீடு | கம்பனி இ.நி.அ.நி. 2011.04.01 |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | | 4,647.69 | - | 4,647.69 | 2,558.82 | - | 2,558.82 |
| முக்கிய பழுதுபார்ப்புக்கள் மற்றும் விமான எந்திரங்களின் தரமுயர்த்தல் | | 6,080.36 | - | 6,080.36 | 6,080.36 | - | 6,080.36 |
| விமானங்களின் பேணல் ஒதுக்கு | அ | 8,849.84 | (86.26) | 8,763.58 | 8,849.84 | (86.26) | 8,763.58 |
| விமானங்கள் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | அ | 2,156.38 | (43.35) | 2,113.03 | 2,156.38 | (43.35) | 2,113.03 |
| அருவச் சொத்துக்கள் | | 111.69 | - | 111.69 | 110.07 | - | 110.07 |
| முதலீடுகள் | அ | 65.36 | (64.96) | 0.40 | 107.40 | (64.96) | 42.44 |
| | | 21,911.32 | (194.57) | 21,716.75 | 19,862.87 | (194.57) | 19,668.30 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| இருப்புக்கள் | | 4,490.19 | - | 4,490.19 | 4,259.99 | - | 4,259.99 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை | அ | 10,553.71 | 227.35 | 10,781.06 | 10,055.27 | 227.72 | 10,282.99 |
| விமானப் பேணல் ஒதுக்கு | | 2,506.16 | - | 2,506.16 | 2,506.16 | - | 2,506.16 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | | 1,757.24 | - | 1,757.24 | 1,455.17 | - | 1,455.17 |
| | | 19,307.30 | 227.35 | 19,534.65 | 18,276.59 | 227.72 | 18,504.31 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 41,218.62 | 32.78 | 41,251.40 | 38,139.46 | 33.15 | 38,172.61 |
| **பங்குரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | | 5,146.35 | - | 5,146.35 | 5,146.35 | - | 5,146.35 |
| ஒதுக்குகள் | | 1,840.05 | - | 1,840.05 | 1,168.34 | - | 1,168.34 |
| ஒன்றுசேர்ந்த இழப்பு | அ, ஆ | (683.85) | (82.80) | (766.65) | (3,097.87) | 274.11 | (2,823.76) |
| மொத்தப் பங்குரிமை மூலதனம் | | 6,302.55 | (82.80) | 6,219.75 | 3,216.82 | 274.11 | 3,490.93 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வட்டி உழைக்கின்ற கடன்கள் மற்றும் கடன்பாடுகள் | 44,159.72 | 44,159.72 | 12,954.32 | 12,954.32 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை | 30,571.85 | 30,571.85 | 31,747.80 | 31,747.80 |
| **மொத்தம்** | **74,731.57** | **74,731.57** | **44,702.12** | **44,702.12** |
| **கம்பனி** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் | 11,920.57 | 11,920.57 | 11,321.44 | 11,321.44 |
| விமானப் பேணல் ஒதுக்குகள் | 19,901.93 | 19,901.93 | 17,817.62 | 17,817.62 |
| விமான உதிரி எந்திர வைப்புக்கள் | 3,128.35 | 3,128.35 | 3,056.59 | 3,056.59 |
| முதலீடுகள் | 25,597.78 | 25,597.78 | 13,369.81 | 13,369.81 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 3,640.56 | 3,640.56 | 1,733.32 | 1,733.32 |
| **மொத்தம்** | **64,189.19** | **64,189.19** | **47,298.78** | **47,298.78** |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வட்டி உழைக்கின்ற கடன்கள் மற்றும் கடன்பாடுகள் | 45,210.09 | 45,210.09 | 14,012.55 | 14,012.55 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை | 32,454.60 | 32,454.60 | 34,103.51 | 34,103.51 |
| **மொத்தம்** | **77,664.69** | **77,664.69** | **48,116.06** | **48,116.06** |

குழுமத்தின்/ கம்பனியின் நிதியியல் சாதனங்கள் வர்த்தகம் மற்றும் மற்றைய பெறத்தக்கவைகள், விமானப் பேணல் ஒதுக்குகள், விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள், திறைசேரி முறிகளிலான முதலீடுகள், காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள், வட்டி உழைக்கின்ற கடன்கள், கடன்பாடுகள் மற்றும் வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

இந்நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியானது, கட்டாய அல்லது ஒடுக்கிவிடுவதற்கான விற்பனை தவிர்ந்த, விருப்பமுடைய தரப்பினர்களுக்கிடையிலான பரிமாற்றமாக இருக்கக்கூடிய அடிப்படைத் தொகையின் பெறுமதியில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**சந்தைப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கு பின்வரும் முறைகளும் அனுமானங்களும் பின்பற்றப்பட்டன:**

காசு மற்றும் வங்கி மீதிகள், வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள், வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை என்பன அடிப்படைத் தொகைகளின் குறுங்கால முதிர்ச்சிகளின் காரணமாக அவை ஏட்டுப் பெறுமதித் தொகையை கிட்டத்தட்ட நிர்ணயித்துக் கொள்கின்றன.

சந்தையை அடிப்படையாகக் கொண்ட வட்டி வீதங்களின் காரணமாக நீண்ட கால மாறி வீதக் கடன்பாடுகள் பெரும்பாலும் அவற்றின் கொண்டு செல்லும் தொகைக்கு சமமானவையாக இருக்கும்.

அரச முறிகளின் சந்தைப் பெறுமதி, அறிக்கையிடும் திகதியில் சந்தையிலுள்ள அவதானிக்கத்தக்க தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

எனவே, குழுமம்/ கம்பனியின் நிதியியல் சாதனங்களின் கொண்டிருக்கும் தொகை நியாயமான முறையில் ஏறத்தாழ அவற்றின் சந்தைப் பெறுமதியாக இருக்கும்.

**சந்தைப் பெறுமதியினை படிமுறையில் அளவிடல்**

மாச்சு 31இல் உள்ளவாறு, குழுமம்/ கம்பனி நிதியியல் நிலைமைக் கூற்றின் மீது சந்தைப் பெறுமதியில் கொண்டு வரப்பட்ட பின்வரும் நிதியியல் சாதனங்களை வைத்திருக்கிறது. குழுமம்/ கம்பனி மதிப்பீட்டு நுணுக்கங்களின் மூலம் நிதியியல் சாதனங்களின் மதிப்பினைத் தீர்மானிப்பதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் பின்வரும் படிமுறை அளவிடலைப் பயன்படுத்தியது.

| | குழுமம்/ கம்பனி தரம் 2 2013 ரூ. மில். | தரம் 2 2012 ரூ. மில். |
|---|---|---|
| **சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்** | | |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | | |
| திறைசேரி முறிகளில் முதலீடுகள் | 25,597.78 | 13,369.81 |

## 18. வருமானம் மற்றும் பிரிவுத் தகவல்

| 18.1 வருமானம் | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|
| அட்டவணைப்படுத்தப்பட்ட பணிகள் - பயணிகள் | 98,581.74 | 74,730.65 | 98,581.74 | 74,730.65 |
| - சரக்கு | 12,887.18 | 10,819.03 | 12,895.61 | 10,828.42 |
| - மேலதிக பொதி | 509.02 | 407.85 | 509.02 | 407.85 |
| - அஞ்சல் | 141.97 | 102.96 | 141.97 | 102.96 |
| | 112,119.91 | 86,060.49 | 112,128.34 | 86,069.88 |
| வான் முனைக்கோடி மற்றும் ஏனைய பணிகள் | 6,544.50 | 5,842.85 | 6,564.08 | 5,860.88 |
| தீர்வையற்றவை | 521.45 | 721.11 | 521.45 | 721.11 |
| அட்டவணைப்படுத்தப்படாத பணிகள் | 357.03 | 216.06 | 357.03 | 216.06 |
| விமானத்திற்குள் உணவு வழங்கல் | 1,864.77 | 1,798.09 | - | - |
| **மொத்தம்** | **121,407.66** | **94,638.60** | **119,570.90** | **92,867.93** |

### 18.2 பிரிவுத் தகவல்

**(அ) புவியியல் சார்ந்த பிரிவினால் வழங்கப்படும் ஆரம்ப அறிக்கையிடல் - வருமானம் நாடுகளின் விற்பனைப்படி**

| வருமானம் | ஆசியா ரூ. மில். | ஐரோப்பா, ஆபிரிக்கா ரூ. மில். | மத்திய கிழக்கு ரூ. மில். | வட, தென் அமெரிக்கா ரூ. மில். | தென் மேற்கு பசுபிக் ரூ. மில். | மொத்தம் 2013 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| அட்டவணைப்படுத்தப்பட்ட பணிகள் | | | | | | |
| - பயணிகள் | 57,782.10 | 19,124.45 | 18,266.95 | 2,816.63 | 591.61 | 98,581.74 |
| - சரக்கு | 10,287.51 | 1,882.40 | 608.16 | 46.06 | 63.05 | 12,887.18 |
| - மேலதிக பொதி | 233.57 | 36.30 | 235.56 | 2.58 | 1.01 | 509.02 |
| - அஞ்சல் | 91.36 | 48.96 | 0.08 | 0.03 | 1.54 | 141.97 |
| | 68,394.55 | 21,092.11 | 19,110.75 | 2,865.30 | 657.21 | 112,119.91 |
| வான் முனைக்கோடி மற்றும் ஏனைய பணிகள் | 6,544.50 | - | - | - | - | 6,544.50 |
| தீர்வையற்றவை | 342.63 | 61.63 | 117.19 | - | - | 521.45 |
| அட்டவணைப்படுத்தப்படாத பணிகள் | 357.03 | - | - | - | - | 357.03 |
| விமானத்திற்குள் உணவு வழங்கல் | 1,864.77 | - | - | - | - | 1,864.77 |
| பிரிவு வருமானம் | **77,503.48** | **21,153.74** | **19,227.94** | **2,865.30** | **657.21** | **121,407.66** |

| வருமானம் | ஆசியா ரூ. மில். | ஐரோப்பா, ஆபிரிக்கா ரூ. மில். | மத்திய கிழக்கு ரூ. மில். | வட, தென் அமெரிக்கா ரூ. மில். | தென் மேற்கு பசுபிக் ரூ. மில். | மொத்தம் 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| அட்டவணைப்படுத்தப்பட்ட பணிகள் | | | | | | |
| - பயணிகள் | 41,339.08 | 18,560.65 | 11,893.60 | 2,209.62 | 727.70 | 74,730.65 |
| - சரக்கு | 8,575.97 | 1,460.55 | 726.87 | 38.94 | 16.70 | 10,819.03 |
| - மேலதிக பொதி | 177.22 | 25.41 | 202.55 | 2.34 | 0.33 | 407.85 |
| - அஞ்சல் | 77.59 | 25.28 | 0.07 | 0.02 | - | 102.96 |
| | 50,169.86 | 20,071.89 | 12,823.09 | 2,250.92 | 744.73 | 86,060.49 |
| வான் முனைக்கோடி மற்றும் ஏனைய பணிகள் | 5,842.85 | - | - | - | - | 5,842.85 |
| தீர்வையற்றவை | 453.23 | 115.74 | 152.14 | - | | 721.11 |
| அட்டவணைப்படுத்தப்படாத பணிகள் | 216.06 | - | - | - | - | 216.06 |
| விமானத்திற்குள் உணவு வழங்கல் | 1,798.09 | - | - | - | - | 1,798.09 |
| பிரிவு வருமானம் | **58,480.09** | **20,187.63** | **12,975.23** | **2,250.92** | **744.73** | **94,638.60** |

## 18. வருமானம் மற்றும் பிரிவுத் தகவல் (தொடர்ச்சி)

(ஆ) வியாபாரப் பிரிவின் இரண்டாவது அறிக்கையிடல்

| | வியாபாரப் பிரிவு | | | வியாபாரப் பிரிவு | | |
|---|---|---|---|---|---|---|
| | எயார் லையின் | விமானத்தில் உணவு வழங்கல் | குழுமம் | எயார் லையின் | விமானத்தில் உணவு வழங்கல் | குழுமம் |
| | 2013 | 2013 | 2013 | 2012 | 2012 | 2012 |
| **வருமானம்** | **ரூ. மில்.** | **ரூ. மில்.** | **ரூ. மில்.** | **ரூ. மில்.** | **ரூ. மில்.** | **ரூ. மில்.** |
| வெளிநாட்டு வாடிக்கையாளருக்கான விற்பனை | 119,542.89 | 1,864.77 | 121,407.66 | 92,840.51 | 1,798.09 | 94,638.60 |
| உள்ளகப் பிரிவு விற்பனை | 28.01 | 3,028.18 | - | 27.42 | 2,366.00 | - |
| **மொத்த வருமானம்** | **119,570.90** | **4,892.95** | **-** | **92,867.93** | **4,164.09** | **-** |
| **பெறுபேறுகள்** | | | | | | |
| வரிக்குப்பின் இலாபம்/ (இழப்பு) | (21,749.75) | 1,415.62 | (22,518.78) | (19,678.71) | 2,506.72 | (17,171.99) |
| **ஏனைய பிரிவுத் தகவல்கள்** | | | | | | |
| சொத்துக்கள் | 89,447.13 | 6,678.63 | 92,388.40 | 65,807.97 | 7,598.49 | 68,998.50 |
| பொறுப்புக்கள் | 101,142.83 | 2,973.89 | 99,548.82 | 68,056.36 | 2,963.90 | 65,948.42 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவு | 2,029.20 | 62.64 | 2,091.84 | 2,605.05 | 87.32 | 2,692.37 |
| முக்கிய பழுதுபார்த்தல்களின் மீதான செலவு | 8,011.91 | - | 8,011.91 | 3,425.85 | - | 3,425.85 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | 140.24 | 0.53 | 140.77 | 1.40 | 0.15 | 1.55 |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | 4,256.71 | 266.06 | 4,522.77 | 3,434.06 | 255.84 | 3,689.90 |
| தொழிற்பாட்டுச் செலவு | 139,715.56 | 2,779.07 | 139,438.44 | 108,341.82 | 2,337.97 | 107,957.39 |

“குழுமத்தின்” கீழ் அறிவிக்கப்பட்ட பெறுமதிகள் உள்ளகக் குழுமத்தின் மீதியை உள்ளடக்கவில்லை.

## 19. ஏனைய வருமானம் மற்றும் நன்மைகள்

| | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் விற்பனை மீதான (இழப்பு)/ இலாபம் | 0.13 | (8.87) | - | (8.87) |
| செலாவணி நன்மைகள் | 1,465.66 | 916.88 | 1,610.85 | - |
| பல்வகை விடயங்கள் (குறிப்பு 19.1) | 150.04 | 288.65 | 144.20 | 280.57 |
| பங்கிலாபம் | - | - | 2,400.00 | 150.00 |
| | **1,615.83** | **1,196.66** | **4,155.05** | **421.70** |

**19.1** பல்வகை வருமானம் விமானம் மற்றும் காப்புறுதிக் கோரல்களிலிருந்தான பெறுகைகள், வானூர்தி பாதுகாப்பு வைப்புக்களிலிருந்து பெறப்பட்ட வட்டி என்பனவற்றை உள்ளடக்குகிறது.

## 20.1 நிதிச் செலவு

| | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|
| கடன்பாடு மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் மீதான வட்டிச் செலவு மற்றும் வரவேண்டிய நிரம்பலர் நிலுவை | 2,854.39 | 1,295.91 | 2,920.41 | 1,341.50 |
| பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் மீதான நிதிக் கட்டணங்கள் | 137.38 | 164.10 | 137.38 | 164.10 |
| குத்தகைப் பொறுப்புக்கள் மீதான நிதிக் கட்டணங்கள் | 80.61 | 32.29 | 80.61 | 32.29 |
| முன்னுரிமைப் பங்கு பங்கிலாபம் | 150.00 | 150.00 | - | - |
| | **3,222.38** | **1,642.30** | **3,138.40** | **1,537.89** |

## 20.2 நிதி வருமானம்

| | | | | |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 191.21 | 72.64 | 169.62 | 65.14 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டி | 1,465.35 | 184.26 | 1,465.35 | 184.26 |
| | **1,656.56** | **256.90** | **1,634.97** | **249.40** |

## 21. தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இழப்பு

| விதிக்கப்பட்டதன்/ (வரவு வைக்கப்பட்டதன்) பின்னர் குறிப்பிடப்பட்டவை: | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|
| **விற்பனைச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை:** | | | | |
| அலுவலர் செலவு | 11,878.84 | 9,235.21 | 11,878.84 | 9,235.21 |
| வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டச் செலவு - பணிக்கொடை கொள்வனவு | 365.56 | 315.33 | 365.56 | 315.33 |
| வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டச் செலவு - ஊ.சே.நி., ஊ.ந.நி. | 1,098.00 | 896.12 | 1,098.00 | 896.12 |
| தொழிற்பாட்டு குத்தகை வாடகை | 14,514.05 | 10,207.72 | 14,514.05 | 10,207.72 |
| தேய்மானம்/ பதிவழிப்பு | 4,066.13 | 3,287.48 | 4,066.13 | 3,286.06 |
| மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு (தேறிய) | 66.41 | 101.40 | 66.41 | 101.40 |
| விமான எரிபொருள் செலவு | 63,754.50 | 48,702.87 | 63,754.50 | 48,702.87 |
| நடத்துரிமைக் கட்டணம் | 193.94 | 187.46 | 193.94 | 187.46 |
| **நிருவாகச் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டவை:** | | | | |
| அலுவலர் செலவு | 1,944.72 | 1,659.71 | 1,306.65 | 1,109.80 |
| வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டச் செலவு - பணிக்கொடை | 111.34 | 142.78 | 65.48 | 46.52 |
| வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டச் செலவு - ஊ.சே.நி., ஊ.ந.நி. | 207.83 | 176.96 | 156.05 | 130.68 |
| ஐயக்கடன்களுக்கான (மீளப்பதியப்பட்டவை)/ ஏற்பாடு | (47.58) | 0.07 | (47.58) | 0.07 |
| தேய்மானம்/ பதிவழிப்பு | 437.16 | 384.29 | 171.10 | 129.88 |
| செலாவணி மீதான நட்டம் | - | - | - | 386.23 |
| கணக்காய்வாளர் ஊதியங்கள் | 6.94 | 6.09 | 4.89 | 4.89 |
| **விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை:** | | | | |
| விளம்பரப்படுத்தல் செலவு | 438.11 | 429.53 | 438.11 | 429.53 |
| அலுவலர் செலவு | 1,480.39 | 1,207.61 | 1,480.39 | 1,207.61 |
| வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டச் செலவு - பணிக்கொடை | 12.38 | 20.29 | 12.38 | 20.29 |
| வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டச் செலவு - ஊ.சே.நி., ஊ.ந.நி. | 108.45 | 94.74 | 108.45 | 94.74 |
| தேய்மானம்/ பதிவழிப்பு | 19.48 | 18.12 | 19.48 | 18.12 |
| சந்தைப்படுத்தல் கட்டண விதிப்பு பிளைஸ்மைல்ஸ் | 7.88 | 4.03 | 7.88 | 4.03 |

## 22. வரி விதிப்பு

| வரி விதிப்பு | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|
| வருமான வரிச் செலவின் முக்கிய கூறுகள் வருமாறு: | | | | |
| **நடப்பு வருமான வரி** | | | | |
| ஆண்டிற்கான சாதாரண நடவடிக்கைகள் மீதான நடப்பு வரிச் செலவினம் (குறிப்பு 22.1) | 15.24 | 10.65 | - | - |
| முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நடப்பு வரிகளின் ஒதுக்கும் கீழ்/ (மேல்) | - | 0.30 | - | 3.29 |
| | **15.24** | **10.95** | **-** | **3.29** |

### 22.1 நடப்பு வரிச் செலவிற்கும்/ (வருமானம்) கணக்கீட்டு இழப்பு தயாரிப்பிற்குமிடையிலான இணக்கப்படுத்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| வரிக்கு முன்னரான கணக்கீட்டு இழப்பு | (22,503.54) | (17,197.43) | (21,749.75) | (19,774.74) |
| வரிக்கு உட்படாத வருமானம் | 22,523.91 | 17,235.47 | 21,794.99 | 19,774.74 |
| சாதாரண வரி வீதமான 28 சதவீதத்தின் கீழான நியதி வருமானம் | 20.37 | 38.04 | 45.24 | - |
| வரி விதிக்கத்தக்க இலாபம் | 20.37 | 38.04 | 45.24 | - |
| 28 சதவீத வரி வீதத்தில் விதிக்கப்படும் சட்ட ரீதியான வரி | 5.70 | 10.65 | - | - |
| கழிக்கப்படாத செலவினம் நீங்கலான வரித் தாக்கம் | 0.96 | - | - | - |
| ஏனைய வருமானத்தின் மீதான வரி | 8.58 | - | - | - |
| **நடப்பு வருமான வரிச் செலவு** | **15.24** | **10.65** | **-** | **-** |

## 23. கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராதவைகள்

### 23.1 மூலதனச் செலவுக் கடப்பாடுகள்

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்கான குழுமம் மற்றும் கம்பனியின் கடப்பாடுகள் சாதாரண வியாபார நடவடிக்கையில் ஏற்படுத்தும் நிகழ்வுகள் பின்வருமாறு:

| | 2013 ரூ. மில். | 2012 ரூ. மில். |
|---|---|---|
| ஒப்பந்தம் செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாதவை | | |
| உருவச் சொத்துக்கள் | 802.30 | 111.25 |
| அருவச் சொத்துக்கள் | 40.25 | 15.16 |
| எந்திர பழுதுபார்ப்பு | 2,028.00 | 1,530.30 |
| வானூர்தியின் உட்புறம் மாற்றியமைப்பு | 418.28 | 1,031.71 |
| | 3,288.83 | 2,688.42 |
| சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவை ஆனால் ஒப்பந்தம் செய்யப்படாதவை | | |
| உருவச் சொத்துக்கள் | 501.96 | 103.33 |
| அருவச் சொத்துக்கள் | - | 31.95 |
| | 501.96 | 135.28 |
| | 3,790.79 | 2,823.70 |

### 23.2 நிதியியல் கடப்பாடுகள்

(அ) மாச்சு 31இல் உள்ளவாறு இரத்துச் செய்யமுடியாத தொழிற்பாட்டுக் குத்தகைகளின் கீழ் கம்பனியின் மொத்த எதிர்கால குறைந்தபட்ச கடப்பாடு பின்வருமாறு:

| | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|
| ஓராண்டிற்குள் | 13,112.14 | 13,269.28 |
| ஓராண்டிற்குப் பின் ஆனால் ஐந்தாண்டிற்கு மேற்படாதவை | 29,256.80 | 41,761.83 |
| ஐந்தாண்டுகளுக்குப் பின்னா் | 9,491.80 | 22,964.35 |
| | 51,860.73 | 77,995.46 |

(ஆ) 2013 மாச்சு 31இல் உள்ளவாறு கம்பனியானது குத்தகைக்குப் பெறப்பட்ட விமானத்திற்கான பிணையாக ரூ.864.58 மில்லியன் (ஐ.அ.டொலா் 682 மில்லியன்) பெறுமதியான நாணயக் கடிதத்தினை வழங்கியது.

(இ) கம்பனியினாலும் துணை நிறுவனத்தினாலும் குத்தகைக்குப் பெறப்பட்ட காணி மற்றும் கட்டடத்திற்கான எஞ்சிய குத்தகை வாடகைக் கடப்பாடு பின்வருமாறு:

| | குழுமம் 2013 ரூ. மில். | குழுமம் 2012 ரூ. மில். | கம்பனி 2013 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். |
|---|---|---|---|---|
| **கொடுபடத்தக்க தவணைப் பணம்:** | | | | |
| ஓராண்டிற்குள் | 414.49 | 408.51 | 390.28 | 384.30 |
| ஓராண்டிற்குப் பின் ஆனால் ஐந்தாண்டிற்கு மேற்பட்டவை | 1,644.08 | 1,641.94 | 1,526.49 | 1,522.93 |
| ஐந்தாண்டுகளுக்குப் பின்னா் | 3,539.85 | 3,956.48 | 3,175.16 | 3,569.00 |

### 23.3 எதிர்பாராதவைகள்

**கம்பனி**

முகாமைத்துவம் 2013 மாச்சு 31இல் உள்ளவாறு எதிர்பாராத பொறுப்புக்கள் ரூ.2,988.94 மில்லியன் (2012: 2,976.20 மில்லியன்) என மதிப்பிட்டுள்ளது. கம்பனிக்கெதிராக செய்யப்படுகின்ற சட்ட நடவடிக்கைகள், ஏனைய கோரல்கள் மற்றும் சாத்தியமான கோரல்கள் தொடா்பாக கம்பனியின் சாதாரண வியாபார நடவடிக்கையில் ஏற்படுகின்ற ஏதேனும் எதிர்பாரா பொறுப்புக்கள் தொடா்பாக ஏற்படுகின்ற குறிப்பிடத்தக்க பொறுப்பினையும் பணிப்பாளா்கள் எதிர்பாா்க்கவில்லையாகையால் இந்நிதியியல் கூற்றுக்களில் அவற்றிற்காக எவ்வித ஒதுக்கமும் செய்யப்படவில்லை.

புதிய வானூர்தியின் சமையலறையை நிருமாணிப்பதற்காக துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டினால் பெறப்பட்ட ஐ.அ.டொலா் 3 மில்லியனுக்கு கம்பனி உத்தரவாதம் வழங்கியிருக்கிறது.

## 23. கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராதவைகள் (தொடர்ச்சி)

### 23.3 எதிர்பாராதவைகள் (தொடர்ச்சி)

**துணை நிறுவனம்**

2013 மாச்சு 31இல் உள்ளவாறு கம்பனிக்கெதிராக தொழில் நீதிமன்றத்தில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. போதுமான நம்பகத்தன்மையுடன் கடப்பாட்டுத் தொகைகளைக் கணிக்க முடியாததினாலும் அத்தகைய பொறுப்புக்கள் இந்நிதியியல் கூற்றுக்களை பெருமளவிற்கு பாதிக்கமாட்டாது எனப் பணிப்பாளர்கள் கருதியமையினாலும் இந்நிதியியல் கூற்றுக்களில் அவற்றிற்காக ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை.

## 24. பிணையிடப்பட்ட சொத்துக்கள்

**குழுமம்/ கம்பனி**

பெறப்பட்ட வங்கித்தொழில் வசதிகளுக்கெதிராக கம்பனி பின்வரும் பங்கு மூலதனத்தினை பிணையாக வழங்கியுள்ளது. தயவுசெய்து குறிப்பு 14.2 மற்றும் 14.3 ஐப் பார்க்கவும்

## 25. அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்

2013 மாச்சில் கம்பனி இரண்டு A321 விமானங்களை 2014இல் பெறுவதற்காக விமானக் குத்தகையாளர் ஒருவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்துள்ளது.

2014 இற்கும் 2021 இற்குமிடையில் நான்கு A350 - 900 விமானங்களையும் ஆறு A330 - 300 எயார்பஸ்களையும் கொள்வனவு செய்வதற்காகவும் 2013 யூன் கம்பனி எயார்பஸ்சுடன் கொள்வனவு உடன்படிக்கையொன்றினை மேற்கொண்டது.

2013 யூலையில் கம்பனி ரூ.17 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறைகளை விற்பனை செய்தது.

## 26 தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்

### 26.1 குழுமம் மற்றும் கம்பனி

#### 26.1.1 முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்

தொடர்பான தரப்பினர் என்பது கம்பனியினதும் அதன் துணைக் கம்பனியினதும் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பனவற்றிற்கான அதிகாரத்தினையும் பொறுப்புக்களையும் கொண்டுள்ள அத்தகைய ஆட்கள் என வரைவிலக்கணம் செய்யப்பட்ட முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரை உள்ளடக்குகிறது. அத்தகைய முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் மேலே விபரிக்கப்பட்ட பிரமாணங்களை பூர்த்தி செய்த பணிப்பாளர் சயின் முதன்மை நிறைவேற்று அலுவலர், ஏனைய முகாமைத்துவ நிறைவேற்று அலுவலர் ஆகியோரை உள்ளடக்குகிறது.

| | 2013<br>ரூ. மில்.<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) | 2012<br>ரூ. மில்.<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) |
|---|---|---|
| குறுங்கால நன்மைகள் | 150.66 | 118.13 |
| தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் | 9.55 | 18.97 |

மேலேயுள்ளவை இவ்வாண்டில் செலுத்தப்பட்ட ரூ.46.6 மில்லியன் (2012.: ரூ.34.73 மில்லியன் ) கொண்ட பணிப்பாளர்களின் ஊதியத்தினையும் உள்ளடக்குகிறது. மேலே வெளிப்படுத்தப்பட்ட நன்மைகளுக்குப் புறம்பாக முதன்மை முகாமைத்துவ ஆளணியினர், அவர்களது வாழ்க்கைத் துணைவர், தங்கியிருக்கும் பிள்ளைகள் ஆகியோர் அவர்கள் பதவியிருக்கும் காலப்பகுதியில் சிறிலங்கன் எயார்லையின்ஸின் வியாபாரப் பகுப்பில் கட்டணமின்றி பயணிக்க உரித்துடையவராவர்.

## 26 தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

## 26.2 குழுமம்

**26.2.1** (அ) வழமையான வியாபார நடவடிக்கையின் போது அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட பின்வருவன உள்ளிட்ட கணிசமானளவு கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | 2013<br>ரூ. மில்.<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) | 2012<br>ரூ. மில்.<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) |
|---|---|---|
| விற்பனைகள் | 5,226.70 | 171.85 |
| கடன்கள் - பெறுகைகள் | 761.64 | 2,558.99 |
| - வட்டி உட்பட மீள்கொடுப்பனவுகள் | (4,547.37) | (725.59) |
| பொருட்கள்/ பணிகளின் கொள்வனவு மற்றும் நியதிச் சட்ட ரீதியாக வரவேண்டியவை* | (30,955.27) | (7,834.62) |

* பொருட்கள்/ பணிகளின் கொள்வனவு மற்றும் சட்ட ரீதியான வரவுகள் பிற்போடப்பட்ட ஒழுங்குகளின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகிறது.

**26.2.1** (ஆ) ஐந்தொகை திகதியிலுள்ளவாறு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடன் பின்வரும் வசதிகள் காணப்பட்டன.

- ஐ.அ.டொலர் 11.1 மில்லியன் கொண்ட குறுங்காலக் கடன் (2012: ஐ.அ.டொலர் 20 மில்லியன்)
- ஐ.அ.டொலர் 51 மில்லியன் கொண்ட மேலதிகப் பற்று வசதி (2012: ஐ.அ.டொலர் 31 மில்லியன்)
- ஐ.அ.டொலர் 10 மில்லியன் கொண்ட வங்கி உத்தரவாத வசதிகள் (2012: ஐ.அ.டொலர் 10 மில்லியன்)

**26.2.2** அறிக்கையிடப்படும் திகதியிலுள்ளவாறு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடன் பின்வரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் காணப்பட்டன.

- ரூ.39,677.64 மில்லியன் கொண்ட தேறிய வெளிநின்ற கொடுபடத்தக்க நிலுவை (2012: ரூ.26,549.71 மில்லியன்)
- ரூ.31 மில்லியன் பெறுமதி கொண்ட குறுங்கால வைப்புக்கள் (2012: ரூ.91.78 மில்லியன்).
- ரூ.28.55 பில்லியன் முகப்புப் பெறுமதியுடன் கூடிய திறைசேரி முறிகளின் முதலீடு (குறிப்பு 7.3).
- 15 சதவீதத்தில் அமைந்த 10 மில்லியன் கொண்ட வாக்குரிமையற்ற மீட்கத்தக்க ஒன்றுசேர்ந்த மாற்றத்தக்க (10 ஆண்டுகள்) முன்னுரிமைப் பங்குகள்

* அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிறுவனங்களிலிருந்து வரவேண்டிய/ கொடுபட வேண்டிய மீதிகள், வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்/ கொடுபடத்தக்கவைகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**26.2.3** வழமையான வியாபார காலப்பகுதியில் குழுமமானது பின்வரும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடன் குறிப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது:

| | |
|---|---|
| எயார்போர்ட் அன்ட் ஏவியேசன் சேர்விஸஸ் லிமிடெட் | இலங்கை வங்கி |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| உள்நாட்டரசிறைத் திணைக்களம் | மிகின் லங்கா லிமிடெட் |
| சிவில் வான் போக்குவரத்து அதிகாரசபை | ஊழியர் சேம நிதியம் |

தொழிலாளர் ஓய்வுகால நன்மைகளுக்கான உதவுதொகைகள் தொடர்பான மேலதிகக் கொடுக்கல்வாங்கல்கள் ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டன.

## 26.3 கம்பனி

**26.3.1** வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது துணை நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட பின்வருவன உள்ளிட்ட கொடுக்கல்வாங்கல்கள்

| கொடுக்கல்வாங்கலின் தன்மை | 2013<br>ரூ. மில்.<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) | 2012<br>ரூ. மில்.<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) |
|---|---|---|
| சரக்குச் பணிகள் | 8.44 | 9.38 |
| வானூர்திக்குள் உணவகம் மற்றும் ஏனைய பணிகள் | (3,008.58) | (2,347.97) |
| பங்கிலாபம் | 2,400.00 | 150.00 |
| நீண்ட காலக் கடன்களின் மீள்கொடுப்பனவு | **(236.93)** | **(232.37)** |

**26.3.2** அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு துணை நிறுவனத்துடனான வெளிநின்ற மீதிகள் பின்வருமாறு:

- வரவேண்டிய தொகை ரூ.2,441.19 மில்லியன் (2012: ரூ.2,869.98 மில்லியன்).
- கடன் நிலுவை தொகை ரூ.1,253.93 மில்லியன் (2012:1,494.13 மில்லியன்). ஏற்புடைத்தான வட்டி வீதம் இணக்கப்பட்ட உச்ச தொகைக்கு உட்பட்டு இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதமாக இருக்கும்.
- 15 சதவீதத்தில் அமைந்த 10 மில்லின் வாக்குரிமையற்ற மீட்கத்தக்க ஒன்றுசேர்ந்த (5 ஆண்டுகள்) முன்னுரிமைப் பங்குகள்.

**26.3.3** பின்வருவன உள்ளிட்ட கொடுக்கல்வாங்கல்கள் வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டன:

| | 2013<br>ரூபா<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) | 2012<br>ரூபா<br>பெறுகைகள்/<br>(கொடுப்பனவுகள்) |
|---|---|---|
| விற்பனைகள் | 5,018.27 | 37.73 |
| கடன்கள் - பெறுகைகள் | 761.64 | 2,558.99 |
| - வட்டி உள்ளிட்ட மீள்கொள்வனவுகள் | (4,397.37) | (575.59) |
| பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு மற்றும் நியதிச் சபைகளிலிருந்து வரவேண்டியவை* | (30,502.97) | (7,693.17) |

* பொருட்களின்/ பணிகளின் கொள்வனவு மற்றும் நியதிச் சபைகளிலிருந்து வரவேண்டியவைகள் பிற்போடப்பட்ட ஒழுங்குகளின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றன.

கம்பனியினால் பெறப்பட்ட வசதிகளின் பட்டியல் 26.2.1(ஆ) இல் காட்டப்பட்ட அதே பட்டியலாகும்.

**26.3.4** அறிக்கையிடும் திகதியின்படி பின்வரும் சொத்துக்களும் பொறுப்புக்களும் இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் காணப்பட்டன:

- ரூ.39,945.93 மில்லியன் (2012: ரூ.26,606.68 மில்லியன்)* கொண்ட தேறிய வெளிநின்ற கொடுபடத்தக்க நிலுவை.
- ரூ.31 மில்லியன் பெறுமதியான குறுங்கால வைப்புக்கள் (2012: ரூ.91.78 மில்லியன்).
- ரூ.28.55 பில்லியன் முகப்புப் பெறுமதியுடன் கூடிய திறைசேரி முறியில் முதலீடு (குறிப்பு 7.3).

* நிதியியல் நிலைமைக் கூற்றுக்களில் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களிலிருந்தான அவற்றிற்கு செலுத்தப்பட வேண்டிய மீதிகள் வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்/ செலுத்தத்தக்கவைகளின் கீழும் வட்டி உழைக்கத்தக்க பொறுப்புக்களின் கீழும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**26.3.5** கம்பனியுடன் குறிப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்ட அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களின் பட்டியல் குழுமத்தின் கீழ் வெளிக்காட்டப்பட்டுள்ள அதே நிறுவனங்களேயாகும். (குறிப்பு 26.2.3).

## 27 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குறிக்கோள்களும் கொள்கைகளும்

கம்பனியின் முதன்மையான நிதியியல் பொறுப்புக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள், வர்த்தகம் மற்றும் செலுத்தத்தக்கவைகள் மற்றும் ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இந்நிதியியல் பொறுப்புக்களின் முக்கிய நோக்கம் யாதெனில் கம்பனியின் தொழிற்பாடுகளுக்கு நிதியிடுவதேயாகும். கம்பனியின் நிதியியல் சொத்துக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

கம்பனி முகாமைத்துவம் அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவ கணிப்புக்களை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தியதுடன் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ள பின்வரும் நிதியியல் இடர்நேர்வுகளையும் அடையாளம் கண்டிருக்கிறது.

(i) சந்தை இடர்நேர்வு
- வட்டி வீத இடர்நேர்வு
- வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

(ii) திரவத்தன்மை இடர்நேர்வு
(iii) கொடுகடன் இடர்நேர்வு

கம்பனி அதன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் சந்தைகள் மற்றும் ஏனைய நிதியியல் இடர்நேர்வுகளை எதிர்நோக்கும் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக கிரமமான அடிப்படையில் மீளாய்வு செய்ததுடன் இவை, இடர்நேர்வுகள் அடையாளம் காணப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் மூலம் நிருவகிக்கப்பட்டதுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கிணங்க அளவிடப்பட்டு முகாமைப்படுத்தப்பட்டன.

## 27 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குறிக்கோள்களும் கொள்கைகளும் (தொடர்ச்சி)

### (i) சந்தை இடர்நேர்வு

#### வட்டி வீத இடர்நேர்வு

வட்டி வீத இடர்நேர்வு என்பது சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக நிதிச் சாதனங்களின் எதிர்கால காசுப்பாய்ச்சலின் சந்தைப் பெறுமதி தளம்பலுறும் என்பதாகும். சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக இடர்நேர்வுகளுக்குக் கம்பனி உள்ளாகும் தன்மை முக்கியமாக மிதக்கும் வட்டி வீதங்களுடன் கூடிய கம்பனியின் நீண்ட காலப் படுகடன் கடப்பாடுகளுடன் தொடர்புபட்டதாக விளங்குகிறது.

கம்பனியின் கொள்கை யாதெனில், வட்டி வீத தளம்பல்களின் தாக்கத்தினைத் தணிக்கும் பொருட்டு விமானங்களின் குத்தகை உட்பட கடன்பாடுகளின் நிலையான வீதங்களுக்கும் மாறி வீதங்களுக்குமிடையில் பொருத்தமான சமநிலையொன்றினைப் பேணுவதேயாகும். கம்பனி அதன் மாறி வீதக் கடன்பாடுகள் மீதான வட்டி வீத தளம்பல்களுக்குள்ளாகும் தன்மையின் உச்ச அளவினைக் கட்டுப்படுத்துவதற்காக பெறுமதிச் சாதனங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டது.

பின்வரும் அட்டவணையானது கடன்கள் மற்றும் கடன்பாடுகள் மற்றும் முறிகளின் முதலீடுகள் மீதான வட்டி வீதங்களில் ஏற்படும் நியாயமான சாத்தியமான மாற்றங்களுக்கேற்ப மாறும் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது. மற்றைய அனைத்து மாறிகளும் நிலையாக இருக்கும் பொழுது, கம்பனியின்/ குழுமத்தின் வரிக்கு முன்னரான இழப்பு, மிதக்கும் வீதக் கடன்பாடுகள் அதேபோன்று திறைசேரி முறிகளின் மீதான தாக்கத்தினூடாக பாதிக்கப்படுவதனை பின்வரும் காட்டுகிறது.

| | வரிக்கு முன்னரான இழப்பு மீதான தாக்கம் | | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மீதான தாக்கம் | |
|---|---|---|---|---|
| | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். |
| வட்டி வீதத்தின் அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | | | | |
| +1% | (611.29) | (613.96) | (921.43) | (921.43) |
| -1% | 611.29 | 613.96 | 921.43 | 921.43 |

* வட்டி வீதத்தின் அதிகரிப்பு இழப்புக்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துகிறது.

#### வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வெளிநாட்டு நாணய இடர்நேர்வு என்பது வெளிநாட்டுச் செலாவணி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக நிதியியல் சாதனமொன்றின் எதிர்கால காசுப்பாய்ச்சலின் சந்தைப் பெறுமதி தளம்பலடைவதாகும். கம்பனியின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வருமானம், செலவுகள் மற்றும் ஏனைய நிதியியல் சாதனங்கள் என்பனவற்றின் காரணமாக அது வெளிநாட்டுச் செலாவணி வீத தளம்பல்களின் தாக்கத்திற்கு உட்படுகிறது.

கம்பனியானது அதன் வெளிநாட்டுச் செலாவணியின் பாதிப்புக்குள்ளாகும் தன்மையினை, சாத்தியமானளவிற்கு அதன் கொள்கைகளில் பொருத்தப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டமை, ஒவ்வொரு முக்கியமான நாணயங்களின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் என்பன மூலம் கட்டுப்படுத்திக் கொண்டது. மேலும், கம்பனியானது அதன் வெளிநாட்டு நாணயப் பாதிப்புக்களை வெளிநாட்டு நாணய முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தியது.

பின்வரும் அட்டவணையானது கம்பனியின்/ குழுமத்தின் வரிக்கு முன்னரான இழப்பு (நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக) மற்றைய அனைத்து மாறிகளும் மாறாது நிலையாக இருக்கும் பொழுது ஐக்கிய அமெரிக்க டொலரின் செலாவணி வீதத்தில் ஏற்படும் நியாயமான சாத்தியமான மாற்றங்களின் காரணமாக எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதனை எடுத்துக்காட்டுகிறது. மற்றைய அனைத்து நாணயங்கள் தொடர்பிலும் வெளிநாட்டு நாணய மாற்றங்களுக்கு குழுமம் உள்ளாகும் தன்மை பெரியளவில் காணப்படவில்லை.

| | வரிக்கு முன்னரான இழப்பு மீதான தாக்கம் | |
|---|---|---|
| | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். |
| செலாவணி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு/ (வீழ்ச்சி) (ஐ.அ.டொலர்) | | |
| +3% | 742.72 | 725.96 |
| -3% | (742.72) | (725.96) |

## 27 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குறிக்கோள்களும் கொள்கைகளும் (தொடர்ச்சி)

### (ii) திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது கம்பனியானது அதன் தற்போதைய மற்றும் எதிர்காலக் காசு கடப்பாடுகளை உரிய திகதியில் செலுத்த முடியாமல் போவதன் காரணமாக ஏற்படுகின்றதொரு இடர்நேர்வாகும். கம்பனியானது காசு முகாமைத்துவத்தினையும் வரவு செலவுத்திட்ட செயற்பாடுகளின் நாளாந்தம்/ வாராந்தம்/ மாதாந்தம்/ வருடாந்தம் மேற்கொள்வதன் மூலம் நிதிப் பற்றாக்குறைகள் தொடர்பான இடர்நேர்வுகளைக் கண்காணிக்கின்றது. கம்பனியானது இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு நீண்ட கால மற்றும் குறுங்காலக் கடன்கள், வங்கி மேலதிகப் பற்று வசதிகள் மற்றும் நிதியியல்/ தொழிற்பாட்டுக் குத்தகைகள் என்பன உட்பட, நிதியியல் நிறுவனங்களிலிருந்தான பல்வேறுபட்ட நிதியியல் மூலங்களிலிருந்து பெற்றுக்கொண்டது.

மூலதன உள்ளீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக திறைசேரி முறிகளின் மூலமாக இலங்கை அரசாங்கம் கம்பனியில் முதலீடு செய்தது. கம்பனியானது திறைசேரி முறிகளின் முதிர்ச்சிக்கு முன் அவற்றை காசாக மாற்றிக் கொள்ளும் செயன்முறையில் ஈடுபட்டது. இது அடுத்த நிதியியல் ஆண்டில் திரவ நிலைமையினை வலுப்படுத்தும்.

கீழேயுள்ள அட்டவணை ஒப்பந்த ரீதியான கழிவிடப்படாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் குழுமத்தின்/ கம்பனியின் நிதியியல் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டினை தொகுத்துத் தருகிறது.

| | கேள்வியின் அடிப்படையில் | 3 மாதங்களுக்குக் குறைவானது | 3 - 12 மாதங்கள் | 1 - 5 ஆண்டுகள் | 5 ஆண்டுகளுக்குக் கூடுதலானது |
|---|---|---|---|---|---|
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **குழுமம்** | | | | | |
| வட்டி உழைக்கும் பொறுப்புக்கள் | 6,849.32 | 3,191.91 | 8,851.75 | 29,433.58 | 735.29 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தகவை | 10,418.00 | 20,153.85 | - | - | - |
| முன்னுரிமைப் பங்குகள் | - | - | - | - | 2,200.00 |
| | 17,267.32 | 23,345.76 | 8,851.75 | 29,433.58 | 2,935.29 |
| **கம்பனி** | | | | | |
| வட்டி உழைக்கும் பொறுப்புக்கள் | 6,849.32 | 3,133.00 | 8,675.04 | 28,400.38 | 735.29 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தகவை | 10,418.00 | 22,036.60 | - | - | - |
| | 17,267.32 | 25,169.60 | 8,675.04 | 28,400.38 | 735.29 |

### (iii) கொடுகடன் இடர்நேர்வு

கொடுகடன் இடர்நேர்வு என்பது நிதிச் சாதனமொன்றின் கீழ் அல்லது வாடிக்கையாளர் ஒப்பந்தமொன்றின் கீழ், இணைத்தரப்பினர் தமது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக ஏற்படுகின்ற நிதியியல் இழப்பாகும். கம்பனியானது அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தே அதன் கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு உட்படுகிறது.

பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்களின் விற்பனை அயட்டா இணைந்த விற்பனை முகவர்களினூடாகவே முக்கியமாக இடம்பெறுகிறது. ஒப்பீட்டு ரீதியில் அத்தகைய விற்பனைகள் பரந்தளவிற்கு பன்முகப்பட்டிருப்பதன் காரணமாக இடர்நேர்வுகள் சிறிதளவேயாகும். இம்முகவர்களிடமிருந்தான தீர்ப்பனவுகள் அயட்டாவினால் அவற்றின் பயணிகள் மற்றும் சரக்குத் தீர்ப்பனவுத் திட்டத்தினூடாக சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்படுகின்ற நிதியம் எயார்லையின்சுக்கு அயட்டாவினால் நேரடியாக தீர்ப்பனவு செய்யப்படுகிறது. மேலும், அயட்டா அத்தகைய முகவர்களின் நாணய நம்பகத்தன்மை பற்றி உத்தரவாதத்தினையும் வழங்குகிறது.

முக்கிய விமான நிறுவனங்களுக்கிடையேயான பெறத்தக்கவையும் கொடுபடத்தக்கவையும் அயட்டா தீர்வகத்தினூடாக முக்கியமாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. பெறத்தக்கவைகளும் கொடுபடத்தக்கவைகளும் பொதுவாகக் கழிக்கப்பட்டு வாராந்த இடைவெளியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. இது செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வுகளில் தெளிவான குறைப்பிற்கு வழிவகுக்கிறது.

ஏனைய பணிகள் தொடர்பு முறைகளுக்காக, வழங்கப்பட்ட பணிகளின் தன்மை மற்றும் செயற்பரப்பினைப் பொறுத்து பிணைகள் தேவைப்படுத்தப்படுகின்றமை கடன்பாட்டாளர்களிடமிருந்தான அத்தகைய பிணையங்கள் வங்கி உத்தரவாதங்களையும் பாதுகாப்பு வைப்புக்களையும் உள்ளடக்குகின்றன.

இடர்நேர்வுகள் அடையாளம் காணப்படுகின்ற பொழுது பெறத்தக்க ஐயத்திற்குரிய கணக்குகளுக்காக பெறுமதி இழப்பு மேற்கொள்ளப்படுகிறது.

### மூலதன முகாமைத்துவம்

இந்நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.2 இல் கூடியளவிற்கு முழுமையாக விபரிக்கப்பட்டவாறு, ஒப்புதலளிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் தேவையான நிதியிடல்களை உள்ளிடுவதற்கான அதன் கடப்பாட்டின் எடுத்துக்காட்டியது (குறிப்பு 11 இனைப் பார்க்கவும்)

தற்போதைய சந்தை நிலைமைகளையும் குழுமத்தின் தொழிற்பாடுகளையும் பிரதிபலிக்கச் செய்வதற்கான சீராக்கங்களை செய்வதற்காக மூலதன அமைப்பினையும் எடுக்கப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளையும் குழும முகாமைத்துவம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து கண்காணித்தது.

# பத்தாண்டு மீளாய்வு - கம்பனி

| | | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|
| **வருமானக் கூற்று** | | | | |
| வருமானம் | ரூ. மில்லியன் | 45,397.54 | 53,808.85 | 61,160.14 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூ. மில்லியன் | 39,441.82 | 54,145.20 | 60,720.29 |
| தேறிய இலாபம்/ (இழப்பு) | ரூ. மில்லியன் | 7,424.48 | 479.87 | 476.53 |
| **ஐந்தொகை** | | | | |
| பங்கு மூலதனம்/ கூறப்பட்ட மூலதனம் | ரூ. மில்லியன் | 5,146.35 | 5,146.35 | 5,146.35 |
| நடப்பிலில்லாச் சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 13,072.68 | 10,908.79 | 16,136.77 |
| நடப்பிலுள்ள சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 24,954.44 | 22,303.26 | 21,866.73 |
| மொத்தச் சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 38,123.01 | 33,307.94 | 38,003.50 |
| நடப்பிலுள்ள பொறுப்புக்கள் | ரூ. மில்லியன் | 20,612.84 | 22,381.67 | 25,485.05 |
| **விளைவு/ அலகு ஒன்றிற்கான செலவு** | | | | |
| ஒட்டுமொத்த விளைவு | ரூ. தொன் கி.மீ. | 47.3 | 48.1 | 52.2 |
| அலகு ஒன்றிற்கான செலவு | ரூ. தொன் கி.மீ. | 34.8 | 36.2 | 37.62 |
| இலாப நட்டமில்லா சுமைக் காரணி | % | 68.7 | 74.9 | 72.0 |
| வ.ப.கி. ஒன்றிற்கான வருமானம் | ரூ./ வ.ப.கி. | 4.9 | 5.1 | 5.3 |
| **உற்பத்தி** | | | | |
| பயணிகள் இயலளவு | கி.இ.கீ. மில்லியன் | 9,692.08 | 11,326.54 | 11,934.86 |
| ஒட்டுமொத்த இயலளவு | கி.தொன் கி.மீ. மில்லியன் | 1,289.94 | 1,484.02 | 1,590.55 |
| **போக்குவரத்து** | | | | |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | எண்ணிக்கை ஆயிரத்தில் | 2,065 | 2,423 | 3,005 |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | வ.ப.கி. மில்லியன் | 7,276.35 | 8,142.54 | 9,050.44 |
| பயணிகள் சுமைக் காரணி | % | 75.08 | 71.89 | 75.83 |
| கொண்டு செல்லப்பட்ட சரக்கு | தொன்கள் | 54,943 | 66,977 | 82,142 |
| கொண்டு செல்லப்பட்ட சரக்குச் சுமை | வ.தொன் கி. மில்லியன் | 240.90 | 296.68 | 300.73 |
| கொண்டு செல்லப்பட்ட ஒட்டுமொத்தச் சுமை | வ.தொன் கி. மில்லியன் | 896.59 | 1,039.34 | 1,102.77 |
| சரக்குச் சுமைக் காரணி | % | 52.08 | 56.95 | 56.11 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | 69.51 | 70.04 | 69.33 |
| **அலுவலர்** | | | | |
| சராசரி பலம் | எண்ணிக்கை | 4,714 | 5,163 | 5,395 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் | ரூபா | 9,630,365 | 10,422,012 | 11,336,449 |
| ஊழியர் ஒருவருக்கான இயலளவு | தொன் கி.மீ. | 273,640 | 287,433 | 294,820 |
| ஊழியர் ஒருவருக்கான கொண்டு செல்லப்பட்ட சுமை | தொன் கி.மீ. | 190,197 | 201,305 | 204,406 |
| **தொகுதி** | | | | |
| A320-200 | எண்ணிக்கை | 3 | 5 | 5 |
| A330-200 | எண்ணிக்கை | 4 | 4 | 4 |
| A340-300 | எண்ணிக்கை | 5 | 5 | 5 |
| டேபோ ஒட்டர்/ ருவின் ஒட்டர் | எண்ணிக்கை | - | 2 | 2 |
| ஆண்டு இறுதியில் பணியிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | 12 | 16 | 16 |

## பத்தாண்டு மீளாய்வு - கம்பனி

| 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---:|---:|---:|---:|---:|---:|---:|
| 67,963.76 | 79,128.56 | 73,307.77 | 62,363.58 | 77,125.45 | 92,867.93 | **119,570.90** |
| 69,406.68 | 82,154.01 | 84,794.86 | 69,026.74 | 81,334.34 | 111,775.88 | **143,972.27** |
| 568.04 | 4,428.23 | -9,305.94 | -2,698.20 | -381.61 | -19,778.03 | **-21,749.75** |
| | | | | | | |
| 5,146.35 | 5,146.35 | 5,146.35 | 5,146.35 | 5,146.35 | 19,432.67 | **32,032.75** |
| 16,568.73 | 15,730.43 | 19,333.18 | 28,531.75 | 19,862.87 | 43,735.26 | **34,541.91** |
| 21,347.46 | 32,209.67 | 15,008.38 | 15,910.82 | 18,276.59 | 22,072.71 | **54,905.22** |
| 37,916.19 | 47,940.10 | 34,341.56 | 44,442.57 | 38,139.46 | 65,807.97 | **89,447.13** |
| 25,006.65 | 29,134.89 | 25,012.31 | 28,399.92 | 28,017.97 | 58,498.83 | **68,684.68** |
| | | | | | | |
| 55.71 | 61.01 | 64.85 | 54.94 | 60.27 | 64.47 | **74.31** |
| 40.30 | 46.48 | 50.71 | 43.37 | 45.92 | 57.28 | **67.27** |
| 72.34 | 76.18 | 78.19 | 78.94 | 76.19 | 88.84 | **90.52** |
| 5.6 | 6.5 | 6.8 | 5.8 | 6.3 | 8.2 | **9.2** |
| | | | | | | |
| 12,375.62 | 12,599.58 | 11,731.56 | 10,724.83 | 12,481.41 | 14,248.94 | **15,944.31** |
| 1,695.91 | 1,741.10 | 1,635.62 | 1,541.03 | 1,755.23 | 1,978.33 | **2,186.96** |
| | | | | | | |
| 3,176 | 3,196 | 2,735 | 2,558 | 2,867 | 3,459 | **4,255** |
| 9,535.79 | 9,793.05 | 8,546.44 | 8,357.89 | 9,584.02 | 11,270.23 | **12,968.74** |
| 77.05 | 77.73 | 72.85 | 77.93 | 76.79 | 79.10 | **81.34** |
| 88,833 | 93,161 | 73,106 | 72,058 | 86,053 | 87,750 | **101,100** |
| 325.97 | 350.35 | 302.36 | 283.83 | 332.98 | 345.67 | **377.75** |
| 1,150.84 | 1,232.62 | 1,065.15 | 1,028.11 | 1,184.13 | 1,338.30 | **1,513.70** |
| 58.44 | 61.60 | 53.17 | 56.42 | 56.80 | 53.78 | **53.89** |
| 67.86 | 70.80 | 65.12 | 66.72 | 67.46 | 67.65 | **69.22** |
| | | | | | | |
| 5,272 | 5,113 | 4,837 | 4,614 | 4,998 | 5,594 | **6,359** |
| 12,891,457 | 15,475,955 | 15,155,627 | 13,516,164 | 15,431,263 | 16,601,346 | **18,803,412** |
| 321,683 | 340,523 | 338,148 | 333,991 | 351,186 | 353,652 | **343,916** |
| 218,293 | 241,077 | 220,210 | 222,825 | 236,922 | 239,238 | **238,041** |
| | | | | | | |
| 5 | 5 | 3 | 3 | 4 | 7 | **8** |
| 4 | 4 | 4 | 4 | 5 | 7 | **7** |
| 5 | 5 | 5 | 5 | 5 | 6 | **6** |
| 2 | - | - | - | 2 | 2 | **1** |
| 16 | 14 | 12 | 12 | 16 | 22 | **22** |

## கலைச் சொல்லாக்கம்

**கிடைக்கத்தக்க இருக்கை கிலோ மீற்றர் (கி.இ.கி.)**

விற்பனைக்கு வழங்கப்பட்ட இருக்கைகளும் அதில் அவர்கள் பயணித்த தூரமும்.

**கிடைக்கத்தக்க தொன் கிலோ மீற்றர் (கி.தொ.கி.)**

இது போக்குவரத்துச் சாதனங்களை அளவிடுமொன்றாகும்.

பறப்பொன்றின் மூலம் உருவாக்கப்பட்டு கிடைக்கத்தக்க தொன் கிலோ மீற்றர்கள் என்பது பறந்த தூரத்தினால் பெருக்கப்பட்ட தொன்களினால் அளவிடப்பட்ட விமானப் பயணிகள் பாரத்தின் இயலளவாகும்.

**வருமானப் பயணிகள் கிலோ மீற்றர் (வ.ப.கி.)**

கொண்டு செல்லப்பட்ட பயணிகளையும் அவர்கள் கொண்டு செல்லப்பட்ட தூரத்தினாலும் உருவாக்கப்பட்டது.

**வருமான தொன் கிலோ மீற்றர் (வ.தொ.கி.)**

தொன்களில் காவிச் செல்லப்பட்ட பயணிகள் மற்றும் சரக்குகளினதும் அவை கொண்டு செல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கம்.

**சுமைக் காரணி**

வழங்கப்பட்ட இயலளவிற்கான வருமானச் சுமையின் சதவீதத் தொடர்பு.

கிடைக்கத்தக்க இருக்கை கிலோ மீற்றர்களுக்கு வருமானப் பயணிகள் கிலோ மீற்றர்களின் தொடர்புபட்டதாக பயணிகள் சுமைக் காரணி விளங்குகையில் ஒட்டுமொத்த சுமைக் காரணி கிடைக்கத்தக்க இருக்கை கிலோ மீற்றருக்கான வருமானப் பயணிகள் கிலோ மீற்றருடன் தொடர்பானதாக விளங்குகிறது.

**வருமானப் பயணிகள் கிலோ மீற்றரொன்றிற்கான வருமானம்**

வருமானப் பயணிகள் கிலோ மீற்றரொன்றிற்கான வருமானம் வருமானப் பயணிகள் கிலோ மீற்றருக்கான பயணிகள் கிலோ மீற்றருடன் தொடர்பானது

**அலகிற்கான செலவு**

அலகொன்றிற்கான செலவு கிடைக்கத்தக்க தொன் கிலோ மீற்றருக்கான பயணிகள் வருமானத்துடன் தொடர்புபட்டது.

**ஒட்டுமொத்த விளைவு**

ஒட்டுமொத்த விளைவு வருமான தொன் கிலோ மீற்றருக்கான தேறிய போக்குவரத்து வருமானத்துடன் தொடர்பானது.

தேறிய போக்குவரத்து வருமானமென்பது பயணிகள், மிகை பொதிக் கட்டணம், சரக்கு மற்றும் அஞ்சல் வருமானம் என்பனவற்றின் தொகையாகும்.

**இலாப நட்டமற்ற சுமைக் காரணி**

சுமைக் காரணியானது தொழிற்பாட்டு செலவுடன் கூடிய அட்டவணையிடப்பட்ட எயார்லையின்ஸின் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானத்தினை சமப்படுத்துவதனை தேவைப்படுத்துகிறது.

SriLankan

**கூட்டம் பற்றிய அறிவித்தல்**

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பங்குடமையாளர்களின் முப்பத்தைந்தாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் பின்வரும் நோக்கங்களுக்காக, **2013 செத்தெம்பர் 26ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு** பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7இல் அமைந்துள்ள **பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தின்** குழு அறை 'டி' இல் நடைபெறவுள்ளமை பற்றி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நிகழ்ச்சி நிரல்

1. 2013 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையினையும் நிதியியல் கூற்றுக்களையும் அவற்றுடன் உள்ள கணக்காய்வாளர் அறிக்கையினையும் பெற்று பரிசீலித்தல்.

2. ஏர்னஸ்ட் அன்ட் யங் அவர்களை கணக்காய்வாளர்களாக மீண்டும் நியமிப்பதற்கும் பணிப்பாளர்கள் அவர்களது ஊதியத்தினை நிர்ணயிப்பதற்கும் அதிகாரமளித்தல்.

**சபையின் கட்டளைப்படி**

ஒப்பம்

கம்பனி செயலாளர்
**மில்ட்ரெட் பீரிஸ்**

2013 யூலை 30
கட்டுநாயக்கா

**குறிப்பு:**

1. கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் உரித்துடைய உறுப்பினரொருவர் தனக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் பதிலாள் ஒருவரை நியமிக்க தகுதியுடையவராவர்.

2. பதிலாளொருவர் கம்பனியின் உறுப்பினராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

3. பதிலாளுக்கான படிவம் இவ்வறித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் பங்குடமையாளர்கள்/ பதிலாளர்கள் இவ்வறித்தலுடன் தங்களின் தேசிய அடையாள அட்டையினையும் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# பதிலாள்

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்

2013 செத்தெம்பா 26ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ள சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பங்குடமையாளர்களின் அதிவிசேட பொதுக்கூட்டத்திலும் அது தொடர்பான ஏதேனும் ஒத்திவைப்பிலும் எனது/ எங்களது சார்பாக என்னை/ எங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் எனது/ எங்களது சார்பாக பின்வரும் பணிப்பாளர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதற்கும் எனது/ எங்களது பதிலாளாக சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் உறுப்பினராக/ உறுப்பினர்களாக உள்ள ................................................ ................ என்ற முகவரியைச் சேர்ந்த .................................................................... ஆகிய நான் ................................................................................... .................................................. என்ற முகவரியைச் சேர்ந்த ................................................................................. என்பவரை அல்லது அவர் வரத் தவறுமிடத்து ...................................................... என்ற முகவரியைச் சேர்ந்த ....................................................................................................... ....... என்பவரை இத்தால் நியமிக்கின்றேன்.

பணிப்பாளர்கள்;

திரு. நிஷாந்த விக்கிரமசிங்க
திரு. நிஹால் ஜயமான ச.ச
திரு. கபில சந்திரசேன
திரு. சமீந்திர ராஜபக்ஷ
திரு. மணிலால் பர்னாந்து
திருமதி. லக்ஷ்மி சங்கக்கார
திரு. சனத் உக்வத்த
திரு. சுசந்த ரட்ணாயக்கா

இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு ............................... மாதம் ......................................... திகதி கையொப்பமிடப்பட்டது.

.........................................

கையொப்பம்

**குறிப்பு:**

சொற்கள் நீக்கப்படாதிருக்குமிடத்து அல்லது பதிலாளின் கருத்துப்படி பதிலாள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது பற்றி பதிலாளுக்கு சந்தேகம் தோன்றுமிடத்து (பதிலாள் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ள முறையின் காரணங்களின்படி) பதிலாள் பொருத்தமானது என அவர் நினைக்கும் விதத்தில் வாக்களிக்கலாம்.

## பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்:

1. பதிலாளுக்குரிய படிவத்தினை தெளிவான முறையில் உங்களின் முழுப் பெயரையும் முகவரியையும் நிரப்பிய பின்னர் கையொப்பத்திற்கென தரப்பட்டுள்ள இடத்தில் கையொப்பத்தினையும் திகதியினையும் இட்டு சரியாக பூரணப்படுத்திக் கொள்ளவும்.

2. வதிகின்ற/ வதிவற்ற பங்குடமையாளர்களைப் பொறுத்தவரையில், கம்பனிக்கு பதிலாளின் பூரணப்படுத்தப்பட்ட படிவத்தினை திருப்பி அனுப்பும் பொழுது முத்திரை பதிக்கப்பட்டிருப்பது கவனிக்கப்படும்.

3. பதிலாளின் பூரணப்படுத்தப்பட்ட படிவம் கீழேயுள்ள முகவரியில் அமைந்துள்ள கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில், கூட்டம் நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு குறைந்தது 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக கையளிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி

கம்பனிச் செயலாளர்
சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்
எயார்லையின்ஸ் சென்ரர்
பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம்
கட்டுநாயக்கா